# தமிழருவி

அருவி - 01



கட்டுரை
சிறுகதை

யா/தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகாவித்தியாலயம்

# தமிழருவி

## மாணவர் சஞ்சிகை

## 2009

### அருவி - 01

தமிழ்த் தரவட்டம்
யா/தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகாவித்தியாலயம்
தொண்டைமானாறு.

| | |
|---|---|
| இதழின் பெயர் | : தமிழருவி |
| இதழாசிரியர் | : செல்வி அஜந்தினி மகாதேவன் |
| துணை இதழாசிரியர் | : செல்வி அகிலா அகிலேந்திரா |
| எழுத்தமைப்பு, இதழ் வடிவமைப்பு | : திரு. ச. ராஜ்குமார் |
| அட்டைப்பட வடிவமைப்பு | : செல்லா வீடியோ விஷன்<br>நவிண்டில். |
| பக்கங்களின் எண்ணிக்கை | : 75 + xii |
| தாளின் தன்மை | : 70gsm தூய வெள்ளைத் தாள் |
| வெளியீடு | : தமிழ்த் தரவட்டம்<br>யா/ தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை ம. வி.,<br>தொண்டைமானாறு. |
| விலை | : 100/= |

# பாடசாலைக் கீதம்

வாழ்க நீ மாதா வளர்க நீ மாதா
ஆழ்கடல் மருவும் தொண்டைமானாற்று
மகா வித்தியாலயம் மாண்புடன் வாழ்க
வாழ்க நீ மாதா வளர்க நீ மாதா
(வாழ்க நீ...)

கலை விஞ்ஞானம் கைத்தொழில் வர்த்தகம்
கடற்றொழில் கமத்தொழில் ஆகியவெல்லாம்
மலையென வளர்ந்து மாநிலம் செழிக்க
ஞான ஒளியே நாடெங்கிடும் பரவிட
(வாழ்க நீ...)

அல்லும் பகலும் உனை நினைந்திடுவோம்
அன்னையே உந்தன் அடிபணிந்திடுவோம்
எல்லையிற் கல்வி எங்கட்கு மூட்டி
எம் வாழ்வு வளம்பெறச் செய்தருள்வாயே
(வாழ்க நீ...)

நாடு நலம்பெற நல்லோர் மலிந்திட
காடு கரம்பைகள் களனிகளாகிட
பாடும் பாவலர் பண்டிதர் மல்கிட
ஈடும் எடுப்பும் என்றென்றும் வாழிய
(வாழ்க நீ...)

சான்றோர் எனத்தகும் புதல்வரைப் பெற்று
சகல துறையிலும் துலங்கிடச் செய்து
ஈன்ற மைந்தனின் அன்பினைப் பெற்று
இன்பமாய் என்றென்றும் வாழிய வாழிய
(வாழ்க நீ...)

## மலர்க் குழு

செல்வி அஜந்தினி மகாதேவன் (இதழாசிரியர்)
செல்வி அகிலா அகிலேந்திரா (துணை இதழாசிரியர்)
செல்வன் குணபாலசிங்கம் சஞ்சீப்
செல்வன் மனோகரன் பிரசாத்
செல்வி ஜெயராதை கணேசலிங்கம்
செல்வி அகிதா ஆனந்தாஈஸ்வரன்
செல்வி ரவீந்திரராணி ரவிச்சந்திரன்



## பொறுப்பாசிரியர்கள்

திரு. கணேசபிள்ளை முருகமூர்த்தி
திரு. கிருஷ்ணபிள்ளை நவநீதன்
திரு. கதிர்காமத்தம்பி பொன்னம்பலம்
செல்வி விஜிகாந்தினி யூலியஸ்
திருமதி பாமினி வசிகரன்



## மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளரின் வாழ்த்துரை

தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகாவித்தியாலய மாணவர்களால் 'தமிழருவி' என்கின்ற இச்சஞ்சிகை வெளியிடப்படுவது மட்டற்ற மகிழ்ச்சியை தருகிறது. இப்பாடசாலையில் பல வருடங்களின் முன்பு 'கலை ஊற்று' என்கின்ற சஞ்சிகை வெளியிடப்பட்டிருந்தது. ஆனாலும் அது தொடர்ந்து வெளிவரவில்லை. நீண்டகாலங்களின் பின்னர் மீண்டும் இப்பாடசாலையில் சஞ்சிகை ஆக்கம் இடம்பெறுவது வரவேற்கத்தக்கது.

மாற்றமுறாத எதுவுமே வளர்ச்சியடைவதில்லை. மாற்றம் என்பது காலத்தின் நியதி. இன்று கற்றல், கற்பித்தற் செயற்பாடானது நவீனமயப்படுத்தப்பட்டு பல்துறைகளிலும் பரிணாமவளர்சி கண்டுவருகிறது. இந்நிலையில் மாணவர்களின் ஆக்கத்திறனையும், அதன் வெளிப்பாடுகளையும் பாடசாலையிலேயே வளர்க்கவேண்டிய தேவையுள்ளது. அந்தவகையில் இதுபோன்ற சஞ்சிகைகள் மாணவர்களின் ஆக்கத்திறனை வளப்படுத்தும் என்பதில் ஐயமில்லை.

'தமிழருவி' என்கின்ற இச் சஞ்சிகை மாணவர்களின் ஆக்கங்களையே தாங்கியிருப்பது போற்றுதற்குரியது. இன்று முகிழ்ப்பு நிலையில் இருக்கின்ற படைப்பாளிகள் நாளை முதிர்ச்சி நிலையினை நிச்சயம் அடைவார்கள்.

இலக்கிய வரலாற்றுப் போக்கையும் நோக்கையும் உணர்ந்து இதுபோன்ற பல சஞ்சிகைகள் தொடர்ந்தும் வெளிவர என்னுடைய மனமார்ந்த வாழ்த்துக்கள். தமிழருவி தொடர்ந்து பாய்ந்திடட்டும்.

**வே. தி. செல்வரத்தினம்**
மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்



## வலயக் கல்விப்பணிப்பாளரின்
## வாழ்த்துச் செய்தி

தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலய மாணவர்களின் ஆக்கங்களைத் தாங்கி வெளிவரும் 'தமிழருவி' சஞ்சிகைக்கு வாழ்த்துச்செய்து வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

நீண்டகாலத்திற்குப் பின்னர் இப்பாடசாலை மாணவர்களின் அயராத முயற்சியும் ஆசிரியர்களின் வழிகாட்டல்களுமே இச்சஞ்சிகை மலரக் காரணமாகும். மாணவர்களது தேடலையும் எழுத்தாக்கத் திறனையும் வளர்ப்பதற்கு இச்சஞ்சிகை வெளியீடு உதவுமென நம்புகிறேன்.

'தமிழருவி' சஞ்சிகையின் ஆக்கங்கள் யாவும் மாணவர்களது வெளிப்பாடாக இருப்பது வரவேற்கத்தக்க விடயமாகும். பல்துறை சார்ந்த விடயங்களை உள்ளடக்கி மலரும் தமிழருவி மாணவர் உள்ளங்களில் மணம் வீச வாழ்த்துகிறேன்.

**வ. செல்வராசா**
வலயக்கல்விப் பணிப்பாளர்,
வடமராட்சி.



## அதிபரின் வாழ்த்துச் செய்தி

எமது பாடசாலையில் வருடந்தோறும் மாணவர்களால் கையெழுத்துச் சஞ்சிகை வெளியிடப்படுவது ஒரு சாதாரண விடயமாகும். ஆயினும் சஞ்சிகைகள் அச்சுப்பிரதியூடாக வெளிவரவேண்டும் என்பது பலரதும் அவா. அந்தவகையில் இவ்வாண்டு தமிழருவி என்கின்ற பெயருடன் மாணவர் ஆக்கங்கள் அச்சுப்பிரதியாக வெளிவருவது மகிழ்ச்சியைத் தருகிறது.

எமது பாடசாலை மாணவர்கள் பல்வேறுபட்ட போட்டிகளில் தமது தனித்துவமான திறமையினை வெளிக்காட்டத் தவறுவதில்லை. ஆற்றல்கள் போட்டிகளோடு மட்டும் நின்றுவிடாது அவ்வாற்றல்களும் திறமைகளும் ஏனையவர்களையும் சென்றடைய வேண்டும். இச்சஞ்சிகையிலும் மாணவர்களின் தேடல்களையும் ஆக்கத்திறனையும் கண்டுகொள்ளலாம். இச்சஞ்சிகையில் வெளியிடப்பட்டுள்ள விடயங்கள் மாணவர்களுக்கு பெரிதும் பயன்தரத்தக்கன. ஆண்டுதோறும் தமிழருவி வெளிவந்திட வாழ்த்துகிறேன்.

**வ. கணேசமூர்த்தி**
அதிபர்

# பொறுப்பாசிரியர்களிடமிருந்து....

பாடசாலை கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை மேம்படுத்துவதற்கும், இடர்பாடுகளை இனம்கண்டு அவற்றிற்கு உகந்த தீர்வினை வழங்கி நன்னெறிப் படுத்துவதற்கும் உருவாக்கம் பெற்றதே 'தரவட்டம்' ஆகும். தமிழ்த் தரவட்டத்தின் செயற்பாடுகளின் வரிசையில் இச்சஞ்சிகை ஆக்கமும் ஒன்றாகும்.

இன்று மாணவர்களிடையே ஆக்கத்திறன் வெளிப்பாடானது மிகமிக அரிதாகவே உள்ளது. மாணவர்களின் ஆக்கத்திறனை வளர்க்கவும் மேம்படுத்தவும் இத்தமிழ்த் தரவட்டமானது பல செயலாற்றுகைகளை நிகழ்த்தியது. அந்தவகையில் மாணவர்களிடையே சுய ஆக்கத்திறனை வெளிக்கொணர்வதாக இச் சஞ்சிகை அமைகிறது. இது போன்ற சஞ்சிகைகள் முன்பு கையெழுத்துப் பிரதிகளாக மாத்திரம் வெளியிடப்பட்டிருந்தன. இவ்வாண்டு அச்சுப்பிரதியாக வண்ணமய வடிவில் வெளிவருவது மகிழ்ச்சிக்குரியது. இனிவரும் காலங்களிலும் தமிழ்த் தரவட்டம் தம்பணியினை செவ்வனே தொடரும். இவ்வருடத்திலிருந்து இதழ்கள் வருடந்தோறும் மலரும்.

தமிழ்த் தரவட்டம்



## இதழாசிரியரிடமிருந்து....

எமது பாடசாலையில் நீண்டகால இடைவெளிக்குப்பின் 'தமிழருவி' என்கின்ற இச்சஞ்சிகை வெளியாவது பெரும் மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். இப்பாடசாலையில் மாணவர் சஞ்சிகை கையெழுத்துப்பிரதிகளாக பல வெளிவந்துள்ளன. ஆனால் அச்சுப்பிரதியாக காலத்தின் தேவையறிந்து வெளிவருவது எம்போன்ற மாணவர்களுக்கு உற்சாகமளிப்பதாக அமையும்.

மாணவர்களுடைய தேடல்களின் வெளிப்பாட்டினையும் அவர்களுடைய ஆக்கத்திறனையும், அறிவியல் பார்வையினையும் இவ்விதழினூடாகக் கண்டுகொள்ளலாம். சஞ்சிகை ஆக்கத்திற்கு ஆக்கமும் ஊக்கமும்தந்த அனைத்து உள்ளங்களுக்கும் மனமார்ந்த நன்றிகள். மிகக் குறுகியகாலத்தில் இச்சஞ்சிகை மிக்க சிரமத்தின் மத்தியில் வெளிவருவது குறிப்பிடத்தக்கது. இதுபோன்ற இதழ்கள் இனிவரும் காலத்திலும் வெளிவரவேண்டும் என்பதே அனைவரதும் அவா. இவ் அவா செயல்வடிவம் பெற்றிட இறைவன் அருள்புரிவார்.

**அஜந்தினி மகாதேவன்**
இதழாசிரியர்

---



## துணை இதழாசிரியரிடமிருந்து....

எமது ஆற்றல்களின் ஊற்றாக, தென்றல் காற்றாக 'தமிழருவி' வெளிவருவது பெருமகிழ்ச்சியைத் தருகிறது.

பூமிக்கடியிலுள்ள தங்கத்தை தோண்டியெடுத்து விதவிதமான, அழகான ஆபரணங்களை உருவாக்குவதுபோல மாணவர்களிடம் மறைந்துள்ள ஆற்றல்களை நேர்த்தியாக வெளிக்கொணர்வதற்கு இச்சஞ்சிகை உதவியுள்ளது. இம்மாணவர்கள் எதிர்காலத்தில் எழுத்தாளர்களாக, கவிஞர்களாக பிரவாகிப்பதற்கான ஊற்றாக 'தமிழருவி' அமைந்துள்ளது. அவ் ஊற்றில் மெய்ப்பொருள் காண்போமாக.

**அகிலா அகிலேந்திரா**
துணை இதழாசிரியர்

# அருவியினுள்ளே....

பக்கம்


| | | |
|---|---|---|
| 01. | பூமி மனிதனுக்குச் சொந்தமில்லை | 1 |
| 02. | குழந்தையும் குணமும் | 3 |
| 03. | ஒரு டாக்டரின் கருத்து | 3 |
| 04. | சங்ககாலத் தமிழ் நூல்களும் ஆசிரியர்களும் | 4 |
| 05. | இயற்கை | 5 |
| 06. | விஞ்ஞானபாடமே எமக்கு அதிகம் பயனுள்ளதா? | 6 |
| 07. | விஞ்ஞான விடுகதைகள் | 7 |
| 08. | சங்கமருவியகால பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் | 8 |
| 09. | வாழ்க்கை வாழ்வதற்கே | 9 |
| 10. | நாட்டுப்புறவியலின் தோற்றமும் வளர்ச்சியும் | 11 |
| 11. | புகழ்பெற்ற உரையாசிரியர்கள் | 14 |
| 12. | சிந்தனைத் துளிகள் | 15 |
| 13. | நெருப்பாற்றின் நீளம் | 16 |
| 14. | இன்றைய உலகும் கணினியும் | 17 |
| 15. | தமிழ் இலக்கண நூல்களும் ஆசிரியர்களும் | 18 |
| 16. | ஆத்திரக்காரனுக்குப் புத்தி மத்திமம் | 19 |
| 17. | காப்பியங்களும் படைத்தோரும் | 21 |
| 18. | நான் விரும்பும் சமாதானம் | 22 |
| 19. | தமிழில் இணைய இதழ்கள் | 23 |
| 20. | இன்றைய உலகும் விஞ்ஞானமும் | 24 |
| 21. | ஈழத்து முன்னோடி நாவல்கள் | 26 |
| 22. | பெற்றமனம் பித்து பிள்ளைமனம் கல்லு | 28 |
| 23. | தகவல் ஒரு போதைப்பொருள் | 30 |
| 24. | விடாமுயற்சி | 32 |
| 25. | தமிழ்க் கவிதை வரலாற்றில் மஹாகவி பெறும் இடம் | 34 |
| 26. | என் செய்தாய்? | 36 |
| 27. | பயனுள்ள படிப்பிற்கான வழிமுறைகள் | 37 |

| | | |
|---|---|---|
| 28. | பல பொருள்தரும் சொற்கள் | 42 |
| 29. | தொடர் மொழிக்கு ஒரு மொழி | 43 |
| 30. | புலம்பெயர் இலக்கியம் | 45 |
| 31. | இலங்கைப் பேச்சுவழக்குச் சொற்களும் அவற்றின் பொருளும் | 49 |
| 32. | பெண்கள் எதிர்நோக்கும் சவால்கள் | 55 |
| 33. | நந்தவனம் | 57 |
| 34. | சொற்களுக்கு அப்பால் | 58 |
| 35. | கலைச் சொற்கள் | 61 |
| 36. | மாதங்கள் கூறும் பழமொழிகள் | 62 |
| 37. | தமிழில் காப்பியம் என்ற இலக்கிய வடிவம் தோன்றிய வரலாறு | 63 |
| 38. | புதிய பொருளாதார ஒழுங்கு எதிர்கால உலகத்தின் தேவை | 65 |
| 39. | மின் வலுவும் அதன் வரலாற்று ரீதியான வளர்ச்சியும் | 71 |
| 40. | நன்றியுரை | 75 |

# பூமி மனிதனுக்குச் சொந்தமில்லை

பூமியிலிருந்து பிறப்பெடுத்த மனிதன் இப்பூமியில் வாழ்ந்து மறுபடியும் பூமிக்கே இரையாகிறான். பிறப்பிற்கும் இறப்பிற்கும் நடுவிலே நிகழுகின்ற நாடகத்திற்கு மேடையே இப்பூமியாகும். ''வாழ்வாவது மாயம் மண்ணாவது திண்ணம்'' என்பதை உணர்ந்த மனிதர்கள் எத்தனைபேர் இருக்கிறார்கள்?

நீர்க் குமிழிபோலும் இவ்வாழ்க்கை நிலையானதென்று நம்பி மாறிவரும் உலகை மாறாது என்று நம்பி அழிகின்ற இந்த உடலை அழியாது என்று எண்ணி சிந்தனைச் சிறகடித்து கனவுகளால் கோட்டைகட்டி, கற்பனையால் காவலிட்டு வாழ்க்கையை நடாத்துகின்றனர். இது என்னுடைய வீடு, இது என்னுடைய மேடு, இது என்னுடைய நாடு, இது என்னுடைய நகரம் என்று உரிமை கொண்டாடுவோர் எத்தனைபேர்? ''நேற்றுளார் இன்றில்லை, இன்றுளார் நாளை மாள்வார்'' என்பதை எண்ணிக்கொள்ள எத்தனை உள்ளங்கள் தயாராக உள்ளன. ஆனால், மனிதன் காடுகளுக்கும் நாடுகளுக்கும் எல்லையிட்டு அரணமைத்து எதிரிவருவானா? கரைதொடுவானா? என வழிமேல் விழிவைத்து காத்திருக்கிறான். கேவலம்
''உறங்குவது போலும் சாக்காடு, உறங்கி விழிப்பது போலும் பிறப்பு'' என்ற இச்சூட்சுமமான வாழ்வை வாழ்வதற்கு இத்தனை பாடுகளா?

பூமியில் இருந்து பிறப்பெடுத்த மனிதன் வாழ்வாங்கு வாழ்வதற்கும், பூமி நிலைக்களனாக அமைவது என்பது உண்மைதான்; கருப்பையில் இருந்து பிறப்பெடுத்த பிள்ளையும் பூமியை முத்தமிட்டது முதல் இப்பூமிக்கும் மனிதனுக்கும் எத்தனை அத்தியந்தமான உறவு; சிற்றில் இழைத்து சிறுதேர் செய்து சிறுவர்களாகச் சிரித்து விளையாடியது இப்பூமியில் தான்; முற்றத்து மணல் பரப்பி மணலெல்லாம் சோறாக உடலெங்கும் சேறாக உணவாக்கி விளையாடியதும் இப்பூமியில்தான்; பள்ளிக்குச் சென்று பாடங்கள் படித்து பல்கலையும் கற்று பட்டாம்பூச்சிகளாய் பாடித்திரிந்ததும் இப்பூமியில்தான். தொழிற்சாலைகள் செய்தும் சாலைகள் வைத்தும் கோடிகள் கொடுத்து பெரு மாடிகள் நட்டும் கடலலை மீதினில் தாளங்கள் இட்டும் மண்ணைத் தாண்டி விண்ணைத் தொட்டும் கண்டங்கள் தாண்டி அண்டங்கள் தொட்டும் வாழ்வதற்கு இப்பூமியே முதன்மையாகிறது.

நிலத்தாலும், நீராலும், காற்றாலும், தீயாலும், வான்வெளியாலும் உருவாகிய இப்பூமியை எண்ணிலடங்கா ஜீவராசிகள் வாழ்கின்றன. உயிரினங்கள் யாவற்றிற்கும் உறைவிடம் உண்டு என்பதும் உண்மைதான். பறவைகள் கூட்டிலும் விலங்குகள் காட்டிலும் மீனினங்கள் நீரிலும் உறைவிடம் அமைத்தாலும் அவைகளுக்கு எல்லைகள் கிடையாது. கண்டங்கள் விட்டு பறவைகள் நகர்வதில்லையா? காடுகள் யாவிலும் விலங்குகள் திரிவதில்லையா? கடல்கள் தாண்டி மீனினங்கள் வாழ்வதில்லையா? விலங்குகள் பறவைகளுக்கு இருக்கக்கூடிய மகோன்னதமான குணம் கேவலம் ஆறறிவு படைத்த மனிதனுக்கு இல்லை. ''யாதும் ஊரே யாவரும் கேளிர்'' என்ற வாசகங்கள் இலக்கியங்களில் மட்டும்தான். கேவலம் ஒருதாய் வயிற்றில் பிறந்த பிள்ளைகளே சொத்தென்றும் உரிமை என்றும் கூறி சண்டையிடுகின்றனர்.

இப்பூமி கணத்திற்கு கணம் ''மனிதா நீயே எனக்குச் சொந்தம்'' என்பதை பலவழிகளில் சொல்லி வைக்கிறது. ஆனால், அதை மனிதன்தான் உணர்ந்து கொள்கின்றான் இல்லை.

கடற்பேரலைகளினாலும், பூகம்பங்களினாலும், புயல்களினாலும் எரிமலைக் குமுறல்களினாலும் எத்தனை எத்தனை உயிர்கள் நாளும் பொழுதும் மாள்கின்றன. இதைக் கண்டும் கேட்டும் மனிதன் இன்னும்தான் உணர்ந்துகொண்டானில்லை. அது மட்டுமா பூமியானது தன்னைத்தானே சுற்றி, இரவு பகலை உண்டாக்குகின்றது. சூரிய உதயமும் அதன் அஸ்தமனமும் மனித வாழ்வின் பிறப்பும் இறப்பும் என்பதை நாம் உணர்ந்திருக்கின்றோமா?

''உன்னுடையது எதை நீ இழந்தாய்
எதற்காக நீ அழுகிறாய்
எதை நீ எடுத்துக்கொண்டாயோ
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது
எது இன்று உன்னுடையதோ
அது நாளை மற்றொருவனுடையதாகின்றது
இந்த மாற்றம் உலக நியதி ஆகும்''

கண்ணன் அன்று கூறிய வார்த்தையின் சாராம்சம் பூமி மனிதனுக்குச் சொந்தமல்ல என்பதற்கு மிகுந்த சான்றாகும்.

முட்டை அதனை இட்ட கோழிக்குச் சொந்தமல்லவா? மான் குட்டி அதனை ஈன்ற மானுக்குச் சொந்தமல்லவா? பிள்ளைகள் அவர்களைப் பெற்றெடுத்த பெற்றோருக்குச் சொந்தமல்லவா? மனிதன் பூமியில் சொந்தம் கொண்டாட பூமி அவன் இட்டுவைத்த முட்டையா? அல்லது ஈன்றெடுத்த குட்டியா?

நாள் தோறும் நம் வீட்டிற்கும் நாட்டிற்கும் உறவுமுறை சொல்லி எத்தனை சொந்தங்கள் வந்து போகின்றார்கள். அவர்கள் எல்லாம் உறவுக்காரர்கள். நாங்களும் இப்பூமியில் வாழ்ந்த உறவுக்காரர்களே அன்றி சொந்தக்காரர்கள் அல்ல. வைரங்கள், இரத்தினங்கள், மாணிக்கங்கள் என்பவற்றை மண்ணிலிருந்து எடுக்கும் மனிதன் அதனைப் பட்டைதீட்டி ஜொலிக்கவைக்க முடிகிறதே தவிர அதனை அவனால் உருவாக்க முடிகிறதா? பூமியையும் மனிதன் தன் திறமையால் அழகாக்கினானே தவிர அதனை அவன் உருவாக்கிவிடவில்லை.

மனிதன் பிறக்கும்பொழுது மட்டுமல்ல இறக்கும்பொழுது கூட பூமி மனிதனுக்குச் சொந்தமல்ல. மனிதனே பூமிக்குச் சொந்தமாவான். ''ஆடி அடங்கும் வாழ்க்கையடா இங்கு ஆறடி நிலமே சொந்தமடா'' என்று கூறினாலும் கூட ஆறடி நிலத்தில் புதைக்கப்பட்ட மனிதன் வெறும் ஆறே மாதங்களில் உடலம் புதைக்கப்பட்ட இடம் தெரியாது மண்ணோடு மண்ணாகி விடுகின்றான் அல்லவா?

நாம் இனியேனும் பூமி மனிதனுக்குச் சொந்தமில்லை என்பதை உணர்ந்து இப்பூசல்களை மறந்து இன, மத, மொழி வேறுபாடின்றி ஒரு தாய்வயிற்றுப் பிள்ளைகளாய் வாழ்வோம். போராட்டங்கள் அற்ற புதுயுகம் படைப்போம். பருந்தும் கிளியும் ஒரு கூட்டில் சிறகடிக்க மானும் புலியும் ஒரு துறையில் நீரருந்த பாம்பும் கீரியும் ஒரே புற்றில் வாழ்ந்திடும்படியான உன்னதமான வாழ்வை வாழ்வோம்.

ஆக்கம்
செல்வி மகாதேவன் அஜந்தினி
உயர்தரம் 2009 கலை

# குழந்தையும் குணமும்

குழந்தைகள் வளரும் சூழ்நிலைக்கேற்ப அதன் குணங்களும் அமையும்
குறைகூறி வளர்க்கும் குழந்தை வெறுப்பைக் கற்றுக் கொள்ளும்
அடக்கி வளர்க்கப்படும் குழந்தை சண்டையிடக் கற்றுக் கொள்ளும்
கேலி செய்யப்படும் குழந்தை வெட்கத்தோடு வாழ்கின்றது
அவமானப்படுத்தப்படும் குழந்தை குற்றவாளியாகிறது
சகிப்போடு வாழும் குழந்தை பொறுமையைக் கடைப்பிடிக்கும்
ஊக்குவிக்கப்படும் குழந்தை மனத்திண்மை பெறுகின்றது
புகழப்படும் குழந்தை பிறரை மெச்சக் கற்றுக்கொள்ளும்
நேர்மையாக வளரும் குழந்தை நியாயத்தைக் கற்றுக் கொள்ளும்
பாதுகாப்பாக வளர்க்கப்படும் குழந்தை நம்பிக்கை பெறுகிறது
நட்போடு வளரும் குழந்தை உலகத்தை நேசிக்கிறது

ஆக்கம்
செல்வி தீபிகா சோதிலிங்கம்
உயர்தரம் 2010 கலை

---

# ஒரு டாக்டரின் கருத்து

மனிதன் சிரிக்கிறான் என்றால் நோய் இளைப்பாறுகிறது என்று பொருள்
அழுகிறான் என்றால் நோய் சுறுசுறுப்படைகிறது என்று பொருள்
முனகுகிறான் என்றால் நோய் எழுந்து உட்கார்ந்து விட்டது என்று பொருள்
கூப்பாடு போடுகிறான் என்றால் நோய் நாட்டியம் ஆடுகிறது என்று பொருள்
மனிதன் அமைதியாகி விட்டான் என்றால் நோய் அவனை வென்றுவிட்டது என்று பொருள்

ஆக்கம்
செல்வன் சச்சிதானந்தம் இந்துஜன்
தரம் 10 பி

''ஒருவன் ஒன்றை உண்மையேயென்று ஆராய்ந்து உறுதி செய்து விட்டால் அதைச்செய்து முடிக்கும் ஆற்றல் அவனுக்கு ஏற்பட்டு விடும்''

*கெதே*

# சங்ககால தமிழ் நூல்களும் ஆசிரியர்களும்

## எட்டுத்தொகை நூல்கள்

நற்றிணை - பன்னாடு தந்த பாண்டியன் மாறன் வழுதி

குறுந்தொகை - பூரிக்கோ

ஐங்குறுநூறு - குறிஞ்சித்திணை - கபிலர்

பாலைத்திணை - ஓதலாந்தையர்

முல்லைத்திணை - சோழன் நல்லுருத்திரன்

மருதத்திணை - மருதன் இளநாகன்

நெய்தல் திணை - நல்லந்துவனார்

பாலைத்திணை - பெருங்கடுங்கோ

பதிற்றுப்பத்து - ஆசிரியர் அறியப்படவில்லை

புறநானூறு - பலரது பாடல் தொகுப்பு

பரிபாடல் - ஆசிரியர் அறியப்படவில்லை

## பத்துப்பாட்டு நூல்கள்

திருமுருகாற்றுப்படை - நக்கீரர்

பொருநராற்றுப்படை - முடத்தாமக்கண்ணியார்

சிறுபாணாற்றுப்படை - நல்லூர் நந்தத்தனார்

பெரும்பாணாற்றுப்படை - கடியலூர் உருத்திரங்கண்ணனார்

மலைபடுகடாம் அல்லது கூத்தராற்றுப்படை - இரணியமுட்டத்துப் பெருங்கௌசிகனார்

குறிஞ்சிப்பாட்டு - கபிலர்

பட்டினப்பாலை - கடியலூர் உருத்திரங்கண்ணனார்

முல்லைப்பாட்டு - நப்பூதனார்

நெடுநெல்வாடை - நக்கீரர்

மதுரைக்காஞ்சி - மாங்குடி மருதனார்

ஆக்கம்
செல்வி நிதர்சினி தங்கராசா
தரம் 9 பி

''ஒரு மனிதன் கற்காமல் இருப்பதை விடப் பிறக்காமல் இருப்பதே மேல். ஏனெனில் பெரும் துன்பங்கள் துயரங்களுக்கு அறியாமையே காரணமாகும்''

*பிளேட்டோ*

# இயற்கை

இயற்கையுடன் ஒரு நிமிடம்
இயற்கையுடன் ஒரு நிமிடம்

காலம் காலமாக இருப்பது இயற்கை
அதை அழிக்காமல் பாதுகாப்பது எமது கடமை

உலகெங்கும் நிறைந்திருப்பதும் இயற்கை
எம்மை ரசிக்க வைப்பதும் இயற்கை

மலைகளிலும் காடுகளிலுமுள்ளது இயற்கை
மான் மரைகளிலுமுள்ள புள்ளி கூட இயற்கை

தென்றல் காற்று தினம் எம்மை நாடிவருவது கூட இயற்கை
சூரியன் காலையிலே தன் பொற்கதிர்களை நீட்டுவது கூட இயற்கை

பூக்கள் பூத்திருப்பதும் இயற்கை
அதை ரசிப்பது கூட இயற்கை

இரவிலே வானத்திலுள்ள நட்சத்திரங்கள் கூட இயற்கை
இசைபாடும் கடலலை கூட இயற்கை

எத்தனை கோடி இன்பங்களைத்தரும் இயற்கை
என்றென்றும் அழியாமல் பாதுகாப்போமாக

ஆக்கம்
செல்வி ஸ்ரீலக்சனா ஸ்ரீகாந்தன்
தரம் 11 பி



# விஞ்ஞான பாடமே எமக்கு அதிகம் பயனுள்ளதா?

இன்று இடைநிலை வகுப்புக்களிலிருந்து விஞ்ஞானம் கலை வர்த்தகம் என்ற முப்பிரிவுகளாகப் பாடங்களைக் கற்பிக்கும் வழக்கம் இருந்து வருகின்றது கணிதம் உயிரியல் பௌதிகம் இரசாயனம் முதலான பாடங்கள் விஞ்ஞான பாடங்களாகக் கொள்ளப்படுகின்றன. மொழி இலக்கியம் சமூகவியல் என்பன கலைத்துறைப்பாடங்களாகக் கொள்ளப்படுகின்றன. வர்த்தகம் கணக்கியல் என்பன வர்த்தகப் பாடங்களுள் அடங்குகின்றன. இவற்றுள்ளே விஞ்ஞான பாடங்களே எமக்கு அதிகம் பயனுள்ளன என்ற பொதுவான கருத்து நிலவுகின்றது.

விஞ்ஞான கணித பாடங்களைக் கற்று அவற்றிலே திறமை படைத்து விளங்குவோர் பெரும்பாலும் கூடிய விவேகிகளாகக் காணப்படுவதாலும் இன்றைய உலகமே விஞ்ஞான உலகமாக விளங்குவதாலும் விஞ்ஞான பாடங்களுக்கு யாவரும் கூடிய மதிப்பு அளிக்கின்றனர் என்பது உண்மையே. பரிசோதனை வெளிப்படை உண்மை பகுத்துணர்தல் ஏன்பவற்றிற்கு அதிகம் இடம் அளிப்பது விஞ்ஞானமே பெரும்பாலான உண்மைகள் நேரடியான ஆய்வுக்குட்படுத்திப் பெறுபேறுகளை உடனடியாகப் பெறக்கூடியதாக இருப்பதாலும் விஞ்ஞானம் கூடிய மகத்துவம் உடையதாகின்றது.

இன்று இலங்கையிலே விஞ்ஞானம் கணிதம் ஆகிய பாடங்களைக் கற்பவர்கள் வைத்தியராகவோ பொறியியலாளராகவோ விஞ்ஞான ஆய்வாளராகவோ குறைந்த பட்சம் விஞ்ஞான ஆசிரியராகவோ வருவதற்கு வாய்ப்புண்டு.இப்பாடங்களின் மூலம் பட்டம் பெற்றவர்கள் கூடிய சம்பளம் சமூக அந்தஸ்தும் பொருளாதார அபிவிருத்திக்கான வாய்ப்புக்களையும் கலை வர்த்தகப்பிரிவினராலும் அதிகமாகப் பெறுவது உண்மையே ஆனால் இன்று வரை எம்நாட்டில் புகழ் பெற்ற நோபல்பரிசு பெற்ற மாபெரும் விஞ்ஞானிகள் என்று தோன்றியவர்கள் இல்லையென்றே கூறிவிடலாம். ஒரு சிலர் வெளிநாட்டு ஆய்வு நிலையங்களிலே பேராசிரியர்களாகவும் விரிவுரையாளர்களாகப் பணிபுரிவதாலும் நாம் உலக விஞ்ஞானிகளின் தரத்தை அடைந்து விட்டோம் என்று மனப்பால் குடிப்பது தவறு.

வாழ்க்கைக்கு அடிப்படையாக வேண்டிய சில பௌதீக விதிகளையும் கணித உண்மைகளையும் சிந்திக்கும் திறனையும் விவேகத்துடன் செயலாற்றும் வன்மையும்சமுதாயத்துக்குப் பயன்தரும் தகுதியையும் விஞ்ஞானம் மூலம் நாம் பெறுவதோடு எமது வாழ்க்கை முழுமையடைவதில்லை என்பதை நாம் மறந்துவிடலாகாது.

விஞ்ஞானம் அளவு கலைப்பாடங்களும் வர்த்தகப்பாடங்களும் எங்களுக்குப் பயன்தருகின்றன என்பதை நாம் பாரபட்சமற்ற சமநிலையில் ஆராய்வதின் மூலம் அறிந்து கொள்ளலாம் . கலைப்பாடங்கள் மொழித்திறனை வளர்க்க உதவுகின்றன. வாழ்க்கைக்கும் கலாசார வளர்ச்சிக்கும் வேண்டிய விழுமியங்களை உருவாக்கத் துணைபுரிகின்றன. வர்த்தகக் கல்வியால் பொருளாதார அளவால் தனிமனிதனின் செல்வ அபிவிருத்திக்கு மட்டுமன்றி நாட்டின் அபிவிருத்திக்கும் உதவமுடியும் என்பதை மறந்துவிடலாகாது.

நாட்டாட்சித்துறையில் பெரும்பதவி வகிப்போர் நியாயவாதிகள் அரசியல்வாதிகள், சிறந்த பேச்சாளர்கள், கலைஞர்கள், எழுத்தாளர்கள, பொருளாதார நிபுணர்கள், சமூகப்பணியாளர்கள், தலைவர்கள் ஆகிய பலரும் கலைப்பாடங்கள் கற்றவர்களே என்பதை மறுத்தல் இயலுமா? எனவே விஞ்ஞானமா? கலையா வர்த்தகமா? என்பதல்ல பிரச்சினை எல்லாம் எமக்கு வேண்டுவனவே அவ்வத்துறையிலே திறமையுடையவராக அயராது பாடுபட்டு உழைப்பதன் மூலம் எமக்கும் சமுதாயத்திற்கும் நாம் பயன்படலாம் என்பதை உணர்வோம். விஞ்ஞானமே அதிக பயன் தரும் என்ற மாயையிலிருந்து விடுபடுவோம். இதுவே விவேகமாகும்.

ஆக்கம்
செல்வி யோதினி யோகநாதன்
தரம் 11 ஏ

# விஞ்ஞான விடுகதைகள்

- நாம் மனிதனாக இருந்தாலும் இரத்த ஓட்டம் இல்லை எல்லோருக்கும் நண்பன் எனக்கு சுவாசம் இல்லை நான் யார்?

  *இயந்திர மனிதன்*

- ஆயிரம் பேரையும் ஒரு புள்ளியில் சேர்ப்பான் அதிக சூட்டையும் ஆக்கிக்கொடுப்பான் பொய்யில்லை பொருளை பெரிதாக்கிக் காட்டுவான் இது என்ன ?

  *பூதக்கண்ணாடி*

- உணவுக்கு சுவை உண்டாக்குவேன் ஆனால் உப்பு இல்லை நான் ஊருக்கும் அழிவு செய்வேன் என் மேல் தப்பில்லை நீர் முன்னே அடங்கிப் போவேன் நான் யார்?

  *தீ*

- தரைமீது அடித்த பந்து தாவி மேலே எழுவதேன்?

  *மறுதாக்கம் நியூட்டனின் மூன்றாம் விதி*

- உடைந்தது போல் குச்சி தோன்றும் ஆனால் உடைந்திருப்பதில்லை மேலே வந்தது போல் தோன்றும் அடியில் தான் இருக்கும் ஒளி செய்யும் விந்தை அது என்ன?

  *ஒளிமுறிவு*

- இந்த மழை பெய்தால் எல்லோருக்கும் தீமை எந்த மழை என்று எடுத்துச் சொல்லுங்கள்?

  *அமில மழை*

- வானத்திலே ஏவுவேன் அம்பு போல் பாய்வேன் விண் பயணம் வெற்றி பெற விளங்குவேன் நான் யார்?

  *ஏவுகணை*

- சுருண்ட முடியில்லை சுற்றுவது இராட்டினம் இல்லை இழுத்தால் வரும் விட்டால் சென்று விடும் இது என்ன ?

  *சுருள் (ஸ்பிரிங்)*

- ஆளுக்கொரு அடையாளம் இதுவே இவளது பிராணம் அது என்ன?

  *கைரேகை*

- ஆடாமல் அசையாமல் இருந்தாலும் துன்பம். ஆடியே விரைவாக வந்தாலும் துன்பம். நான் இல்லாமல் போய்விட்டாலும் புல்பூண்டும் இல்லை நான் யார்?

  *காற்று*

ஆக்கம்
செல்வி லக்கீதா விஜயரட்ணம்
தரம் 11 பி

# சங்கமருவிய கால பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள்

திருக்குறள் - திருவள்ளுவர்

நாலடியார் - சமண முனிவர்கள்

நான்மணிக்கடிகை - விளம்பி நாகனார்

இன்னாநாற்பது - கபிலர்

இனியவை நாற்பது - பூதஞ்சேந்தனார்

திரிகடுகம் - நல்லாதனார்

ஆசாரக்கோவை - பெருவாயின் முள்ளியார்

பழமொழி நானூறு - முன்றுறையரையனார்

சிறுபஞ்சமூலம் - காரியாசான்

ஏலாதி - கணிமேதாவியார்

முதுமொழிக்காஞ்சி - மதுரைக்கூடலூர் கிழார்

ஐந்திணைஐம்பது - மாறன் பொறையனார்

திணைமொழி ஐம்பது - கண்ணன் சேந்தனார்

ஐந்திணை எழுபது - மூவாதியார்

திணைமாலை நூற்றைம்பது - கணிமேதாவியார்

கைந்நிலை - புல்லங்காடனார்

கார் நாற்பது - மதுரைக்கண்ணன் கூத்தனார்

களவழி நாற்பது - பொய்கையார்

ஆக்கம்
செல்வி கௌசிகா அமிர்தராசா
உயர்தரம் 2011 கலை

''அச்சமே முதன்மையான தீமை. ஏனெனில் அச்சத்திலிருந்து பூசலும் பலாத்காரமும் தோன்றுகின்றன. பலாத்காரம் பயத்தின் விளைவு. அதே போலத்தான் பொய்யும்''

*ஜவகர்லால் நேரு.*

''மனநிறைவு என்பது இயற்கையாகவே எம்மிடம் உள்ள செல்வம். ஆடம்பரம் என்பது நாமே தேடிக்கொள்ளும் வறுமை''

*சாக்கிரட்டீஸ்.*

''எண்ணம், செயல், பேச்சு இந்த மூன்றிலும் சத்தியத்தைப் பின்பற்றுபவனே எல்லாம் அறிந்த ஞானி.

*காந்திஜி*

# வாழ்க்கை வாழ்வதற்கே

பொழுது விடிவதற்கு இன்னும் சிறிது நேரம் உள்ளது வீட்டின் கூரையின் சிறு இடைவெளிகளில் வெளிச்சம் கசியத் தொடங்கியது.மீனாட்சி புரண்டு படுத்து அருகில் படுத்திருக்கும் தனது மகனை நோக்கினாள். பாயின் மேலும் நிலத்திலுமாக படுத்திருந்தான். எந்தவித கவலையுமின்றி உறங்கும் அவன் முகத்தையே பார்த்திருந்தாள்.

எல்லாருடைய வாழ்க்கையிலும் குழந்தைப்பருவமே சிறந்தது.மனதில் கள்ளம்கபடம் இல்லாமல் நாளைய பொழுது பற்றிய சிந்தனை எதுவும் இல்லாமல் காலையில் மற்றைய சிறுவர்களுடன் விளையாடும் அந்த நினைப்பு மட்டுமே வியாபித்திருக்கும். வளர்ந்துவிட்டாலேயே பிரச்சினைகளும் கூடவே வளர்ந்து விடும்.

சட்டென அவளுக்கு நடைமுறை உலகு அழைத்தது. குருவிக்கூட்டங்கள் எழுப்பிய ஒலி பொழுது புலர்ந்து விட்டது என்று கட்டியம் கூறியது. சுட்டென எழுந்து வெளியே வந்து கைவிளக்குமாற்றை எடுத்து நிலத்தை துப்புரவு செய்துவிட்டு கிணற்றிலிருந்து நீரை வாளிகளில் நிரப்பினார்.

இன்று அவள் கூலிவேலைக்குச் செல்ல முடியாது ஏனெனில் அவளின் கணவன் இறந்த தினம் தன்னால் முடிந்ததை செய்து படைத்து தானும் மகனும் உண்பது வழக்கம் மகனை எழுப்பி முகம் கழுவி வெறும் தேநீரை சர்க்கரையுடன் குடித்துவிட்டு வீட்டைக் கூட்டி மண்நிலத்தை சாணியிட்டு மெழுகினார். கைகள் வேலைசெய்துகொண்டிருந்தாலும் மனம் பழைய கடந்தகால நினைவுகளில் மூழ்கிப்போனது.

அவளது கணவன் இருந்தவரை அவள் வேலைக்குச் சென்றதில்லை. கூலிவேலை செய்தாலும் அவளை எந்தவித குறையுமின்றியே பார்த்தான். மகன் பிறந்ததும் இருவருக்கும் பெரும் சந்தோசம் காலம் யாருக்காகவும் நிற்காது ஓடிக்கொண்டிருந்தது.

அன்றும் காலையில் வேலைக்குப் போனவனின் உயிரற்ற உடலே வீட்டிற்கு வந்து சேர்ந்தது. கண்மூடித்திறப்பதற்குள் எல்லாமே முடிந்துவிட்டது. நெஞ்சுவலி என்று வீழ்ந்தவன் எழுந்திருக்காமலேயே போய்விட்டான். மீனாட்சிக்கு கண்ணைக்கட்டி காட்டில் விட்டது போன்ற ஒருவித திகைப்பு போதாக்குறைக்கு ஆதரவு என்று எவரும் இல்லை இனித்தன்மகனுடன் என்ன செய்யப்போகிறேனோவென மூளை இயங்க மறுத்தது. ஒரு மாதிரியாக தன்னை ஆசுவாசப்படுத்தி உலக நடைமுறைக்கு வர எத்தனையோ மாதங்கள் ஓடிவிட்டன.

இப்பொழுது அவளுக்கு எப்படியும் வாழவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. தானே கூலிக்கு உழைக்க வேண்டி புறப்பட்டு விட்டாள்.

இன்று கணவரின் இறந்த தினம் பானையில் இருந்த அரிசியைக் கொட்டிப்பார்த்தார். இருவருக்கும் ஓரளவு போதும். நேற்றைய தினம் வேலை எதுவும் இருக்கவில்லை பக்கத்து வீட்டில் அளவுடன் அரிசியை வாங்கியவள் வேலை செய்தால்தான் அதை திருப்பிக் கொடுக்க முடியும்.

தோய்ந்து மகனுக்கும் தலை துடைத்து இருந்த அரிசியை கொதிக்கும் உலையில் போட்டு ஏதாவது மரக்கறி பார்க்கலாம் என்ற போது எதுவும் கிடைக்கவில்லை. பரவாயில்லை என்று தனக்குத்தானே சமாதானம் கூறி மரத்திலிருந்த அந்த ஒரு முருங்கைக்காய் எடுத்து ஒரு கறி சமைத்து இலையில் சோற்றைப்போட்டு அதன்மேல் முருங்கைக்காய் கறியை ஊற்றி படைத்தார். மகனுக்கும் ஒரேபசி தாய் செய்வதையே கண்வெட்டாது பார்த்தான். சோற்றில் கறி அவனது பசியை மேலும் கூட்டியது. அப்போதுதான் அயல்வீட்டுக்காரி மீனாட்சியை அழைத்தார்.
என்னவென்று கேட்க வெளியே சென்ற போது தான் முதல்நாள் வாங்கிய அரிசியை அப்போதே வேண்டும் எனக்கேட்டார். மீனாட்சியும் தான் வேலைக்குப் போனால் நிச்சயமாக தருகிறேன் என்று எவ்வளவு கூறினாலும் தர்க்கம் சண்டையில் முடிந்தது.

தன் இயலாத நிலையை எண்ணியவள் கண்களில் பொலபொலவென கண்ணீர் கொட்டியது. தன் கணவன் இருந்திருந்தால் இந் நிலைமை வந்திருக்குமா கடவுள் முன் அமர்ந்து அழும்தாயை ஏதும் விளங்காது பார்த்துக் கொண்டிருந்தான் மகன்.

அம்மா ஏன் அழுகுறா என்று அவனது பிஞ்சு மனதுக்கு புரியவில்லை. ஏதோ சண்டை என்று புரிந்தது. தாயின் மடியில் அமர்ந்து அம்மா எனக்குப் பசிக்கிறது எப்போது சாப்பிடலாம் என்று தாயின் கன்னத்தை கைகளினால் தடவினான் ஏனம்மா அழுகிறீர்கள்? அவளது கவலைகளை எப்படி அந்த பிஞ்சுமனசிற்கு புரியவைக்கமுடியும் காலம்தான் நிச்சயம் ஒரு நாள் மாறும் தன் மகனால் மறுபடி தன் வாழ்வு நிமிரும் என்று தனக்குத்தானே சமாதானம் செய்து கொண்டு கண்களைத் துடைத்து எழுந்து சென்று மகனுடைய உணவைப் போடத்தொடங்கினாள். காலம்தான் அவள் மனதிற்கு மருந்தாகலாம்.

ஆக்கம்
**செல்வி அர்ச்சனா சுப்பையா**
தரம் 10 ஏ

''கடின உழைப்பிற்கு நிகர் ஏதும் இல்லை''

*மகாத்மா காந்தி*

''அவர்களால் முடியும் ஏனென்றால் அவர்கள் தங்களால் முடியும் என்று நினைக்கிறார்கள்''
*வெர்ஷில்*

''தன் நம்பிக்கை, தெளிவு, துணிச்சல் இந்த மூன்றும் தான் ஒருவனை எப்போதும் காப்பாற்றி வழி நடத்திச் செல்லும்''*கண்*

*.:பூஷியால்*

# நாட்டுப்புறவியலின் தோற்றமும் வளர்ச்சியும்

மனித இனம் தோன்றிய காலத்திலேயே நாட்டுப்புற இலக்கியங்களும் தோன்றிவிட்டன எனக் கருத இடமுண்டு. மொழியின் தோற்றம் உருவான போது மனித இனம் தன் சிந்தனைத்திறனை வளர்க்க முற்பட்டது. அவ்வாறு வளர்க்க முற்பட்ட போது வாய்மொழி இலக்கிய வகை கருக்கொண்டது எனலாம். உலகிலுள்ள அனைத்து இனங்களிலும் வாய்மொழி இலக்கியங்களைக் காணலாம்.

ஆரம்பத்தில் மரபுவழிப்பட்ட சமுதாயங்களிலே மக்கள் நாட்டார் வழக்கியலை வாழ்க்கையினின்றும் வேறுபடுத்திப் பார்த்ததில்லை. அதனை ஆய்விற்குரிய தனிப்பொருளாகக் கருதுவதுமில்லை. கடந்த இருநூற்றாண்டு காலமாகவே உலகின் பல பகுதிகளில் நாட்டார் வழக்கியல் புறநிலையில் வைத்து ஆராயப்படும் நிலையை அடைந்துள்ளது.

ஆரம்பத்தில் மனிதர்கள் தம் சமுதாயத்தை விட்டு பிற சமுதாயத்தவரோடு ஊடாடிப்பழகும் போது அங்கு காணப்படும் வழக்கியல் வேறுபாடுகளை அவதானிக்கும் வாய்ப்பைப் பெற்றனர். இவ்வாறு பல சமுதாயத்தவரோடு பிரயாணிகளாக, யாத்திரீகர்களாக, தூதுவர்களாக, சென்று வாழ்ந்தவர்கள் எழுதிய குறிப்புக்கள் பிற்காலத்தில் நாட்டார் வழக்கியல் என வழங்கும் துறைக்கு பெரிதும் உதவின.

ஆரம்பத்தில் நாட்டார் வழக்கியல் ஆய்வானது வசதி படைத்த கனவான்களின் ஆய்வாகவே விளங்கியது. நமது நாட்டைப் பொறுத்த வரையில் சென்ற நூற்றாண்டின் நடுப்பகுதியிலிருந்தே நாட்டார் வழக்கியல் ஆய்வுகள் முளைவிடத்தொடங்கின.

ஐரோப்பியாவிலே 18 ம் நூற்றாண்டில் முகிழ்ந்த மானிடவியலின் ஒரு பகுதியாகவே நாட்டார் வழக்கியல் செழித்து வளர்ந்தது. ஆய்வினும் 19 ம் நூற்றாண்டிலே அது தனித்துவமான ஆய்வுத்துறையாக இறுதி வடிவம் பெற்றது.

இலங்கையைப் பொறுத்தவரையில் தொடக்க காலத்தில் ஆங்கிலேய மிஷனரிமாரும் துரைத்தன உத்தியோகத்தர்களும் அவ்வப்போது எழுதிய குறிப்புக்களைத் தொடர்ந்து இலங்கைத் தமிழர் சிலர் அத்துறையில் அக்கறை கொள்ளலாயினர். பல்வேறுபட்ட அறிஞர்களாலும் ஆய்வாளர்களாலும் முன்னெடுக்கப்பட்டு இன்று நாட்டார் வழக்கியல் எனும் பயில்துறை பாடசாலைகளில் அறிமுகப்படுத்தப்பட்டதுடன் பல்கலைக்கழகங்களில் பயில்துறையாகவும் ஆய்வுத்துறையாகவும் பரிணமித்துள்ளது.

நாட்டுப்புறவியல் ஆய்வு தேவையானதா? எனும் வினாவிற்கு விடையிருப்பதாக அமைவதனூடாக நாட்டுப்புறவியலின் முக்கியத்துவம் உணரப்படும்.

**அ) ஒரு இனம் தனது இருப்பினை வரலாற்றை அறிந்து கொள்வதற்கான சாத்தியப்பாட்டினை அறிய உதவும்**

செந்நெறி இலக்கியத்திலிருந்து முழுமையாக நுண்மையாக அறிய முடியாது. காரணம் பலவுள. செந்நெறி இலக்கியம் மொழிவளர்ச்சி பெற்ற பின்பே திட்டப்பாங்கினை அறிந்த பின்பே அறிய முடியும் ஆனால் நாட்டுப்புறவியலைப் பொறுத்தவரை உணர்வே முக்கியமானதாகக் கருதப்படுகிறது. இதனால் செந்நெறி இலக்கியத்தைக் காட்டிலும் ஓர் இனம் தனது இருப்பை, வரலாற்றை அறிந்து கொள்ளலாம் இவ்விடத்தில் பேராசிரியர் சு.வித்தியானந்தன் அவர்கள் கருத்து மனங்கொள்ளத்தக்கது.

''ஓர் இனத்தின் தனித்துவம் அவ்வினத்திற்கே சிறப்பாகவுரிய கலைகளால் மேலும் உறுதிப்படுத்தப்படுகின்றது ஓர் இனத்திற்குரிய தனித்துவமான கலைகள் என்பன வரலாற்றுப் போக்கினூடாக அவ்வினம் தனக்கென சேகரித்து வைத்த அரும் பொக்கிஷங்களாகும்''

எழுத்தாதாரம் இல்லாத இனத்தின் வரலாற்றினை அறிய வாய் மொழி இலக்கியங்களே உதவுகின்றன. உதாரணமாக :- ஆபிரிக்காவில் சகாராவிற்கு தெற்கே வாழும் சமுதாயத்தவர்களின் வரலாற்றை அறிந்து கொள்வதற்கு எந்தவித எழுத்தாளரும் இல்லாத பட்சத்தில் அவர்களுடைய வாய்மொழி இலக்கியத்தாலேயே அறியமுடிகிறது.

**ஆ) மேலைத்தேய நாடுகள் தம் காலணித்துவத்திற்கு கீழைத்தேய நாடுகளை உட்படுத்தும் போது நாட்டுப்புறவியலை பயன்படுத்தியது.**

மேலைத்தேய நாடுகள் தாம் காலணித்துவத்திற்கு உட்படுத்தும் நாடுகளில் தமது கருத்துக்களை பரப்புவதற்கு அந்தந்த நாடுகளில் தமது நாடுகளில் நிலவி வந்த நாட்டுப்புறவியலினூடாக பரப்பி வந்தது இந்த செயல் பழைய பாத்திரத்தினுள் புதிய பாலை ஊற்றுவதற்கு ஒப்பாகியது. மக்கள் பழக்கப்பட்ட வாய் மொழி இலக்கியத்தினூடாக ஆட்சியாளர்கள் தமது புதிய கருத்துக்களை வெளியிட்டனர். உதாரணமாக ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் கிறிஸ்தவ மிசனரிகள் ஊடாக தமிழர் நாட்டுப்புற கலைகளினூடாக மதப் பிரச்சார நடவடிக்கைகலை மேற்கொண்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

**இ) தேசிய வாதம் பற்றி பேசும் போது நாட்டுப்புறவியல் முக்கியமானதாகிறது.**

தேசிய வாதம் என்பது காலணித்துவத்திற்கு எதிர்மையானதாகும். அந்த வகையில் காலணித்துவத்திற்கு எதிராக குரல் கொடுக்கும் போது அங்கு நாட்டுப்புறவியல் முக்கியமானதாகக் கருதப்படுகிறது. உதாரணமாக பிரித்தானியர் ஆளுகைக்கு உட்பட்டிருந்த இந்தியாவை மீட்பதற்கு பல புரட்சிகளைப் பாடிய பாரதி கும்மி கோலாட்டம் சிந்து முதலான நாட்டுப்புறவியலினூடாகவே தனது கருத்தை வெளிப்படுத்தி பிரித்தானியருக்கு எதிராக குரல் கொடுத்தார்.

**ஈ) தேசிய வாதத்தை உருவாக்கும் மக்கள் சித்தத்தை உருவாக்க நாட்டாரியல் பயன்படுத்தப்பட்டது.**

இன்பத்தையும் மொழியையும் அந்நிய மேலாதிக்கத்திலிருந்து விடுதலை பெறச்செய்வதற்கு உருவாக்கப்பட்ட தேசிய வாதத்திற்கு வலுச்சேர்க்கும் நடவடிக்கையான மக்கள் சித்தத்தை ஏற்படுத்த நாட்டாரியல் பயன்படுத்தப்பட்டது.

ஈழத்தில் அ. தாசியஸ் குழந்தை ம. சண்முகலிங்கம் சிதம்பரநாதன் ஆகியோர் திருநெல்வேலியிலே தொடங்கிய நாடகக் கல்லூரி நாட்டுக்கூத்தினையும் நவீனநாடகத்தினையும் இணைத்து பரிசோதனை நடத்தியது. இவர்கள் தயாரித்த பொறுத்தது போதும் ஜனாதிபதி விருதினைப் பெற்றது. பின்னர் மேடையேற்றிய மண் சுமந்த மேனியர் நாடகமும் இத்தகையதே.

**உ) உலகமயமாதலின் எதிராக மீள் கண்டுபிடிப்புச் செய்வதற்கும் நாட்டுப்புறவியல் உதவுகிறது.**

இன்றைய உலகின் அரசியல் சித்தாந்தத்தில் ஒரு புறம் போர் பற்றிய பிரக்ஞையும் மறுபுறம் உலகமயமாதலும் முக்கியம் பெறுகின்றன. உலகமயமாதல் என்பது வர்த்தகசார் நடவடிக்கைகளோடே சிலாகித்துப் பேசப்படுகிறது. இவ்வாறு உலகமயமாதலின் போது ஒவ்வோர் இனமும் தனக்கே உரித்தான தனித்துவத்தினை மீள் கண்டுபிடிப்புச் செய்வதற்கு நாட்டுப்புறவியல் உதவுகின்றது.

**ஊ) மாக்சியக்கருத்து நிலைகள் வலுப்பெறுவதற்கும் மாக்சியம் பற்றிய சிந்தனை மக்கள் மத்தியில் பரவுவதற்கும் நாட்டுப்புறவியல் முக்கியத்துவம் பெறுகிறது.**

மாக்சிய அணுகுமுறையினையும் சோசலிச இலட்சியத்தினையும் நாட்டார் வழக்கியல் ஆய்வுகளுக்குக் கொண்டுவந்தாலன்றி உண்மையான வளர்ச்சியை நாம் காணப் போவதில்லை.

வரலாற்றியல் சமூகவியல் ஒப்பியல் நோக்கு பொருளியல் முதலியன நாட்டார் வழக்கியல் ஆய்விற்கு இன்றியமையாதன. ஆனால் இறுதி ஆய்வில் நாட்டார் வழக்கியல் ஆய்வானது கேவலம் வெறும் ஏட்டுக்கல்வியாக மட்டும் இருக்கவியலாது ஏகாதிபத்தியத்திற்கு எதிரான உலகளாவிய போராட்டத்தில் நாட்டார் வழக்கியல் ஆய்வுகள் ஓர் அங்கமாகத் திகழ வேண்டும்.

ஆக்கம்
செல்வி அகிலா அகிலேந்திரா
உயர்தரம் 2009 கலை

''கலங்காத உள்ளம் படைத்தவர்களே இறுதி வெற்றிக்கு உரியவர்கள்''

*சுபாஸ் சந்திரபோஸ்*

''உன்னால் எதைச் செய்ய முடியாது என்று மற்றவர்கள் சொல்லுகிறார்களோ. அதைச் செய்து காட்டுவதுதான் மிகப்பெரிய இன்பம்''

*வால்டேர்.*

''நல்ல காரியம் செய்ய எப்போதும் அஞ்சாதீர்கள். தாமதமின்றி உடனே நல்ல காரியங்களைச் செய்யுங்கள்''

*நெப்போலியன் ஹில்.*

# புகழ் பெற்ற உரையாசிரியர்கள்

நக்கீரர்
இளம்பூரணர்
பேராசிரியர்
பரிமேலழகர்
நச்சினார்க்கினியார்
அடியார்க்கு நல்லார்
சேனாவரையர்
ஔவை சு. துரைசாமி

# உரைநடையாசிரியர்கள்

| | |
|---|---|
| வீரமாமுனிவர் | (1680 - 1747) |
| ஆறுமுகநாவலர் | (1822 - 1879) |
| இராமலிங்க அடிகள் | (1823 - 1874) |
| வேதநாயகம்பிள்ளை | (1826 - 1889) |
| உ.வே. சாமிநாதஐயர் | (1855 - 1942) |
| அ. மாதவையா | (1872 - 1925) |
| கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளை | (1876 - 1954) |
| மறைமலையடிகள் | (1876 - 1950) |
| நாவலர் சோமசுந்தரபாரதியார் | (1879 - 1921) |
| பண்டிதமணி கதிரேசச்செட்டியார் | (1881 - 1953) |
| சுப்பிரமணிய பாரதியார் | (1882 - 1921) |
| திரு.வி.கல்யாணசுந்தரமுதலியார் | (1883 - 1953) |
| ந.மு.வேங்கடசாமிநாட்டார் | (1884 - 1944) |
| பேராசிரியர் எஸ்.வையாபுரிப்பிள்ளை | (1891 - 1956) |
| ரா.பி.சேதுப்பிள்ளை | (1896 - 1961) |
| மா.இராசமாணிக்கனார் | (1907 - 1967) |
| டாக்டர். மு.வரதராசன் | (1912 - 1974) |

ஆக்கம்
செல்வன் சின்னக்கிளி தனேஸ்
உயர்தரம் 2011 கலை

# சிந்தனைத் துளிகள்

- எதையும் சாதிக்க விரும்பும் மனிதனுக்கு நிதானம் தான் ஆயுதமான ஆயுதமே தவிர கோபம் அல்ல. கோபத்தில் உடனே நீ நடவடிக்கை எடுத்தால் நிலமை பயங்கரமாகிவிடும்

- சிலரை பலநாள் ஏமாற்றலாம் .பலரை சில நாள் ஏமாற்றலாம் ஆனால் எல்லோரையும் எப்போதும் ஏமாற்ற முடியாது.

- நம் வாழ்வில் கடைசித்தினம் இதுதான் என்ற உணர்ச்சியுடன் ஒவ்வொரு நாளையும் மிகவும் பயன் உள்ளதாகச் செலவு செய்ய வேண்டும்.


- முன்னேற்றப்படிகளில் ஏறும்போது வழியில் சந்திப்பவர்களிடம் அன்பாய் இரு ஏனெனில் இறக்கும் போது வழியில் அவர்களை சந்திக்க வேண்டியிருக்கும்.

- பேசிய பிறகு வருந்துவதை விட பேசுவதற்கு முன்பே யோசனை செய்வது மிகவும் நல்லது.

- ஒரு மனிதனைப்பற்றி அறிந்து கொள்ள வேண்டுமானால் அவனை ஆட்சிப்பீடத்தில் அமர்த்துங்கள்

- நல்ல நூல்கள் மூலம் மற்றவர்களை புரிந்து கொள்ள முடியும் அத்துடன் தன்னையும் புரிந்து கொள்ள முடியும்.

ஆக்கம்
செல்வன் ஜெயக்குமார் குகசாந்
தரம் 10 ஏ



# நெருப்பாற்றின் நீளம்

இன்றோ பெருநெருப்பில் தேசம் கருகுகிறது
என்றந்த சிறு பொறி எம்மண்ணில் வீழ்ந்தது?
எவர் அறிவார்?
பொறியை சிறு நெருப்பாக்கி
ஊதுகுழல் கொண்டு உருப்பெருக்கம் செய்த
ஊன்மாந்தர் யார்? யார்?
அன்றேன் அணைக்க அயலவர் வரவில்லை?
அடுப்பு நெருப்பென்று அகமகிழ்ந்து அரிசி
உலையிட்டு ஆக்கி உளமார உண்டோர்
குசினி பற்றி எரிகையில் ஏன் கூச்சலிடவில்லை?
யாகத் தீ என்றுரைத்து நெய்யூற்றி வளர்த்தோர்
குளிர் காயவென்று விறகடுக்கி மகிழ்ந்தோர்
பொறுமை முழக்கமிட்டு பெற்றோலிட்டோர்
தீயில் கருகாது தப்பினாரா ?
அருகிலிருக்கும் வீட்டிற்கு அக்கினியிட்டோர்
தம் வீடு பற்றி எரியுமுன் பதறி அணைத்தாரா
ஓரிருவர் நீரள்ளித் தெளித்து நிகழ்வதென்ன
நெருப்பாற்றின் நீளம் நெஞ்சறியும்
அனைத்துக்கரங்களிலும் நீர்குளங்கள் நிறைந்தால்
அக்கினிப்பூ அணையும் அகம் மகிழும்
அணைக்க ஆர்வமின்றி - அதை வளர்க்க முயலும் வக்கிரமே
நினைவிற் கொள்
நாளை நீ கூடத் தீக்கிரை தான்
உன்னை அழித்து எதை உருவாக்குவாயோ
அது கூட அழியுமெனில்
உன்னழிவில் ஏதும் உயர்வுளதா ?

ஆக்கம்
செல்வன் மனோகரன் நிதர்சன்
தரம் 11 பி

''நாம் நமது எண்ணங்கள் மீது கவனம் வைக்க வேண்டும். கெட்ட எண்ணங்கள் மிகவும் ஆபத்தான திருடர்கள்''

*ஸ்ரீ அன்னை.*

# இன்றைய உலகும் கணினியும்

மண்ணுலகில் மகத்தான சாதனைகள் பலவற்றை ஈட்டிய மனிதன் இன்று விண்ணுலகிலும் வாகைசூடி வருகின்றான். உயர் மனித வலுமூலம் உருவாகும் சாதனைகள் பல இன்று கைக்குள் அடக்கமான கருவிகள் மூலம் செயற்படுத்தப்படுகின்றன. இத்தகைய திறன் மிக்க கருவிகளில் இன்று முதலிடம் வகிப்பது கணினியே.

இன்றைய உலகம் இயந்திரமயமானது. இயந்திரங்கள் மனிதர்களை இயக்குவிக்கின்ற காலம் அருகிலேயே என்று எண்ணவைப்பது இத்தகைய எண்ணத்தை மெய்ப்பிப்பதாக கணினிகள் ஆற்றும் பணிகள் அமைகின்றன. விஞ்ஞானம் வர்த்தகம் மருத்துவம் முகாமைத்துவம் கல்வி அரசியல் தொடர்பாடல் போன்ற துறைகளில் கணினிகளின் பயன்பாடு அளவிறந்ததாகும்.

நவீன கணினிகளுக்கு வித்திட்ட ஆரம்பப் பொறியானது கி.பி.1617 இல் ஜான் நாப்பியார் என்பவரால் அமைக்கப்பட்டது. இவ் எந்திரம் படிப்படியாக கணித்தல்களுக்கு ஏற்றதாக விருத்தி செய்யப்பட்டது. பொறிநுட்பம் மிக்க கணினி அமைப்பு 1828 ஆம் ஆண்டு சார்லஸ் பாபேஜ் என்பவரால் அமைக்கப்பட்டது. லேடி அடா என்ற பெண்மணி இப்பொறியில் செயற்படுத்தப்படுவதற்கேற்ப நிகழ்ச்சிகளை வழங்கும் முதல் நபராவார்.

ஆரம்ப காலங்களில் கணினிகள் மிகப் பருமனானவையாக இருந்தன. அதே சமயம் அவற்றின் தொழிற்படுதிறன் ஒப்பீட்டளவில் மந்தமாகவும் இருந்தது. 1944ம் ஆண்டில் முதலாவது வினைத்திறன் மிக்க இலத்திரனியல் கணினி உருவாக்கப்பட்டது. இதன் பின்னர் கணினிகள் சிறிய பருமன் உடையவையாக அமைக்கப்படக்கூடியதாக இருந்தன.

இதன் பின்வந்த காலங்களில் பல இப்பொறியில் படிப்படியான மாற்றங்களை ஏற்படுத்தினர். கணினிகளின் பயன்பாடு உலகப்போர் நிகழ்ந்த காலங்களில் கணிசமாக அதிகரித்து பிறநாடுகளின் போர் நடவடிக்கைகளை பின்னடிக்கவும், தம் தேசத்தின் இராணுவ நடவடிக்கைகளை மேம்படுத்தவும் பல நாடுகள் கணினிகளைப் பயன்படுத்தின.

இன்றைய கணினி அதிகளவு ஆற்றல்களை உடையதாக இருக்கின்றது. வேடிக்கை வினோதங்கள் முதல், விண்வெளிப் பயணங்கள் வரை சகல துறைகளிலும் கணினிகள் தம் ஆற்றலை நிரூபித்துள்ளன. கண்ணிமைக்கும் நேரத்தில் பணியை நிறைவேற்றும் தன்மையும், நம்பகத் தன்மையுமே கணினியின் மிக முக்கிய அனுகூலங்களாகக் கருதப்படுகின்றன.

கணினிகளுக்கிடையில் வலைத்தொடர்புச் செயற்பாடு உலகினை உள்ளங்கையளவாக குறுக்க வல்லதாக உள்ளது. நினைவுக்கு எட்டாத விரைவுடன் உலகின் சகல பாகங்களையும் தொடர்புபடுத்தக்கூடியதாக இவ்வலையமைப்பு அமைகின்றது.

கணினியினால் உலகம் பெறும் நன்மைகள் கணக்கற்றவை. ஆயினும் இது சில பிரதிகூலமான விளைவுகளையும் ஏற்படுத்துகின்றது. வேலையில்லாத் திண்டாட்டத்தை அதிகரிப்பதுடன் இயல்பான மனித சிந்தனைத் திறனை குறைவடையச் செய்கின்றது. சுவாரஸ்யம் மிக்க கணினி வலையமைப்புக்கள் மூலம் இளம் சமூகத்தினர் தவறாக வழிநடத்தப்படவும் வாய்ப்புண்டு. எவ்வாறாயினும் இருபதாம் நூற்றாண்டின் ஈடு இணையற்ற கருவி கணினியே என்பதில் ஐயமில்லை.

ஆக்கம்

செல்வவி ஜெயமாதுரி துரைசிங்கம்

தரம் 11 பி

# தமிழ் இலக்கண நூல்களும் ஆசிரியர்களும்

| | |
|---|---|
| அகத்தியம் | - அகத்தியர் |
| தொல்காப்பியம் | - தொல்காப்பியர் |
| நன்னூல் | - பவணந்தி முனிவர் |
| யாப்பருங்கல விருத்தி | - அமிர்தசாகரர் |
| யாப்பருங்கலக் காரிகை | - அமிர்தசாகரர் |
| புறப்பொருள் வெண்பாமாலை | - ஐயனாரிதனார் |
| நம்பி அகப்பொருள் | - நாற்கவிராச நம்பி |
| நேமிநாதம் | - குணவீரபண்டிதர் |
| சுவாமிநாதம் | - சாமிகவிராயர் |
| மாறன் அகப்பொருள் | - திருக்குருகைப் பெருமாள் கவிராயர் |
| இறையனார் களவியல் | - இறையனார் |
| தண்டியலங்காரம் | - புலவர் தண்டி |
| முத்து வீரியம் | - முத்துவீர உபாத்தியாயர் |
| வீரசோழியம் | - புத்தமித்திரர் |
| தொன்னூல் விளக்கம் | - வீரமாமுனிவர் |
| இலக்கண விளக்கம் | - வைத்தியநாத தேசிகர் |
| பிரயோக விவேகம் | - சுப்பிரமணிய தீட்சிதர் |
| இலக்கணக் கொத்து | - சுவாமிநாத தேசிகர் |
| யாப்பிலக்கணம் | - திருத்தணிகை விசாகப் பெருமாளையர் |
| சிதம்பரச் செய்யுட்கோவை | - குமரகுரபரர் |
| மாறன் பாப்பாவினம் | - திருக்குருகைப் பெருமாள் கவிராயர் |
| திருவலங்கல் திரட்டு | - குமரகுருதாச அடிகள் |
| வச்சணந்திமாலை | - குணவீரபண்டிதர் |
| நவநீத பாட்டியல் | - நவநீதநடன் |
| சிதம்பரப் பாட்டியல் | - பரஞ்சோதி முனிவர் |
| இலக்கண விளக்கப்பாட்டியல் | - வைத்தியநாத தேசிகர் |
| தொன்னூல் விளக்கப்பாட்டியல் | - வீரமாமுனிவர் |
| பிரபந்த தீபிகை | - முத்து வேங்கடசுப்பையா |

''அன்பு மற்றும் கருணை என்பதில் புனிதமானது, புனிதமற்றது என்ற வித்தியாசம் இல்லை. அன்பு எப்போதும் தெய்வீகமானது. இறைவன் அன்பு மயமாகவே இருக்கின்றான்''

*ஓஷோ*

''சோம்பல் எல்லா செயல்களையும் கடினமாக்கும். சுறுசுறுப்பு எல்லா செயல்களையும் எளிமையாக்கும்''

*பெஞ்சமின் ஃப்ராங்க்ளின்.*

# ஆத்திரக்காரனுக்குப் புத்தி மத்திமம்

ஒரு ஊரில் கந்தையாவின் மகன் இராமுவும், செல்லையாவின் மகன் வேலனும் நல்ல நண்பர்கள். அவர்கள் இருவரும் சிறுவயதிலிருந்தே நண்பர்களாவர். இராமு பணக்காரவீட்டுப் பையன். வேலன் ஏழைவீட்டுப் பையன். இவர்கள் இருவரும் ஒரே வகுப்பில் படித்து தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையிலும் சித்திபெற்று தற்போது இருவரும் க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்கு ஆயத்தமாகிக் கொண்டிருக்கின்றனர்.

இந்தவகையில் இருவரும் பரீட்சைக்குத் மாறி மாறித் தமக்குத் தெரியாதவற்றை கேட்டுப் பரிமாறிக்கொண்டிருந்தனர். இவ்வாறாக இவர்கள் இருவரும் ஒன்றாக ஒற்றுமையாக நண்பர்களாகப் பார்த்த இவர்களுடைய வகுப்பு மாணவர்களில் ஒருவனா இராஜன் இவர்களைப் பிரிக்கத் திட்டமிட்டான். ஒரு நாள் இராஜன் இராமுவின் பென்சிலை திருடி வேலுவின் புத்தகப்பையினுள் வைத்து விட்டான். இராமு எழுதுவதற்காக பென்சிலைத் தேடியபோது பென்சிலைக் காணவில்லை. அப்போது வகுப்பே ஆரவரப்பட்டது. அதேநேரம் இராஜன் வந்து இராமுவிடம் வேலுதான் உன் பென்சிலைத் திருடி புத்தகப் பையினுள் வைத்ததை நான் கண்டேன் என்று கூறினான். இராமு நம்பவில்லை. பின்னர் தேடிப்பார்க்கையில் வேலுவின் புத்தகப் பையினுள்ளேயே இருந்தது. இராமுவோ அதனைப் பொருட்படுத்தாது வழமைபோல் வேலுவுடன் கதைத்துப் பழகினான். இராஜனுக்கு மேலும் அவர்களின் நட்புமீது கோபம் ஏற்பட்டது.

பின்னர் ஒருநாள் இராமு வங்கியில் பணத்தைச் செலுத்துவதற்காக இரண்டாயிரம் ரூபாவை தனது கணித உபகரணப்பெட்டியினுள் வைத்திருந்தான். இதைக்கண்ட இராஜன் இராமுவும் வேலும் இடைவேளையின்போது மைதானத்திற்குச் செல்ல இராமுவின் பணத்தை எடுத்து வேலுவின் புத்தகப்பையினுள் வைத்தான். வகுப்பிற்கு வந்த இராமு பணத்தைத் தேட அவர்களது வகுப்பாசிரியர் அங்குவந்து எல்லோரையும் சோதனை செய்தார். அப்போது வேலுவின் புத்தகப்பையினுளிருந்து அப்பணத்தை எடுத்தார். அப்போதும் வேலு பொறுமையாகவே இருந்தான். ஏனெனில் இராமு வேலுமீது சந்தேகப்பட்டு வேலுவைக் கண்டபடி இராஜன் காணும்படியாகத் திட்டினான் இதையெல்லாம் பார்த்துக்கொண்டிருந்த இராஜன் தான் நினைத்தது நடைபெற ஆரம்பித்து விட்டது என்பதை முன்னிட்டு மிகச் சந்தோஷமடைந்தான்.

இவ்வாறாக இராமு, வேலுவின் வகுப்பில் ஏதாவது ஒரு பொருளைக் காணவில்லை என்றால் வேலுதான் எடுத்திருப்பான் எனச் சந்தேகித்து அவனுடன் சண்டை செய்வான். ஒருநாள் அந்த இராஜன் இராமுவிடம் மேலும் வேலுவைப்பற்றி தவறாகச் சொல்லி இருவரையும் பிரித்துவிட்டான். வேலுவால் இப்பிரிவைத் தாங்கமுடியவில்லை. அவன் தான் எந்தத்தவறும் செய்யவில்லை என்றும், இராஜன் இவற்றுக்குக்காரணம் எனவும் கோபப்படாது நிதானமாகச் சிந்தித்து செயற்படு எனவும் பல அறிவுரைகளையும் எடுத்துரைத்தான். ஆனால் இராமுவோ இதைக் கேட்காமல் சென்றுவிட்டான். பின்னர் சில நாட்களில் இராஜன் இராமுவின் தாய் தந்தையரைக் கொன்றுவிட்டு அப்பழியினை வேலுமீது சுமத்தினான். இதையறிந்த வேலு கவலைப்பட்டு இராமுவுக்கு ஆறுதல் கூறச்சென்றான். ஆனால் இராமு தனது பெற்றோரைக் கொன்று வீழ்த்தியது இவன்தான் என நினைத்து வேலுவைத் தேடி விரைந்தான். வேலுவும் வந்து இருவரும் பாடசாலை மைதானத்தில் சந்தித்தனர். இராமு வேலுவைப்பார்த்து நானும் நீயும் பிரிந்துவிட்டோம் என்பதற்காக ஏனடா என் பெற்றோரைக் கொன்றாய்? கொலைகாரப் பாவியே எனப் பலவாறாகப் பேசினான். வேலு பொறுமையாக இருந்தான். பின் வாய்ச்சண்டை முற்றி

கைச்சண்டை, அடிதடி என ஆரம்பித்தது. அப்போதும் அவன் அடியை வாங்கிக்கொண்டும் பொறுமையாகவே இருந்தான். பின்னர் இராமுவால் கோபத்தை அடக்க முடியவில்லை. வேலுவைக் கத்தியால் குத்தினான். வேலு வலிதாங்க முடியாமல் நிலத்தில் விழுந்தான். இதையறிந்த வகுப்பாசிரியர் அங்கு வந்து இவ்வளவு குற்றச் செயல்களுக்கும் காரணம் இராஜன்தான் என்பதை இராமுவிடம் கூற முற்பட்டபோது வேலு தடுத்துவிட்டான். பின்னர் பொலிஸுடன் அங்குவந்து சேர அதிபரையும் உண்மைசொல்லக் கூடாதெனத் தடுத்தான். அப்போதுதான் அங்கிருந்த ஒருவன் உண்மையை இராமுவிடம் கூற இராமு ஓடோடி வந்து வேலுவிடம் மன்னிப்புக் கேட்டான். அப்போது வேலு உனக்குக் கோபம் வந்தால் என்ன செய்வாய் என்று உனக்கே தெரியாது. ஆகையால் உனது கோபத்தை நீ அடக்கிக்கொள். ஆத்திரக்காரனுக்குப் புத்தி மத்திமம். எனவே கோபப்படாது உனது வாழ்க்கையை வாழ் என அவனுக்கு அறிவுரை கூறினான்.

பின்னர் தான் தனக்கே கத்தியால் குத்தியதாக பொலிஸிடம் கூற பொலிஸ் அவ்விடத்தைவிட்டு நீங்கினர். இதைப் பார்த்த இராமுவுக்கு கவலையைத் தாங்கமுடியவில்லை. வேலுவின் தலையைத் தனது மடியில் தூக்கிவைத்து மன்னிப்பு கேட்டான். வேலு எனக்காக இனிமேல் கோபப்படக்கூடாது எனக் கூறி இறந்துவிட்டான். பின்னர் இராஜனும் இராமுவிடம் மன்னிப்புக்கேட்டு இராமு பொறுமைசாலியாக வேலுவின் நினைவுகளுடனும் நிழலுடனும் வாழ்ந்து வருகின்றான்.

ஆக்கம்
**செல்வன் அகிலேந்திராஜயர் அகிலேஸ்**
தரம் 10 பி



# காப்பியங்களும் படைத்தோரும்

## பெருங்காப்பியங்கள்

| | |
|---|---|
| சிலப்பதிகாரம் | : இளங்கோவடிகள் |
| மணிமேகலை | : சீர்த்தலைச்சாத்தனார் |
| சீவகசிந்தாமணி | : திருத்தக்கதேவர் |
| வளையாபதி | : ஆசிரியர் அறியப்படவில்லை |
| குண்டலகேசி | : நாதகுத்தனார் |
| கம்பராமாயணம் | : கம்பன் |
| வில்லி பாரதம் | : வில்லிபுத்தூரார் |
| இராவணகாவியம் | : புலவர் குழந்தை |
| பெருங்கதை | : கொங்குவேளிர் |
| சீறாப்புராணம் | : உமறுப்புலவர் |
| தேம்பாவணி | : வீரமாமுனிவர் |
| இரட்சணிய யாத்திரிகம் | : எச். ஏ. கிருஷ்ணபிள்ளை |

## சிறுகாப்பியங்கள்

| | |
|---|---|
| நீலகேசி | : ஆசிரியர் அறியப்படவில்லை |
| சூளாமணி | : தோலாமொழித்தேவர் |
| உதயணகுமார காவியம் | : ஆசிரியர் அறியப்படவில்லை |
| யசோதர காவியம் | : வெண்ணாவலுடையார் |
| நாககுமார காவியம் | : ஆசிரியர் அறியப்படவில்லை |
| நளவெண்பா | : புகழேந்திப் புலவர் |
| நைடதம் | : அதிவீரராமபாண்டியர் |
| இயேசு காவியம் | : கவிஞர் கண்ணதாசன் |

தொகுப்பு :
**செல்வன் குணபாலசிங்கம் சஞ்சீவ்**
உயர்தரம் 2010 கலை

''படிப்பதில் ஈடுபாடு கொள்ளாத அரசனாக இருப்பதை விட நிறைய புத்தகங்களுடன் ஏழையாக இருப்பதையே விரும்புவேன்''

*மெக்காலே.*

''அறிவே ஒருவனின் உண்மையன பலம்.''

*பிரான்ஸிஸ் பேகன்.*

# நான் விரும்பும் சமாதானம்

"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு நம்மில் ஒற்றுமை நீங்கின் அனைவருக்கும் தாழ்வு"

இக்கூற்றின் உணமைப் பொருளை அனுபவித்து அறிந்து கொண்டோம். உறவுகளை உயிர்களை போர்ச்சுழலில் இழந்தோம். அஞ்சி அஞ்சி வாழ்ந்தோம் சமாதானம் எனும் பெயரில் அந்த அச்சத்திற்கு இன்று இடப்பட்டுள்ள காற்புள்ளி, முற்றுப்புள்ளியாகி முடிவடைய வேண்டும் என்பதே தான் விரும்பும் சமாதானம்.

கடந்தகால போர்புகட்டிய பாடத்தால் எமது பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி அனைத்திலும் சமாதானம் பற்றியே வலியுறுத்தப்படுகிறது. போக்குவரத்து சாதனங்கள் கூட மும்மொழிகளிலும் சமாதானமே நமது நாட்டம் என்ற வாசகத்துடன் வலம் வருகின்றன.

கடந்த காலங்களில் சிறுவராகிய எமக்கு போரைப்பற்றி மட்டுமே தெரியும் போர் விமானங்கள் காதுகளை செவிடாக்கி கண்களை வீழ்த்தின. கட்டிடங்கள் இடிந்தன. எத்தனை குடும்பங்கள் முழுமையாக உயிர்களை இழந்தன. எத்திசையில் சண்டை தொடங்குமென எண்திசைகளையும், பெரியவர்கள் உன்னிப்பாய் அவதானித்துக் கொண்டு இருந்தனர். சைக்கிளில் எப்போதும் தயார் நிலையில் இருந்தன். பதுங்கு குழிகளிலும் பதுங்க எமக்கு விசேட பயிற்சி அளிக்கப்பட்டது. சிறுவர்களாகிய எம்மை சந்தோசமாக இருக்க யாரும் விடவில்லை. பூதாகரமாய் தம்மைப் பயமுறுத்திய வீட்டிற்குள் அடைந்து கிடந்த காலம் விடைபெற்று விட்டது. எமது நகரம் எந்த நேரமும் கனவெள்ளத்துடன் சந்தோஷத்துடன் விழாக்கோலம் பூண்டு நிற்கிறது.

யுத்தம், சமாதானம் இவ்விரு பதங்களின் வினைகளையும் இன்று நாம் அனுபவித்து விட்டோம். பேச்சுவார்த்தை முறிந்ததால் மீண்டும் யுத்தம். வானொலிகள் முழுங்குகின்றன. ஐயோ! மீண்டும் ஒரு யுத்தமா? தாங்கவேமாட்டோம்.

குண்டுகள் வீழ்ந்ததை யுத்தமென்றும் பாதை திறந்ததை சமாதானம் என்றும் சிறுவர் நாம் நினைத்தது பிழையா? அரசியல் சாசனம் சமஷ்டி உரிமை என்றெல்லாம் பெரியவர்கள் பேசுகிறார்கள். இவை ஒன்றும் விளங்காத போதும், ஒன்றுமட்டும் விளங்குகின்றது. நாம் படிக்கும் சமயம் இலக்கியம், வரலாறு அனைத்திலும் வாளேந்தியவன் வாளினால் மடிவான் என்பதை வலியுறுத்துகின்றது. நாடுகளை வென்று மாபெரும் சாம்இராச்சியத்தையே தனதாக்கிக் கொண்ட அசோகச்சக்கரவர்த்திற்கு போர் தந்த பாடம் என்ன? அசோகனின் வரலாறு எம்மை வழிநடத்தட்டும். நாம் இனி போர்ப் பரணி பாடமாட்டோம். அன்பெனும் முரசு கொட்டி அனைவரும் நிகராவோம்.

ஆக்கம்
**செல்வி கஜானா வர்ணசிங்கம்**
தரம் 11 பி

# தமிழில் இணைய இதழ்கள்

## இணைய இதழாக மட்டும்

| | | |
|---|---|---|
| அப்புசாமி | அம்பலம் | ஜூனியர்விகடன் |
| அலைகள் | ஆறாம்திணை | இணையவணிகம் |
| உலகத்தமிழ் | எக்சிலிவர் | ஒளியோவியம் |
| கவின் | கனடாமுரசு | கும்மாளம் |
| குவியம் | சிஸ்இந்தியா | சுடர் ஒளி |
| சுதந்திரன் | தட்ஸ்தமிழ் | தமிழ் |
| தமிழ் ஒன் லைன் | தமிழ் காஸ்மோஸ் | தமிழ் சி.'.பி |
| தமிழ் சினிமா | தமிழ் திரை | தமிழ்நாடு ஒன்லைன் |
| தமிழ் வலை | தமிழோவியம் | திசைகள் |
| திண்ணை | தினக்குரல் | நார்தமிழ் |
| நிலாச்சாரல் | நுட்பம் | நூலகம் |
| பதிவுகள் | பனித்துளி | புதுக்குரல் |
| பூக்கோலம் | மானசரோவர் | முல்லை |
| வானவில் | விண்ணோசை | வெப்உலகம் |

## இணையத்திலும் அச்சிலும்

| | | |
|---|---|---|
| அவள்விகடன் | அன்புவணக்கம் | அன்னைதமிழ் |
| ஆனந்தவிகடன் | ஈழமுரசு | உண்மை |
| உதயன் | எரிமலை | கல்கி |
| கணையாழி | காலச்சுவடு | குமுதம் |
| குமுதம் பக்தி | குமுதம் ரிப்போட்டர் | குமுதம் ஜங்ஷன் |
| குமுதம் ஜோதிடம் | குமுதன் ஹெல்த் | சிநேகிதி |
| சினிமா எக்ஸ்பிரஸ் | சுட்டி விகடன் | தமிழ்முரசு |
| தமிழன் எக்ஸ்பிரஸ் | தினகரன் | தினத்தந்தி |
| தினபூமி | தினமணி | தினமலர் |
| தீராநதி | துளிர் | மங்கையர் மலர் |
| மலேசிய நண்பன் | மாலைமதி | மாலைமலர் |
| முழக்கம் | யாழ்மணம் | விடுதலை |
| விகடன் ஒன்லைன் | வீரகேசரி | யூனியர் விகடன் |

தொகுப்பு :
**செல்வன் மனோகரன் பிரசாத்**
உயர்தரம் 2010 கலை

---

# இதைப்படி கடைப்பிடி

| | |
|---|---|
| வணங்கத் தக்கவர்கள் | தாயும் தந்தையும் |
| வந்தால் போகாதது | புகழ், பசி |
| போனால் வராதது | மானம், உயிர் |
| தானாக வருவது | இளமை, முதுமை |
| நம்முடன் வருவது | பாவம், புண்ணியம் |
| அடக்கமுடியாதது | ஆசை, துக்கம் |
| தவிர்க்க முடியாதது | பசி, தாகம் |
| பிரிக்கமுடியாதது | பந்தம், பாசம் |
| அழிவைத் தருவது | பொறாமை, கோபம் |
| எல்லோருக்கும் சமமானது | இறப்பு, பிறப்பு |
| கடைத்தேற வழி | உண்மையும், உழைப்பும் |

தொகுப்பு
**செல்வி துவாரகா அழகன்**
தரம் 9 ஏ

# இன்றைய உலகமும் விஞ்ஞானமும்

இன்றைய நவீன உலகத்தில் விஞ்ஞானத் துறையின் முன்னேற்றமானது மகத்தான ஒரு வெற்றியின் உச்சக்கட்டத்தில் நிற்கிறது என்றே கூற முடியும். இவ்விஞ்ஞானமானது கல்வி முதல் திரையுலகம் வரை பரந்துபட்டுக் காணப்படுகின்றது என்று கூறலாம்.

விஞ்ஞானமும் கல்வியும் என்ற நோக்கில் நாம் பார்க்கும்போது கற்பிக்கும் முறையும் கூட கணினி மூலம் நடைபெறும் வாய்ப்புப் பெற்றுவிட்டது. கற்கைநெறிக்கான தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கென தனித்தனியான இன்ரநெற் வசதிகள் காணப்படுகின்றன. ஆனாலும் இன்ரநெற் விஞ்ஞான முறையின் மிக நவீனத்துவம் பெற்ற சாதமாக இருந்தாலும் அவற்றினூடாக நாம் தீமைகளுக்கு உட்படுகின்ற வாய்ப்பும் காணப்படுகின்றது. அதாவது பாலியல் தொடர்பான விடயங்களுக்கு உட்படுகின்றது.

கல்வித்துறையைவிட மருத்துவத்துறையில் விஞ்ஞானத்தின் முன்னேற்றமானது அதிக பயன்தரும் ஓர் விடயமாகக் காணப்படுகின்றது. இதற்குச் சான்றாக இரு விடயங்களை நோக்குவோமாயின் அன்று மனிதனின் உடல்களை வெட்டி இரத்தம் கண்டு சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. ஆனால் இன்று வெட்டுக்களின்றி கதிரலைகள் மூலமாக அறுவைச்சிகிச்சையை மேற்கொள்ளக்கூடியதாக உள்ளது. இதேபோன்று மனிதனது உடற்பாகங்கள் அனைத்திலுமுள்ள நோய்களைக் கண்டறியக்கூடிய வசதிகளும் உள்ளது. அன்றைய மனிதனது மூடக்கொள்கை விஞ்ஞானத்தின் முன்னேற்றதினால் முறியடிக்கப்பட்டு விட்டதென்றே கூறமுடியும்.

மனிதன் தகவல்களைப் பரிமாறிக் கொள்வதற்காக புறாக்களைப் பயன்படுத்தியிருந்தான். ஆனால் இன்று அத்தகவல்கள் மின்னஞ்சல் மூலமாகப் பெற்றுக்கொள்கின்றோம். இது வும் விஞ்ஞானத்துறையின் முன்னேற்றமேயாகும். இன்றைய நவீன உலகில் அபிவிருத்தியடைந்த நாடுகளான யப்பான், சீனா, அமெரிக்கா போன்றவற்றின் அபிவிருத்திக்கு விஞ்ஞானமும் தொழினுட்பமுமே காரணமாகும். அதாவது விஞ்ஞானத்தில் ஏற்பட்ட கல்விவளர்ச்சியும், தொழினுட்பத்தில் ஏற்பட்ட நிறைவான செயற்பாடுமே இன்று உலகில் தொழினுட்பத் திறன் நிறைந்த நாடுகளாக இருப்பதற்கு காரணமாகும்.

ஒரு திரைப்படத்தைக் கடலுக்கடியில் எடுப்பதற்கான வாய்ப்பினைக்கூட இந்த விஞ்ஞானமே உருவாக்கிக் கொடுத்துள்ளது என்று கூறுவது மிகையாகாது. இவ்வாறு காணப்படும் விஞ்ஞானத்துறையின் வளர்ச்சி சாதகமாக இருந்தாலும் எதிரொலியான பாதகங்களும் காணப்படுகின்றன.

விஞ்ஞானத்துறையின் முன்னேற்றத்தினால் இன்று விண்வெளி ஆராய்ச்சிகள் நடைபெற்றவண்ணம் உள்ளன. அந்தவகையில் இந்தியப்பெண் வீராங்கனை சுனித்த வில்லியம்ஸ் அட்லாண்டிக் விண்கத்தில் பயணத்தை மேற்கொண்டு பத்திரமாகத் தரையிறங்கினார். இச்சாதனையும் இந்தியாவின் விஞ்ஞான தொழினுட்ப வளர்ச்சி என்றே கூறலாம்.

அமெரிக்காவின் விண்வெளி ஆய்வு நிலையமான நாசாவின் வளர்ச்சிக்கு விஞ்ஞானமே வித்திட்டது எனலாம். புவியில் நடக்கக்கூடிய பூகம்பம், சுனாமி, மண்சரிவு, வெள்ளப்பெருக்கு போன்ற அபாயங்களை முன்கூட்டியே அறிந்து கொள்வதற்கும் விஞ்ஞானத்தில் ஏற்பட்ட வளர்ச்சியே காரணமாகும்.

அறிவு வளர்ச்சியினால் நவீன உலகில் பல தொழிற்சாலைகள் பாதுகாப்பு நிலையங்கள் உருவாகி வருகின்றன. ஏனெனில் மனிதனுக்கு வீக்கம் ஏற்பட்டால் அதைத் தடுக்கும்மருந்தாக 'பிலோப்

பீனாக்' பாவிக்கப்படுகிறது. இது கழிவிலிருந்து பெறப்பட்ட மருந்தாகும். வேகமாக அழிந்துவரும் கழுகு இனத்தைக் காப்பாற்ற இந்திய மத்திய அரசின் சுற்றுச்சூழல் துறை இளம் கழுகுகளைப் பிடித்து அவற்றை இனப்பெருக்கம் செய்து வருகிறது. இவற்றினால் சாதகமான நிலை காணப்பட்டாலும் பாதகமான சில விடயங்கள் காணப்படுகின்றன.

இன்று உலகில் காணப்படும்மிக முக்கியமான பிரச்சினையானது ஓசோன் துவாரம். இது விஞ்ஞானத்துறையின் வளர்ச்சியினாலேயே ஏற்பட்டது. இதற்குக் காரணம் என்னவென்றால் குளோரோ புளோரோ காபன் (C.F.C) வாயுப் பாவனையாளர்கள் தொகை அதிகரித்தமையே ஆகும். குறிப்பாக இவ்வாயு குளிரூட்டிகளிலேயே காணப்படுகின்றது.

இதைவிட சேது சமுத்திர அகழ்விற்குக்கூட விஞ்ஞானத்தின் முன்னேற்றம் இல்லாவிடின் அகன்றிருக்க முடியாது. இன்று இது அகழப்படுவதனால் எத்தனையோ உயிரினங்கள் அழியும் நிலையில் இருக்கின்றன. இதற்கு விஞ்ஞானத்துறையின் முன்னேற்றம் அனுகூலமாக இருந்தாலும் பிரதிகூலமாகவே காணப்படுகின்றது.

இவ்வாறு காணப்படும் விஞ்ஞானமானது உலகத்துடன் பின்னிப் பிணைந்துள்ளது. மனிதன் சுவாசிப்பதற்கு காற்று எவ்வாளவு அத்தியாவசியமாகக் காணப்படுகின்றதோ அவ்வாறே நவீனத்துவம் பெற்றுவரும் உலகில் விஞ்ஞானமும் காணப்படுகின்றது.

ஆக்கம்
செல்வி தர்சனா தேவதாசன்
உயர்தரம் 2011 கலை

'எதற்கும் அஞ்சாதே எதையும் வெறுக்காதே யாரையும் ஒதுக்காதே உன் பணியை ஊக்கமுடன் செய்"

*அரவிந்தர்.*

''அஞ்சாதவனும் ஆசைப்படாதவனும் உண்மையான உயர்ந்த மனிதன்"

*சார்லஸ்.*

''அச்சத்தை வெல்வதே முதல் வெற்றி"

*கார்லைல்.*

''மனிதன் என்பதற்கு அடையாளமே, அறிவுடன் இருப்பதுதான் முதலில் மனிதன் மனிதனாக இருக்க வேண்டும். இரண்டாவது அவன் அறிவுள்ளவனாக இருக்க வேண்டும்"

*தந்தை பெரியார்.*

யா / தொண்டைமானாறு
வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலயம்
தொண்டைமானாறு

# ஈழத்து முன்னோடி நாவல்கள்
# (1856 – 1940)

| நாவலின் பெயர் | ஆசிரியர் பெயர் | ஆண்டு |
|---|---|---|
| காவலப்பன் கதை | - | 1856 |
| அசன்பேயுடைய கதை | முஹம்மது காசிம் சித்திலெப்பை மரைக்கார் | 1885 |
| ஊசோன் பாலந்தை கதை | எஸ். இன்னாசித்தம்பி | 1891 |
| மோகனாங்கி | தி. ச. சரவணமுத்துப்பிள்ளை | 1896 |
| இன்பவதி | த. கைலாசபிள்ளை | 1902 |
| கமலாவதி | சுவாமி சரவணமுத்து | 1904 |
| சன்மார்க்க ஜெயம் | சி. வை. சின்னாப்பிள்ளை | 1905 |
| நொறுங்குண்ட இதயம் | மங்களநாயகி தம்பையா | 1914 |
| உதிரபாசம் அல்லது இரத்தினபவானி | சி. வை. சின்னப்பாபிள்ளை | 1915 |
| விஜயசீலம் | சி. வை. சின்னப்பாபிள்ளை | 1916 |
| சம்சோன் கதை | எஸ். தம்பிமுத்துப்பிள்ளை | 1917 |
| சுந்தரன் செய்த தந்திரம் | எஸ். தம்பிமுத்துப்பிள்ளை | 1918 |
| துன்மார்க்க முடிவு | எஸ். கே. சுப்பிரமணியம் | 1923 |
| காசிநாதன் நேசமலர் | ம. வே. திருஞானசம்பந்தப்பிள்ளை | 1924 |
| இராசதுரை | செம்பொற் கேதீஸ்வரன் செல்லம்மாள் | 1924 |
| நீலகண்டன் ஒரு சாதி வேளாளன் | இடைக்காடர் | 1925 |
| சித்தகுமாரன் | இடைக்காடர் | 1925 |
| அரியமலர் | மங்களநாயகி தம்பையா | 1926 |
| அழகவல்லி | எஸ். தம்பிமுத்துப்பிள்ளை | 1926 |
| கோபால நேசரத்தினம் | ம. வே. திருஞானசம்பந்தப்பிள்ளை | 1927 |
| புனித சீலி | ஞானச் சகோதரர் ஜோன் மேரி | 1927 |
| துரைரத்தினம் நேசமணி | ம. வே. திருஞானசம்பந்தப்பிள்ளை | 1927 |
| நன்னெறிக் களஞ்சியம் | அ. நாகலிங்கம் பிள்ளை | 1927 |
| பாவசங்கீர்த்தன இரகசியப் பலி | - | 1928 |
| காணாமற்போன பெண்மணி | ச. இராசம்மாள் | 1929 |
| தேம்பாமலர் | சாள்ஸ் ரிக்னி | 1929 |
| அருமைநாதன் | ஞானச் சகோதரர் ஜோன்மேரி | 1930 |
| பூங்காவனம் | வண்ணை ம. இராமலிங்கம்பிள்ளை | 1930 |
| வீராம்பாள் | வ. மு. சின்னத்தம்பி | 1930 |
| மேகவர்ணன் | வே. வ. சிவப்பிரகாசம் | 1930 |
| குலநாயகி திலகவதி | ம. க. சின்னையா | 1930 |
| கேசரி விஜயன் | வரணியூர் ஏ. சி. இராசையா | 1932 |
| சிம்மக்கொடி | வரணியூர் ஏ. சி. இராசையா | 1933 |
| ஞானபூமி | சாள்ஸ் ரிக்னி | 1933 |

| | | |
|---|---|---|
| அரங்கநாயகி | வை. ஏரம்பமுதலி | 1934 |
| உத்தம மனைவி | பொன் குமாரவேற்பிள்ளை | 1935 |
| செல்வரத்தினம் | வே. க. நவரத்தினம் | 1935 |
| இதயரத்தினம் | ஞானச் சகோதரர் ஜோன்மேரி | 1935 |
| கற்பின் மாட்சி | சி. வை. தாமோதரம்பிள்ளை | 1936 |
| குப்பையிற் குன்றுமணி | க. இராசரத்தினம் | 1936 |
| தீண்டாமைக்குச் சாவுமணி | எச். நல்லையா | 1937 |
| தீண்டாமைக்குச் சவுக்கடி | எம். ஏ. செல்வராசா | 1938 |
| இன்பக் காதல் | மூத்ததம்பி செல்லப்பா | 1938 |
| இலங்கை இந்தியர் நட்பு | எச். நல்லையா | 1940 |

தொகுப்பு :
**செல்வி கலைவாணி பழனிவேல்**
உயர்தரம் 2011 கலை

## நான்கு வகைக் கவிகள்

**ஆசுகவி** - மற்றவர் புகழ்பாடி அவர்கள் உதவி நாடுபவர்கள்.
**மதுரகவி** - மொழிநயத்துடன் கூடிய இனிய கவி பாடுபவர்.
**சித்திரகவி** - கவிதை வரிகளால் கவிபாடுபவர்.
**வித்தாரக்கவி** - ஏதோ ஒரு பொருளைப்பற்றி விரித்துக் கவிபாடுபவர்.

## பதினாறு பேறுகள்

1. புகழ்
2. கல்வி
3. வல்லமை
4. வெற்றி
5. நன்மக்கள்
6. பொன்
7. நெல்
8. நல்லூழ்
9. நுகர்ச்சி
10. அறிவு
11. அழகு
12. பெருமை
13. இளமை
14. துணிவு
15. நோயின்மை
16. ஆயுள்

# பெற்றமனம் பித்து பிள்ளைமனம் கல்லு

அந்தக் கிராமத்தவர்களைத் தாக்கிய மலேரியா செல்லம்மாவையும் விட்டுவைக்கவில்லை. பசி, பட்டினியுடன் பதறவைத்தது அவளை.

''என்னங்க, குமாரட்டை ஒருக்கா சொல்லி அனுப்புங்க, நாங்கள் பெற்ற குற்றத்திற்காவது ஏதாவது வந்து செய்வான் தானே''

எனக் கணவனிடம் வேண்டிய செல்லம்மா மீண்டும் போர்வையை இழுத்து மூடிக்கொண்டாள்.

''செல்லம்மா எனக்கு அவன் வருவான் என்ற நம்பிக்கையில்லை. என்றாலும் உன்னுடைய விருப்பத்தை நானேன் மறுப்பான். சரி சொல்லிவிடுகிறன்.'' என்று கூறி, கந்தையா யாரோ படலையைத் திறந்து வருவதை நோக்கினார். அங்கே அயல்வீட்டு மங்கம்மா தேனீருடன் வந்துகொண்டிருந்தாள்.

''ஆர் மங்கம்மாவோ.... ஒருக்காப் பிள்ளை உன்ரை இளையமகனை விட்டு செல்லம்மா வருத்தத்திலை கிடக்கிறதை என்னுடைய மகனுக்குச் சொல்லிவிடு, எனக்கு அவனுக்குச் சொல்ல விருப்பமில்லை. செல்லம்மாதான் சொல்லிப்போட்டுக் கிடக்கிறா'' என்று கூறிக்கொண்டு கந்தையா அருகிலிருந்த சில்வர் பேணியை எடுத்து மங்கம்மாவிடம் நீட்டினார்.

''அப்பு, நான் நேற்று உங்களுடைய மருமகளைச் சந்தையிலை கண்டு கதைச்சனான். அப்ப அவ சொன்னா உங்கடை மகனுக்கு நேரமில்லையாம். நேரமிருந்தால் வருவாராம். வேணுமெண்டால் இன்னொருதரம் சொல்லி அனுப்புறன்'' என்று கூறியபடி தேனீரை வார்த்து கந்தையாவிடம் நீட்டினாள் மங்கம்மா.

கந்தையா செல்லம்மா குடும்பம் பெரிய செல்வந்தராக இருந்தது. அவர்களின் ஒரே மகனாகப் பிறந்தான் குமார். குமாரைச் செல்வத்தின் செல்லமாக ஒரு குறையுமில்லாது வளர்த்தனர். கந்தையாவின் வியாபாரத்தில் ஏற்பட்ட நட்டம் தொடர்ந்ததால் கந்தையா குடும்பம் கொஞ்சம் கொஞ்சமாக ஏழ்மை நிலையை அடைந்தது. இப்படி இருந்தபோதும் தனது பிள்ளைக்குக் கல்விச் செல்வம் வேண்டுமென்ற காரணத்தால் கடன்பட்டுக்கூடப் படிப்பித்தார். குமாரும் கல்வியில் சிறந்து உயர் பதவியைப் பெற்றான்.

குமாருக்கு பல இடங்களில் இருந்து திருமணங்கள் பேசிவந்தன. கந்தையாவும் செல்லம்மாவும் தங்களுடைய மகனுக்கு, தங்களுடைய சொந்தத்திலேயே பெண்ணைப் பார்த்தனர். ஆனால் குமாரோ தான் விரும்பிய வேறிடத்துப் பெண்ணையே திருமணம் செய்தான். அதையும் தாயும் தந்தையும் எதிர்க்கவில்லை.

நாட்கள் விரைந்தன. தாய் தந்தையிடம் வருவதை குமார் குறைத்துக்கொண்டான். ஆனால் பெற்றோரோ அவன் வீடுதேடிச் சென்றார்கள். நாட்டுபுற மாமன், மாமி தன் வீட்டிற்கு வருவதை மருமகள் விரும்பவில்லை. கணவனிடம் கூறினாள். மனைவி சொல்லை மதிக்கும் குமாருக்கு பெற்றோர் பெரிதாகத் தெரியவில்லை. ஒரு நாள் குமார்,

''ஆச்சி, அப்பு உங்களுக்கு ஒண்டு சொல்லுறன்; இங்கை எத்தனையோ பெரியவர்கள் வருகிற இடம். நீங்கள் இங்கை வருவதை மனைவியும் விரும்பவில்லை, எனக்கும் விருப்பமில்லைத்தான். இங்கை வரவேண்டாம். உங்களுக்குத் தேவையான காசை நான் கொண்டுவந்து தாறன்'' என்று சாதுரியமாகக் குமார் கூறினான். அவன் கூறிய வார்த்தைகள் அவர்கள் இருவருக்கும் ஆயிரம் ஊசிகொண்டு குத்தியது போலிருந்தது. இருந்தபோதும் மகன்தானே சொல்லுகிறான் என ஆறுதல் அடைந்தனர்.

குமாருக்கு சம்பளம் உயர்ந்துகொண்டே சென்றது; ஆனால் அவன் பெற்றோருக்கு வழங்கும் பணத்தைக் குறைத்துக்கொண்டே வந்தான். கொடுக்கும் பணத்திற்கு கணக்கு கேட்பான். சிக்கனமில்லை எனச் சீறிப்பாய்வான். புகையிலை, வெற்றிலை பாக்கு பாவிப்பது உடலுக்கு தீங்கென்று முதலைக்கண்ணீர் வடித்தான். காசு செலவு செய்யும்போது கட்டுப்பாடு தேவையென்று கட்டளையிட்டான். பித்துப்பிடித்த பெற்ற மனங்கள் பிதற்றிக்கொண்டது. அவன் சொல்வதெல்லாம் எங்கள் நன்மைக்குத்தானே என்று நினைத்துக்கொண்டனர்.

குமாருக்கு நான்கு பிள்ளைகள் பிறந்தன. தங்களது பேரப்பிள்ளைகள் என்று தூக்கிக்கொஞ்ச கந்தையாவோ செல்லம்மாவோ கொடுத்து வைக்கவில்லை. அவர்கள் பேரர்கள் என குமாரோ மனைவியோ சொல்லிவைக்கவுமில்லை.

குமாரின் மனைவி ஒருநாள் ''நீங்கள் பொறுப்பற்ற மனிதராய் உங்கள் அப்பா அம்மாவிற்கு இப்பவும் பணம் கொடுத்துக்கொண்டு இருக்கிறியள்'' எனப் பேசுவதோடு

''எங்களுக்கும் இப்ப நான்கு பிள்ளைகளுக்கும் பாடசாலைச் செலவு என்னவென்று தெரியும்தானே. அத்தோடு பிள்ளைகளின் எதிர்காலத்திற்காவது எதாவது சேர்த்து வைத்திருக்கிறியயோ''

என்று கேட்டாள். மனைவி சொல்லே மந்திரம் எனக்கொண்ட குமாரும் தனது பெற்றோருக்கு கொடுக்கும் தொகையையும் சிறிது சிறிதாகக் குறைத்து முற்றாக நிறுத்திக்கொண்டான்.

செல்லம்மாவை மலேரியாக்காய்ச்சல் கடுமையாகப் பாதித்தது. மகனைப் பார்க்கவேண்டும், பேசவேண்டும் என்று ஆவாவுடன் அவனை கூட்டிவாருங்கள் என மன்றாடினாள். கந்தையாவும் தனது மனைவியின் கடைசி ஆசையைத் தீர்ப்பதற்காக மகன் குமார் வீட்டை நோக்கி ஓடினார். ஆனால் அவருடைய மருமகளோ

''அவர் இப்ப இங்கை இல்லை, வந்தால் சொல்லுறன்'' என்று வேண்டா வெறுப்புடன் கூறினாள். செல்லாமவும் மகனைக் காணாமலேயே மேலுலகம் சென்றுவிட்டாள்.

செல்லம்மா இறந்து பல மாதங்கள் கழிந்தன. குமாருக்கு சிறுநீரகத்தில் பாதிப்பு ஏற்பட்டு வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டான். அவன் உயிர்வாழ்வதாயின் சிறுநீரக மாற்றுச்சிகிச்சை உடனே செய்தாகவேண்டும் யாராவது தமது சிறுநீரகம் ஒன்றைத் தானம் செய்தால் அது மாற்றமுடியும் என வைத்தியர் கூறினார்.

குமாரின் மனைவியோ, அவளது சொந்தக்காரரால் இயலாது எனக் கைவிரித்தனர். இச் செய்தி கந்தையாவின் காதுகளுக்கு எட்டியது. கந்தையா இடியேறு கேட்ட நாகம் போலானார். பெற்றமனமல்லவா கந்தையா; ஆஸ்பத்திரியை நோக்கி தனது மகனுக:கு தன்னுடைய ஒரு சிறுநீரகத்தைக் கொடுப்பதற்காகச் சென்றுகொண்டிருந்தார்.

ஆக்கம்
செல்வி அருந்தா ஆனந்தஈஸ்வரன்
தரம் 10 பி

# தகவல் ஒரு போதைப்பொருள்

போதைப்பொருளானது அதை உட்கொள்பவர்களை எவ்வாறு மயக்கத்தில் ஆழ்த்தும் என்பது பெரும்பாலும் அனைவரும் அறிந்ததே. அவ்வாறு தகவலும் அதைப் பெறுபவர்களை மயக்கத்தில் ஆழ்த்துகின்றது. இது பற்றி அறிவதற்கு முன்பாக தகவல் என்றால் என்ன? அதில் உள்ளடங்குவதாகிய தரவு என்றால் என்ன? போன்ற வினாக்களுக்கு விடையைநோக்கி, பின் தகவல் பற்றி விரிவாக ஆராய்வோம்.

தகவல் தொழினுட்ப அகராதிகள் தரும் அர்த்தத்தின்படி தகவல் என்பது ஒழுங்கமைக்கப்பட்ட தரவுகள் என்று பொருள்படும். இதில் தரவு என்பது மெய் விபரம் என்று கூறப்படும். அது ஒப்பீட்டளவில் தூய்மையானது, உண்மையானது. ஆனால் தகவல் என்பது ஏதோ ஒரு நோக்கோடு தரவுகளை ஒழுங்கமைக்கும்போது உருவாகின்றது. எனவே அந்த ஒழுங்கிற்கு ஏற்ப தரவுகள் உடைக்கப்படும் அல்லது சிதைக்கப்படும் அல்லது திரிக்கப்படும் அல்லது மிகைப்படுத்தப்படும். தகவல் என்பது தரவோடு ஒப்பிடுகையில் தூய்மை குறைந்தது. இதனைப் பின்வரும் உதாரணத்தின்மூலம் விளங்கிக்கொள்ளலாம்.

தரவு என்பது மரத்திலுள்ள பூவைப்போன்றது. அது இயல்பானது, கலப்பற்றது. ஆனால் தகவல் என்பது ஏதோ ஒரு ஒழுங்கில் கோர்க்கப்பட்ட பூக்களாலான மாலையைப் போன்றது. அதில் எந்தப்பூவை எங்கே வைப்பது, எந்த இலைக்குப்பின் அல்லது பூவிற்குப் பின் வைப்பதெல்லாம் மாலை கட்டுபவரின் தெரிவினிலே தங்கியுள்ளது.

எனவே தகவல் உள்நோக்கமுடையது. எல்லாத் தகவல்களின் பின்னாலும் யாராவது ஒரு சூத்திரதாரி இருப்பார். எனவே உருவாக்குவோரின் அபிலாசைகளுக்கு ஏற்ப சிதைக்கப்பட்ட அல்லது மறைக்கப்பட்ட அல்லது மிகைப்படுத்தப்பட்ட மெய் விபரங்களின் சேர்க்கையே தகவல் எனப்படுகின்றது. இதன் படி கூறின் தகவல் யுகம் என்பது தகவல்களைத் தருபவர்களின் யுகமே. அதாவது தகவல்களை உருவாக்குபவர்கள் அத்தகவல்களை எவ்வுள்னோக்கத்தோடு உருவாக்கு கின்றார்களோ அந்த உள்நோக்கத்திற்கேற்ப வடிவமைக்கப்படவேண்டிய யுகமே. தகவல் யுகம் என்பதும் ஒரு தகவல்தான். பூகோளக் கிராமம் என்பதும் அப்படியொரு தகவல்தான். இத்தகவல்களைத் தருவோன் நுகர்வோர்களாகிய நாம் தகவலுக்கும் தரவுக்கும் இடையேயான வேறுபாட்டினைக் காணவியலாது மயங்கிக்கிடக்கவேண்டுமென்றே விரும்புகின்றன.

தகவல்களால் போதை ஊட்டப்பட்டு மெய்யெது பொய்யெது என்று தெரியாது நாம் பித்துப்பிடித்து அலைபவர்கள் போலாகிடவேண்டும் என்றே எதிர்பார்க்கின்றனர். அவர்கள் படைக்கவிரும்பும் ஒரு உலகத்திற்காக எங்களை அவர்களுடைய அலைவரிசையில் சிந்திக்கவைக்கும் மனோவசியவேலைகளை எம்மைச் சுற்றி மொய்த்துக்கொண்டிருக்கும் தகவல்களே செய்கின்றன. இந்த அர்த்தத்தில்தான் தகவல்களை போதைப்பொருள் என்று கூற வேண்டியுள்ளது. இப்போதைப் பொருளை அருந்திக்கிறுங்கும் எவரும் அதை வழங்கும் நபரால் பின்னப்படும் ஒரு உலக மகா வலைக்குள் சிக்கிய இரண்டு காற்ப் பூச்சிகளாக மாறிவிடுகின்றனர்.

தொழினுட்ப வார்த்தைகளில் கூறின் தகவல் தொழினுட்பம் எனப்படுவது மேற்குலகின் கண்டுபிடிப்பே. பெருமளவு தகவல்களைத் தருவோராக அவர்களே காணப்படுகின்றனர். அதாவது

மேற்குலக நாடுகளின் நோக்கு நிலையிலிருந்து அவர்களது விருப்பு வெறுப்புக்களுக்கேற்ப வடிவமைக்கப்படவேண்டிய ஒரு யுகத்தையே நாம் தகவல் யுகம் என்கின்றோம்.

இந்தப் பூமியை பணமுதலைகளான முதலாளித்துவ ஆட்சியாளர்கள் தமக்கிடை.யில் பங்கிடுவதற்கு வசதியாக அதை ஒரு கிராமமாக சுருக்கிவிடவேண்டும் என்ற ஒரு மேற்கத்திய கலையின் மறுபெயரே தகவல் யுகம்.

இந்த நிலையில் தமிழர்களும், தமிழர்களைப் போன்ற ஏனைய ஆசிய, ஆபிரிக்க லத்தீன் அமெரிக்க நாடுகளும் சிறிய இனங்களும் எம்மைச் சூழ்ந்து வரும் இந்த மகாமாய வலைக்குள் இருந்து தப்புவது எப்படி? தகவலைப் பிழிந்து தரவுகளைத் தனித்து எடுத்து உண்மையைத் தரிசிப்பது எப்படி? இதன் முக்கியத்துவத்தை 2000 ஆண்டுகளுக்கு முன்பே தெரிந்த திருவள்ளுவர்

*''எப்பொருள் யார்யார் வாய்க் கேட்பினும் அப்பொருள்*
*மெய்ப்பொருள் காண்பதறிவு''* என்ற குறளின் மூலம் உணர்த்தியிருக்கின்றார்.

இந்த அறிவின் விருத்திக்கு இந்த நவீன காலத்திலே துணைபுரியும் சாதனங்கள், தொழினுட்பங்கள் எவையென ஆராயின் கணினி, இணைய உபயோகிப்பு முக்கிய இடத்தைப் பெறுகின்றது. இந்த இணையமானது நோயையும் சொல்லி நோய்க்கு மருந்தையும் சொல்லும் விசித்திர வைத்தியர்போல அறிவைப் புறம் மயக்குவதோடு மறுபுறம் அது அறிவை முன் எப்பொழுதினையும் விட வேகமாக விடுதலை செய்தும், விருத்திபெறப்பண்ணியும் வருகிறது.

முன்பு ஒரு காலம் மனிதகுலம் தனது சக்தி தேவைகளுக்காக நிலக்கரியிலும், நீராவியிலும் தங்கியிருந்தது. பின்பு அது நிலக்கீழ் எண்ணெயிலும் நீர் மின்வலுவிலும் தங்கியிருக்கலாயிற்று.

இனிவரும் காலங்களில் அது மூளையின் சக்தியில் அதாவது சிந்தனா சக்தியில் தங்கியிருக்கும் நிலை தோன்றும் என்று அறிஞர்கள் எதிர்வுகூறத் தொடங்கி விட்டார்கள். ''புத்திமான் பலவான்'' என்ற பழமொழி மீண்டும் மெய்ப்பிக்கப்படும் நிலை தோன்றும். என்பதைக் கருத்திற்கொண்டு நாமும் தகவல் வெள்ளத்தில் நீச்சல் அடிப்பதற்கு தயாராகுவோம்.

ஆக்கம்
செல்வி . ஆஷா உதயசீலன்
உயர்தரம் 2009 கலை

''மகிழ்ச்சி எல்லா நோய்களையும் தீர்க்கும் அற்புத மருந்து சந்தோஷமாக வாழ முற்பட்டால் வாழ்வில் நஷ்டமே இராது''

*ஜான்ரஸ்கின்.*

''சிந்தனை இல்லாமல் முன்னேற்றம் இருக்க முடியாது''

*ஜெ.கிருஷ்ணமூர்த்தி.*

# விடாமுயற்சி

டிசம்பர் மாதம் பாடசாலை விடுமுறைநாள். மாதவன் மிகுந்த கவலையில் இருந்தான். வகுப்பாசிரியர் அவனிடம் கூறிய விடயமே இவ்வாறு அவனைக் கவலைகொள்ளச் செய்தது.

''மாதவா நீ இம்முறை பரீட்சையைச் சரியாகச் செய்யவில்லை. அதுவும் அடுத்தவருடம் சாதாரண தரப் பரீட்சை எழுதவுள்ளாய். அப்படிப்பட்ட நிலையில் உன்னை இம்முறை பதினோராம் வகுப்பிற்கு தரமுயர்த்த முடியாது. ஆகையால் அடுத்தவருடமும் நீ பத்தாம் வகுப்பிலேதான் படிக்கவேண்டி ஏற்படும்'' என்று ஆசிரியர் கூறியதை நினைத்து மாதவன் மிகவும் கவலைப்பட்டுக்கொண்டிருந்தான்.

ஏனைய மாணவர்கள் டிசம்பர் விடுமுறையை எண்ணி அங்குமிங்கும் குதூகலத்தில் ஓடித்திரிந்தனர். மாதவன் ஓரமாக இருந்து யோசித்துக்கொண்டிருந்தான். இதனை மற்றொரு ஆசிரியரான முகுந்தன் மாஸ்ரர் கண்டார். மாதவனிடம் வந்த முகுந்தன் மாஸ்ரர் ''என்ன யோசித்துக் கொண்டிருக்கிறாய்?'' எனக் கேட்டார். அதற்கு மாதவன்

''இல்லை சேர், என்னை இந்தத்தடவை பாஸ் செய்ய மாட்டார்களாம்'' என்றான்.

''யார்சொன்னார்'' என்று கேட்டார் முகுந்தன் மாஸ்ரர்.

''வகுப்பாசிரியர்தான்''

''ஓ.. அப்படியா, சரி நீ இங்கே வா..'' என அவனை அழைத்த மாஸ்ரர் அவனிடம் மனம்விட்டுப் பேசினார்.

''இங்கை பார் மாதவா, உனது நன்மைக்காகத் தான் வகுப்பாசிரியர் அப்படிக் கூறியிருப்பார். அடுத்தவருடம் நீ சாதாரணதரப்பரீட்சை எழுதவுள்ளாய். அப்படியான நிலையில் பத்தாம் வகுப்பிலிருந்து பாஸ் ஆக்கினால் நிச்சயமாக சாதாரணதரப் பரீட்சையில் சித்தியடைய மாட்டாய்.''

''உண்மையாகவா சேர்'' கேட்க மனதிற்கு கஷ்ரமாக இருக்கிறது.

''அரசாங்கம் நடத்துகிற முக்கியமான பரீட்சை. ஆகையினால் பத்தாம் வகுப்பில் உரிய தயார்ப்படுத்தலைச் செய்ததும் நீர் பதினோராம் வகுப்பிற்குச் சென்றால் எவ்வித சிரமமுமின்றி பரீட்சையில் சித்தியடையலாம்''

''சேர்! நீங்கள் சொல்வது கொஞ்சம் புரிகிறது. ஆனாலும்....''

''நீ உன்னை இம்முறை பாஸ் செய்யாததையிட்டுக் கவலைப்படாதே. இன்னும் கடுமையாகப் பாடங்களைப் படித்து, அடுத்தவருடமாவது கூடிய புள்ளிகளைப் பெறுவதற்கு முயற்சி செய்'' ஆசிரியர் கூறியபடியே அவ்விடத்தை விட்டு நகர்ந்தார்.

ஆசிரியர் நகர்ந்தாலும் ஆசிரியர் கூறிய விடயங்கள் அவன் மனதை விட்டு நகராது தொடர்ந்தது. கேள்விகள் அவன் மனதில் வேள்விகள் செய்தன.

மாதவன் தனது மனதிற்குள் திடம் கொண்டான். அடுத்தவருடமும் பத்தாம் வகுப்பில் படித்தாலும் படிப்பில் மட்டுமே முழுக்கவனத்தையும் செலுத்தி அதிக புள்ளிகளைப் பெற்று சித்திபெற வேண்டுமென்று தன்னுள் தீர்மானித்து அதனைச் செயற்படுத்தவும் தொடங்கினான். அன்றுதொடக்கம் மிகவும் ஆர்வத்துடன் பாடத்தில் கவனம் செலுத்தி கற்றமையால் அவனுக்கு பாடம் கடினமாக இருக்கவில்லை. இவனது ஆர்வத்தில் முதலாம் தவணைப்பரீட்சையில் அதிக புள்ளிகளைப் பெற்றான்.

''வகுப்பாசிரியர் கூறிய விடயமும் முகுந்தன் மாஸ்ரர் கூறிய விடயமும் மிகவும் பொருத்தமானது'' என்பது மாதவன் தன் சிந்தனையில் அவ்வப்போது தோன்றி மறைந்தது. இதனால் அவனது ஆர்வம் இரட்டிப்பாகியது. இறுதித்தவணையிலும் போதிய புள்ளிகளைப் பெற்று சாதாரண தரப்பரீட்சையிலும் சிறப்பாகச் செய்து அகில இலங்கை ரீதியில் சிறந்த பெறுபேறுகளையும் பெற்றான். தன்னுடைய பெறுபேறுகளை முதன்முதலாக முகுந்தன் மாஸ்ரரிடமே கூறவேண்டுமென தேடிச்சென்றான்.

மாதவன் சித்திபெற்றிருப்பதை அறிந்து முகுந்தன் மாஸ்ரர் அவனைப் பாராட்டி வாழ்த்தினார்.

''பார்த்தாயா நீ அன்றே மனம்தளர்ந்து சோர்வடைந்து போயிருந்தால் இந்தளவுக்கு உன்னால் சாதனை புரிந்திருக்க முடியாது. ஆகவே எந்தவொரு பின்னடைவையும் முன்னேற்றத்தின் படிக்கல்லாக மாற்றிக்கொள்ள நாம் பழகிக்கொள்ள வேண்டும்''

மாதவனின் விடாமுயற்சியே பெருவெற்றியைத் தந்தது.

ஆக்கம்
செல்வி சாளினி குகனேந்திராஜயர்
தரம் 10 பி

---

# பொதுக்குறிப்புகள்

- வெற்றி பெறுவோம் என்ற நம்பிக்கையுடன் இருங்கள். தோல்வி ஏற்பட்டுவிடுமோ என்ற பயம் இருந்தால் அது வெற்றியைப் பாதிக்கும்.
- தேர்வில் மதிப்பெண்கள் குறைவாக இருந்தால் ஏமாற்றம் அடையாதீர்கள். காரணம் என்ன என்பதை ஆராய்ந்து பாருங்கள். தவறைத் திருத்திக்கொள்ளுங்கள். வெற்றியும், தோல்வியும் எதிரிகள் அல்ல. தோல்வியில் இருந்து கற்றுக் கொள்வதே வெற்றிக்கு சரியான வழி.
- கற்பதில் ஆர்வம் காட்டுங்கள். பாடத்திட்டத்தில் இருப்பதைவிட அதிகமாகக் கற்றுக்கொள்ள முயற்சி செய்யுங்கள். அதிக அறிவு பாடங்களை எளிதாக்கும்.
- ஒவ்வொரு நிலையிலும் தன்னம்பிக்கை கொள்ளுங்கள்.
- தேர்வுக்கு முன்பெ அனைத்துப் பாடங்களையும் மீண்டும் ஒருமுறை படித்துப் பார்த்துக்கொள்ளுங்கள். கடைசி நிமிடம்வரை அவசரம் வேண்டாம்.
- உங்கள் மீது நம்பிக்கை வையுங்கள்; வெற்றி உங்களுக்கே.

# தமிழ்க் கவிதை வரலாற்றில் மஹாகவி பெறும் இடம்

ஈழத்து நவீன கவிதை முன்னோடிகளுள் முதன்மையானவர் மஹாகவி. நவீன கவிதையின் உள்ளடக்கத்திலும் உருவத்திலும் இவர் புகுத்திய புதுமைகள் பல. முன்னுதாரணமற்ற வகையில் யதார்த்த நெறியினைக் கவிதையில் கையாண்டவர். அவர் மனித வாழ்க்கையில் ஓர் ஆழமான நம்பிக்கையையும் மனிதாபிமானத்தையும் அவர் தன் கவிதைகளில் வெளிப்படுத்தியவர். சமத்துவமான ஓர் புதிய சமூகத்தை விரும்பியவர். சாதாரண மக்களின் அன்றாட வாழ்வை தனது கவிதைப் பொருளாகக் கொண்டவர். நவீன காவியங்கள், பா நாடகங்கள் ஆகியவற்றின் வளர்ச்சியில் பெரும்பங்கு வகித்தவர். பழைய யாப்பு வடிவங்களை பேச்சோசைப் பாங்கில் எளிமைப்படுத்தி தற்கால உரைநடைக்கு சமாந்தரமாக வளரத்தவர். கிராமிய வழக்கு மொழியை கவிதையில் தாராளமாகக் கையாண்டவர். இத்தகைய காரணங்களால் தற்கால தமிழ்க்கவிதை வளர்ச்சியில் மஹாகவி முக்கிய இடம் பெறுகிறார். மஹாகவியை விட்டு விட்டு இன்றைய தமிழ்க்கவிதை பற்றி நாம் பேசமுடியாது.

இளமையிலேயே தன்னை முன்னுணர்ந்து பாடியவர். இவரது சொந்தப் பெயர் து. உருத்திரமூர்த்தி, இவரது தந்தை துரைசாமி ஒரு புகழ்பெற்ற நாதஸ்வர வித்துவான். மஹாகவி 1927 இல் அளவெட்டியில் பிறந்தார்.

இவர் தனது 14ஆவது வயதில் கவிதை எழுத ஆரம்பித்தார். முதலில் ''பண்டிதன்'' என்னும் புனைபெயரில் கவிதைகள் எழுத ஆரம்பித்தார். மஹாகவி, புதுக்கம்பன், புதுநாப் புலவர், மாபாடி, மகாலட்சுமி முதலிய புனைபெயர்களிலும் இவர் கவிதைகளை எழுதினார்.

1943இல் கிராம ஊழியன், மறுமலர்ச்சி, ஈழகேசரி, ஆனந்தன் போன்ற இதழ்களில் இவரது ஆரம்பகாலக்கவிதைகள் பிரசுரமாகியது. இவர் சில சிறுகதைகளையும் எழுதினார். வேதாங்கம், பரமசிவம், ஈகை, உலகம் கோனலாது, நஞ்சு போன்றன சில கதைகளாகும்.

இவர் சடங்கு, ஒரு சாதாரண மனிதனது சரித்திரம், கந்தப்ப சபதம், கண்மணியின் காதை ஆகிய காவியங்களையும், கோடை முற்றிற்று, புதியதொரு வீடு முதலிய பா நாடகங்களையும் அறுபதின் பின்னரே இவர் படைத்தார்.

பாரதிதாசனும் கலைவாணரும் தனக்கு தாயும் தந்தையும் போன்றவர்கள் என்று மஹாகவி ஒருமுறை கூறியுள்ளார். இருப்பினும் இவர்களை விட்டு இவர் வெகுதூரம் சென்றுவிட்டார். யதார்த்த பூர்வமாகக் கவிதையில் சித்தரித்துக்காட்டியமை தமிழ்க் கவிதைக்கு மஹாகவி வழங்கிய முக்கியமான பங்களிப்பு.

''இன்னவைதாம் கவி எழுத ஏற்றபொருளென்று பிறர்
சொன்னவற்றை நீர் திருப்பிச் சொல்லாதீர்
சோலை, கடல், மின்னல், முகில், தென்றலினை மறவுங்கள்
மீந்திருக்கும் இன்னல், உழைப்பு, ஏழ்மை, உயர்வு
என்பவற்றைப் பாடுங்கள்'' என்று தன் ஆரம்ப காலத்திலேயே அவர் எழுதினார்.

நிகழ்காலச் செய்திகளையும் பிரச்சினைகளையும் கவிதைகளில் ஆண்டு, அதனை இன்றைய யுகத்திற்கு இழுத்துவரல் அவசியமாகும் என்று பிற்காலத்திலும் அவர் எழுதினார்.

''இன்றைய காலத் திருக்கும் மனிதர்கள்
இன்றைய காலத் தியங்கும் நோக்குகள்
இன்றைய காலத் திழுப்புகள் எதிர்ப்புகள்
இன்றைய காலத் திக்கட்டுக்கள்''

ஆகியவையே கவிதையில் இடம்பெறவேண்டும் என அவர் சொன்னார்.

சமகால கால உணர்வு, சமூக உணர்வு, யதார்த்தம் ஆகியவையே அவரது கவிதைக் கொள்கையின் அடிப்படையாகும். இவரது பெரும்பாலான படைப்புக்களிலே இவற்றைக் காணலாம். ஆரம்பக்காலக் கவிதைகள் சிலவற்றில் கற்பனாவாதப் பண்புகள் காணப்படுகின்றபோதிலும் யதார்த்தப் போக்கே இவரது பிரதான படைப்புக்களின் முக்கிய பண்பாகும்.

கிராமிய வாழ்க்கையை மகாகவிபோல் கவிதையிற் கொண்டுவந்த பிறிதொரு கவிஞன் தமிழில் இல்லை எனலாம். இவரது படைப்புக்கள் யாழ்ப்பாணத்துக் கிராமமக்களின் வாழ்வையே மையமாகக் கொண்டது. ஆரம்பக்காலக் கவிதைகளில் நகரவாழ்க்கையின்மீது வெறுப்பும், கிராமத்தின் மீது அளவிறந்த மோகமும் காணப்படுகிறது. கிராமம், யாழ்ப்பாணம் செல்வேன், எங்களூர், செல்லாக் காசு முதலிய கவிதைகளில் இப்பண்புகளைக் காணலாம்.

கவிதை வெளிப்பாட்டிற்கு செய்யுளையே ஊடகமாகக் கொண்டார். கவிதை யாப்புநிலைப்பட்டே இயங்குவதென்ற கருத்தில் மஹாகவிக்கு உறுதிப்பாடு இருந்தது. வெண்பா, அகவல், விருத்தவகைகள், கட்டளைக் கலித்துறை, கட்டளைக் கலிப்பா போன்ற செய்யுள் வடிவங்களையே மஹாகவி அதிகம் பயன்படுத்தியுள்ளார். இவற்றில் சீர், தளை போன்ற அடிப்படையான யாப்பு விதிகளை அவர் மீறவில்லை.

இந்தியா - இலங்கை ஆகிய இருநாட்டுக் கவிதைப் போக்குகளையும் நாம் ஆராயும்போது தமிழ்நாட்டில் செய்யுள் உடைந்து வசன கவிதை தோன்றியுள்ளதையும், இலங்கையில் செய்யுளில் உடைவு நிகழாமல் அது பேச்சோசை என்னும் ஒரு புதிய கட்டத்திற்கு உயர்த்தப்பட்டுள்ளது. இவற்றில் பெரும்பாலானவை மஹாகவியினுடையதே எனலாம். இத்தன்மையான பண்பினைப் பெற்ற கவிதைகளில் தரத் தொகைப் பெறுமானங்களில் மஹாகவியே முதன்மை பெறுகின்றார். காதலிலும் தாமதம் ஏன், சிகரத்தை நான் அமைப்பேன் போன்ற கவிதைகள் ஊடாக மஹாகவியின் தனித்துவத்தை உணரமுடிகிறது.

தமிழ்க் கவிதைக்கு ஒரு புதிய உயிரைக்கொடுத்த பாரதியின் கவிதைகளில் கூட பேச்சுவழக்கை நாம் அரிதாகவே காண்கிறோம். இதுபோலவே பாரதிதாசனதும் நிலையாகும். ஆனால் கவிதை வரலாற்றில் அல்லது தமிழ்ச் செய்யுள் வரலாற்றில் பேச்சுத் தமிழை பெருமளவு கையாண்ட ஒரேயொரு தமிழராக மஹாகவியே காணப்படுகின்றார்.

மஹாகவியின் கவிதைகளில் அவர் படைத்த குறும்பா தனியிடத்தைப் பெறுகின்றது. குறும்பு விளைவிக்கின்ற பா என்றும், குறுகிய பா என்றும் பலர் பலவாறாக இன்று பொருள் கொள்கின்றனர். மஹாகவி கையாண்ட குறும்பா நவீன தமிழ்க்கவிதையின் ஒரு மைல் கல்.

மஹாகவி கருத்துக்களை முதன்மைப்படுத்தாது கருத்துக்களின் ஊற்றுக்கண்ணாக இருக்கும் அன்றாட வாழ்க்கையை முதன்மைப்படுத்தினார். நிகழ்ச்சிகளை அனுபவ ரீதியாக அதன் உயிர்த் தன்மையுடன் சொற்களில் சித்தரித்தார். அதனால் அவரது கலைநெறி, காலம், களம், நிகழ்வு ஆகியவற்றின் ஒருங்கிசைவுபெற்ற கட்புலக் கலைநெறியாக அவருடைய கவிதைகள் அமைந்தன. இந்தவகையில் தொகுத்து நோக்கும்போது ஈழத்துத் தமிழ்க்கவிதை வரலாற்றில் மஹாகவி ஒரு தனியிடத்தைப் பெற்றுள்ளார் என்பதில் எந்தவித ஐயமுமில்லை.

ஆக்கம்
செல்வன் கந்தசாமி சுதாகரன்
உயர்தரம் 2010 கலை



# என் செய்தாய்?

மதி கெட்டிங்கே
மதுவுக்கு அடிமையாகி
கதியற்றுக் குடும்பம்
கலங்கிட வைத்தவனே !

சீரழிந்து போனதடா வாழ்வு
உண்ண உணவற்று
ஊரெங்கும் அலைவதற்கு
என்ன தவறிங்கு
செய்ததுன் உறவு

முன்னோர் தந்த சொத்தை
மதுவுக்காய் விற்றழித்தாய்
தேடிய பணத்தையெல்லாம்
தினமிங்கே செலவு செய்தாய்

மரணப் பாதையில் உன்
பயணம் தொடர்வதன்றி
மண்ணில் உன் குடும்பம்
வாழ நீ என்ன செய்தாய்!



ஆக்கம்
**செல்வன் சந்திரசேகரம் நிசாந்**
உயர்தரம் 2010 கலை

# பயனுள்ள படிப்பிற்கான வழிமுறைகள்

சில பெற்றோர் தம் குழந்தைகளின் படிப்பைப் பற்றிப் பெருமையாகப் பேசுவார்கள். 'என்மகன் காலையில் நாலு மணிக்கே எழுந்து படிக்கத் தொடங்கிவிடுவான்' என்பார்கள். அல்லது 'ராத்திரி பன்னிரண்டு மணிவரை படிக்கிறான்' என்பார்கள். நீண்டநேரம் படிப்பதால் அவன் நிறைய விடயங்களைத் தெரிந்து கொள்கிறான் என்று அவர்கள் நினைக்கிறார்கள். ஆனால் படிப்பைப் பொறுத்தவரை எவ்வளவு நேரம் என்பது முக்கியமல்ல என்பதை அவர்கள் உணர்வதில்லை.

நிறையநேரம் படிக்கும் சில மாணவர்கள் பரீட்சையில் ஏன் அதிக மார்க் வாங்க முடிவதில்லை என்பது நமக்கு ஆச்சரியம் அளிக்கலாம். இதைத் தெரிந்து கொள்ளவேண்டுமானால் 'படித்தல்' என்றால் என்ன என்பதைப் பற்றி நாம் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும்.

பொதுவாக கவனமாக உழைக்கும் எந்த மாணவனும் நல்ல மதிப்பெண் கிடைக்கும் என்று எதிர்பார்ப்பது நியாயம்தான். ஆனால் படிப்பது என்பதை ஒரு முறையான, சரியான வழியில் பின்பற்றாவிட்டால் அவனால் முழு வெற்றியடைய முடியாது என்பதை அவன் உணரவேண்டும். கீழ்வகுப்புகளில் அதிக மதிப்பெண்கள் எடுப்பது சுலபமே. ஏனெனில் அங்கே பாடங்களின் அளவு குறைவு. மேல் வகுப்புக்குச் செல்லும்போது பாடங்களின் எடை கணிசமாக அதிகரிக்கின்றது; புத்தகங்களின் எண்ணிக்கை கூடுகின்றது. எனவே அவன் முனைப்போடு செயற்படவேண்டும். படிப்பில் ஒரு தனிப்போக்கைக் கையாள வேண்டும். பயனுள்ள முறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும்.

இங்கு கவனிக்க வேண்டிய இன்னொரு விடயம் தேர்வின்போது கேள்விகளுக்கு எப்படி விடையளிக்க வேண்டும் என்பது. நிறைய விடயங்கள் தெரிந்த ஒரு மாணவனால் ஏன் அதிக மதிப்பெண்கள் பெறமுடியவில்லை? கேள்விகளை அவன் எவ்வாறு கையாளுகிறான்? எப்படி அணுகுகிறான்? என்பதைப் பொறுத்திருக்கிறது இது.

சற்று விரிவாகவே இதைப்பார்க்கலாம் தேர்வில் நல்ல மதிப்பெண்கள் எடுத்துப் பட்டம் பெறுவதே கல்வியின் முக்கிய நோக்கமாக இருக்கிறது. தேர்வுகள் என்பது மாணவர்களின் சாதனை அளவை குறிப்பிடுவதற்கான ஒரு கருவி. என்றாலும் நமது பல்கலைக்கழகங்களும் கல்வி நிறுவனங்களும் இதற்கு எதிரிடையாகத்தான் உள்ளன- வண்டியைக் குதிரைக்குமுன்னால் இணைத்து விடுவதுபோல். எப்படி இருப்பினும் தேர்வுகளுக்காகப் படிப்பது பற்றி நாம் பார்க்கலாம்.

தேர்வில் நல்ல மதிப்பெண்கள் பெறுபவர்களைக் கவனித்தால் ஒன்று புரியும். தேர்வுக்காகத் தங்களைத் தயார்ப்படுத்திக் கொள்ளும்போதே தேர்வில் எந்தமாதிரியான கேள்விகள் கேட்கப்படுகின்றன என்பதையும் ஒருவாறு அவர்கள் ஊகித்துக் கொள்கிறார்கள். அதை எதிர்கொள்ள தங்களைத் தயார்படுத்திக் கொள்கிறார்கள். எனவே முந்தைய தேர்வுகளின் வினாத்தாள்களைப் பார்த்துக்கொள்வது என்பது முதல்படி.

ஒரு மாணவன் என்ற முறையில் உங்கள் பெற்றோர்களும் ஆசிரியர்களும் தேர்வில் நீங்கள் நல்ல இடத்தைப் பெறவேண்டும் என்று வற்புறுத்துவார்கள். அதில் அதிசயப்படுவதற்கில்லை. அதை நீங்கள் ஓர் ஊக்குவிப்பாக, பொசிட்டிவ்வாக எடுத்துக்கொள்ளலாம். நண்பர்களும்

உதவுவார்கள், நிறைய ஆலோசனைகள் கூறுவார்கள். நிச்சயமாக அவை எல்லாவற்றையும் நீங்கள் கடைப்பிடிக்க முடியாது தான். அவற்றை எல்லாம் உங்கள் மனதில் அலசிப் பார்த்துவிட்டு, உங்களுக்கேயுரிய தனிப்பட்ட வழியைப் பின்பற்றுங்கள். எல்லோரையும் விட அதிக மதிப்பெண் பெறவேண்டும் என்கிற உங்கள் ஆர்வம் உங்களுக்கு ஒருவித பதற்றத்தை ஏற்படுத்தலாம். பதற்றம் வேண்டாம். அமைதியாகத் தேர்வுக்குத் தயாரப்படுத்திக் கொள்வதிலும், தேர்வு எழுதுவதிலும் சிறந்த வழிகளைக் கடைப்பிடியுங்கள்.

### பொருளுணர்ந்து படியுங்கள்

படிப்பது பயனுள்ளதாக இருக்கவேண்டும் என்றால் படிப்பதை பொருளுணர்ந்து கற்கவேண்டும். கீழே உள்ள நான்கு வரிசைச் சொற்களைப் பாருங்கள்.

| 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|
| ப்திமீயு | புத்தகம் | காகம் | ராமன் |
| விருயிப் | குதிரை | கிளி | சீதையை |
| யசீல்மு | நிலக்கரி | பருந்து | மிதிலையில் |
| க்லுனிது | சிகரம் | புறா | மணந்தான் |

இந்த நான்கு வரிசைகளிலும் உள்ள சொற்களை நீங்கள் படித்து நினைவில் வைத்துக்கொள்ள முயன்றால் முதல்வரிசைச் சொற்கள் கடினமாகவே இருக்கும். ஏனெனில் அவை பொருளற்ற எழுத்துக் குவியல்கள். இரண்டாவது வரிசைச் சொற்கள் சற்று எளிதாகவே இருக்கும். அவற்றுக்குப் பொருள் உண்டு. மூன்றாம் வரிசைச் சொற்கள் ஒரே இனத்தைச் சேர்ந்தவை என்பதால் மேலும் சுலபமாகத் தோன்றும். கடைசி வரிசையினுள் சொற்களை ஒரு தடவை பார்த்தாலே போதும், மனதில் நன்கு பதிந்துவிடும். ஏனெனில் அவை ஒரு குறிப்பிட்ட செய்தியைச் சொல்கின்றன.

சில சொற்கள் நமது மனதில் சரியான கருத்தை உணர்த்த முடியாமல் போவதால்தான் நாம் சில பாடங்களைப் புரிந்துகொள்ள முடியாமல் போய்விடுகிறது. கற்பது என்பது சொற்களையும் அவை சுட்டும் பொருள்களையும் உணர்ந்து கொள்வதே. நமக்கு ஏற்கனவே தெரிந்த விடயமென்றால் படிக்கும்போது புரிந்துகொள்வது சற்று எளிதாக இருக்கும். நல்ல ஆசிரியர்கள் இதுபோல் தெரிந்த விடயங்களை நல்ல கருத்தாக மாற்றி மாணவர்களின் மனதில் பதியவைத்து விடுகிறார்கள்.

புகழ்பெற்ற சீன தத்தவஞானி கன்ஃபூஷியஸ் (கி.மு 551 - 479) பற்றிக் கேள்விப்பட்டிருப்பீர்கள். அவர் ஒருமுறை கூறினார் "நான் கேட்பதை மறந்துவிடுகிறேன். நான் பார்ப்பதை நினைவில் கொள்கிறேன். நான் செய்வதைப் புரிந்துகொள்கிறேன்" என்று. இப்போதைய உளவியல் வல்லுநர்கள் நம் நினைவாற்றல் எப்படி என்பதைப்பற்றி இவ்வாறு கூறுகின்றார்கள். நாம் படிப்பவற்றில் - 20% கேட்பவற்றில் - 30%, பார்ப்பவற்றில் 40%, சொல்வதில் - 50%, செயல்புரிவதில் - 60%, படித்து, கேட்டு, சொல்லிச் செய்வதில் 90%.

கற்பது என்பது எதையாவது நம்மனதில் தங்கவைப்பதுதான். அதற்காகக்

கடைப்பிடிக்கவேண்டிய சில வழிமுறைகளும் இருக்கின்றன. எதைக் கற்றாலும் அதற்கு ஒரு குறிக்கோள் இருக்கவேண்டும். அதனால் என்ன பயன் என்பதை உணர்ந்துகொள்ள வேண்டும். இந்த உணர்வு உங்களை பெருமளவில் ஊக்கப்படுத்தும்.

- படிப்பதை ஒரு இனிய அனுபவமாக எடுத்துக்கொள்ளுங்கள். திணிக்கப்பட்ட கடின வேலையாக அல்ல. படிப்பது மாணவர் வாழ்வில் ஒரு வரப்பிரசாதம். நாசப்படுத்துவதல்ல.
- படிப்பதில் ஆர்வம் கொள்ளுங்கள்
- படிக்க உட்காரும்போது மனம் தீவிரமாக இருக்கட்டும். படிக்கும் விஷயத்தில் மனதைச் செலுத்துங்கள். மனதை அலைக்கழிக்காதீர்கள்.
- இதமான சூழ்நிலையில் படிக்கத் தொடங்குங்கள். நல்ல வெளிச்சம், வசதியான இருக்கை அவசியம். கிடைப்பவற்றில் நல்லதை உபயோகியுங்கள்.
- எதைப்படிக்கிறோமம் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்
- ஏதோ ஒரு புதிய நல்ல கருத்து உங்களுக்குத் தோன்றுமானால் அது உங்கள் மனதில் நன்கு பதிந்துவிடும். இதை Heuristic Menthod என்பார்கள்.
- கருத்துக்களை மனதில் அலசிப் பார்த்துக் கொள்ளுங்கள்.
- ஒரு தடவை இரண்டு தடவை படித்தவுடனேயே எல்லாம் புரிந்து விட்டது என்று நினைக்க வேண்டாம்.
- உங்கள் தவறுகளை உணர்ந்து கொள்ளுங்கள். அவை மீண்டும் நேராதபடி கவனமாக இருங்கள். பழைய அனுபவங்கள் உங்களுக்கு உதவட்டும்.
- நிறைய கேள்விகள் கேட்டுக்கொள்ளுங்கள். நோபல்பரிசு பெற்ற ருட்யார்ட் கிப்ளிங் (இவர் இந்தியாவில் பிறந்தவர்) ஒரு கவிதையில் கூறுகிறார்;

  " என்னிடம் ஆறு நல்ல வேலையாட்கள் உள்ளனர். எனக்குத் தெரிந்தவை எல்லாம் அவர்கள் கற்பித்ததே. அவர்கள் பெயர்களை இதோ கூறுகிறேன். என்ன, ஏன், எப்போது, ஏங்கே, எப்படி, யார்?"
- கணிதப் பாடங்களைப் பொறுத்தவரை புத்தகத்தைப் படிப்பது மட்டும் போதாது. புத்தகத்தை மூடிவைத்துக்கொண்டு ஒவ்வொரு கணக்கையும் தனியாகச் செய்து பார்க்கவேண்டும். ஏதோ ஒரு இடத்தில் திகைப்பாய் இருந்தால் மட்டும் புத்தகத்தைப் பார்த்துக் கொள்ளுங்கள்.
- நீண்ட நாள் நினைவில் இருக்க வேண்டியவற்றை மீண்டும் மீண்டும் படித்துப் பாருங்கள். (உதாரணம்) கவிதை, கணிதம், அறிவியல், சூத்திரங்கள் அல்லது தேற்றங்கள்.
- பழைய வினாத்தாள்களையும் பாடத்திட்டங்களையும் திருப்பிப் பார்ப்பதற்காக பத்திரப்படுத்தி வைத்திருங்கள்.
- ஏதாவது ஒரு பகுதி சற்றுச் சிரமமாக இருந்தால் அதை உரக்கச் சொல்லிப் பாருங்கள். அல்லது உங்கள் முன்னால் ஒரு கற்பனை மாணவனை நிறுத்திக்கொண்டு அவனுக்கு விளக்கிக் கொள்ளுங்கள்.
- செயல்முறை விளக்கமானால் அதைச் செய்தே பாருங்கள்.
- மேல் வகுப்பில் படிப்பவரானால் ஒரு பொருள் குறித்த வெவ்வேறு புத்தகங்களைப் படித்துப் பாருங்கள். முடிந்தால் சம்பந்தப்பட்ட இன்டர்நெட்டில் போய் உங்கள் அறிவைப் புதுப்பித்துக் கொள்ளுங்கள். தொழிற்கல்வியானால் அதுபற்றிய பத்திரிகைகள் ஏராளமாக வருகின்றன. அவற்றைப் படிப்பதைக் கட்டாய வழக்கமாக்கிக் கொள்ளுங்கள்.
- ஒரு கட்டுரையைப் படித்தால் அதில் இடம்பெறும் கருத்துக்களைப் பற்றி ஒரு பட்டியல் தயாரியுங்கள்.

நினைவில் வைத்துக்கொள்ளும்படி வரிசைப்படுத்துங்கள். (இது mnemonic முறை எனப்படும். வானவில்லின் ஏழு நிறங்களை நினைவில் வைத்திருக்க VIBGYOR என்ற சொல்லை பயன்படுத்துவது போல).

- பின்னர் இந்த நினைவாற்றலை சோதனை செய்து பார்த்துக்கொள்ளுங்கள். சிரமமோ தவறோ இருப்பின் புத்தகத்தைப் பார்த்துக்கொள்ளுங்கள்.
- வகுப்பறையில் பார்வை ஆசிரியர்மீது இருக்கட்டும். அவர் கூறுவதை சிந்தித்துப் பாருங்கள். இந்த சிந்தனை ஆக்கபூர்வமாக, விமர்சனபூர்வமாக இருக்கட்டும். ஆசிரியர் கூறுவதை குறிப்பெடுத்துக் கொள்ளுங்கள்.
- பாடத்தில் கவனம் செலுத்துங்கள். சிந்தனையை அலையவிடாதீர்கள்.
- கணக்கு, அறிவியல் சம்பந்தப்பட்ட சூத்திரங்களை தனியாக ஓரிடத்தில் வைத்திருங்கள். தேவைப்படும்போது உடனே பார்க்க வசதியாக இருக்கும்.
- கவிதைகளையும், அறிவியல் சூத்திரங்களையும் உருப்போடுவது நல்லது.
- நிறைய புதிய சொற்களைக் கவனியுங்கள். அவற்றின் உச்சரிப்பு, எழுத்துக்களை நினைவில் கொள்ளுங்கள். அந்தச் சொற்களுக்கு வேறு பொருள் உள்ளனவா என்பதை அகராதியைப் பார்த்து அறிந்து கொள்ளுங்கள். ஒரு நல்ல அகராதி ஒரு சொல்லின் பல்வேறு பொருட்களைத் தெரிவிக்கும்.
- பழைய வினாத்தாள்களுடன் உங்கள் அறையில் தனியாக அமர்ந்து தேர்வு மாதிரி விடை எழுதிப் பாருங்கள்.
- செருப்பு எங்கே கடிக்கிறது என்பது அதை அணிந்து நடப்பவருக்குத்தான் தெரியும்.
- உங்களுக்குத் தோதான படிப்பதற்கு ஏற்ற நேரத்தை தேர்ந்தெடுத்துக் கொள்ளுங்கள். சிலருக்கு அதிகாலை பிடிக்கும். சிலருக்கு பின்னிரவுதான் படிப்பதற்கு ஏற்ற நேரம். இது அவரவர் விருப்பம். எல்லோருக்கும் பொதுவான நேரமென்று ஒன்று கிடையாது.

## கால அட்டவணை

- நேரத்தை சரியாகப் பயன்படுத்துவது முக்கியம். படிப்பதற்கான ஒரு கால அட்டவணையைத் தயார் செய்து கொள்ளுங்கள். முக்கியமான காரியங்களைக் குறிப்பிட்டு, வருடம் முழுவதற்குமான ஒன்று, விடுமுறை நாட்களுக்கும், வேலைநாட்களுக்குமான ஒன்று என்று தயாரிக்க வேண்டும். அட்டவணை மிகக் கடினமாக இருக்கவேண்டாம். மற்ற வேலைகள், ஓய்வு, விளையாட்டு என்று எல்லாவற்றுக்கும் இடம்வேண்டும். அட்டவணையை அப்படியே 100 சதவீதம் கடைப்பிடிக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை.
- அவ்வப்போது இடைவெளி இருக்கலாம்.
- சிறிது ஓய்வு உங்கள் மனதுக்குப் புத்துயிர் ஊட்டும்.
- ஆனால் ஒரு வேலையைத் துவங்கும் நேரத்தில் குழப்பம் வேண்டாம். படிப்பதை 6 மணிக்கு ஆரம்பிக்கலாம் என்று நிச்சயித்திருந்தால் சரியாக 6 மணிக்கே தொடங்கி விடுங்கள். 6.05, 6.10 என்று வேண்டாம். அப்படிச் செய்தால் நாளடைவில் இழப்பு உங்களுக்குத்தான்.
- ஒரே பாடத்தைத் தொடர்ந்து படிக்கவேண்டாம். வெவ்வேறு பாடங்கள் வரிசையாக இருக்கட்டும். அதுபோல ஒரு பாடத்தை எப்போது படித்து முடிக்கவேண்டும் என்பதையும் தீர்மானித்துக் கொள்ளுங்கள். சரியாக வேலைசெய்ய அது உதவும். உங்கள் தீர்மானங்களையும், கெடுவையும் நண்பர்களிடம் சொல்லி வைத்திருங்கள். படிப்பில் உங்கள் முன்னேற்றம் பற்றி அவர்கள் விசாரிக்கும்போது உங்களுக்கு உற்சாகமாக இருக்கும்.

# படிப்பு

- சத்தமாகப் படிக்காதீர்கள். ( நல்ல உச்சரிப்பு அல்லது இசை போன்றவை வேறு விடயம்) உரக்கப் படிப்பதானால் ஒரே சீரான வேகத்தில் படியுங்கள். பாடம் சிரமமின்றி சுலபமானதா என்று பார்க்க வேண்டாம். ஒரேயொரு தடவை படித்தாலே எல்லாம் புரிந்துவிட்டது என்று ஏமாற வேண்டாம். மௌனமாக படிக்கும்போது பாடம் கடினமாக இருந்தால், சற்று மெதுவாகப் புரியும்படி படிக்கலாம். அத்துடன் மௌனமாகப் படிப்பது சக்தி இழப்பைத் தடுக்கும். அதனால் அதிக நேரம் படிக்கவும் முடியும்.
- மௌனமாகப் படிக்கும்போது நாக்கோ, உதடுகளோ சொற்களுக் கேற்றபடி அசையாமல் கவனித்துக் கொள்ளுங்கள். படிப்பில் 4 R முறை என்று ஒன்று உண்டு. Read, Recall, Reflect, Review (படியுங்கள், நினைவு கூருங்கள், சிந்தியுங்கள், மதிப்பிடுங்கள்). படிப்பது புரிகிறதா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். அவ்வப்போது படிப்பதை நிறுத்தி, என்ன படித்தோம் என்பதை நினைத்துப் பார்ப்பது நல்லது. பக்கங்களை இயந்திரத்தனமாகத் திருப்பிக்கொண்டிருக்க வேண்டாம். அடிக்கடி சிந்தித்துப்பார்த்து உறுதி செய்து கொள்ளுங்கள். SQ 3 R என்பது இன்னொரு முறை. (Survey, Question, Read,Recall, Review).
- Survey என்பது மொத்த பாடத்தையும் மேலோட்டமாக அதன் பின்னணியைப் பற்றி அறிந்துகொள்வது.
- படிக்கும்போது கையிலொரு பென்சில் வைத்துக்கொள்ளுங்கள்.
- அடிக்கடி குறிப்புகள் எழுதிக் கொள்ளலாம். புத்தகத்தில் உள்ள வரிகளை அப்படியே கொப்பிபண்ணிவிட வேண்டாம். முக்கியமானவற்றை உங்கள் சொந்த நடையில் எழுதிக் கொள்ளுங்கள். முக்கியமான விஷயங்கள் மட்டும் உங்கள் குறிப்பில் இடம்பெறவேண்டும். இவையெல்லாம் முக்கிய விடயங்களைப் புரிந்துகொள்ள உதவும். ஒரே கருத்துள்ள பலசெய்திகள் இருந்தால் அவற்றை விரிவாக எழுதிக்கொள்வதற்கு பதிலாக எளிய வரைபடங்கள் மூலம் குறித்துக் கொள்ளலாம். எழுதும்போது கிறுக்கல்கள் வேண்டாம். வரைபடங்களும், சார்ட்டுகளும் பின்னர் புரிந்துகொள்ளும் விதத்தில் இருக்கட்டும்.
- படிக்கும்போது முக்கிய விடயங்களைக் கோடிட்டுக் கொள்ளுங்கள். பின்னால் படிப்பதற்கு எளிதாக இருக்கும். இயந்திர ரீதியாக படிப்பதில் பயனில்லை. படித்து முடித்தபின் அதிலிருந்து ஏதாவது கேள்விகள் கேட்டால் பதில்சொல்லத் தெரிந்திருக்கவேண்டும். நேற்றைய செய்திப் பத்திரிகையை நீங்கள் படித்துவிட்டீர்கள். அதில் வந்த தலையங்கள் எந்தப் பிரச்சினையைப் பற்றியது என்று நினைவாகக் கூறமுடிகிறதா? ஆழ்ந்து படிப்பதன் மூலம் பெயர்கள், எண்கள், குறிப்பிட்ட கருத்துக்கள் போன்றன நினைவில் நிற்கும்.

ஆக்கம்
**செல்வி அகிதா ஆனந்தஈஸ்வரன்**
உயர்தரம் 2009 கலை

# பலபொருள் தரும் சொற்கள்

- **அங்கம்** : எலும்பு, உடம்பு, அவயவம், அங்கதேசம், வேதாங்கம், மஞ்சம்.
- **அண்டம்** : ஆகாயம், முட்டை, தேவலோகம், பிரமாண்டம்.
- **துண்டம்** : முகம், மூக்கு, துண்டு, சாரைப்பாம்பு, பறவைமூக்கு.
- **கண்டம்** : கண்டசருக்கரை, சட்டை, மிடறு, எழுத்தாணி, திரைச்சீலை, வாளாயுதம், துண்டு.
- **சண்டன்** : யமன், பேடி, சிவன், சூரியன், காலன்.
- **அகம்** : இதயம், வீடு, உள், அதர்மம், மரப்பொந்து, இடம், ஆத்மா.
- **மகரம்** : மகரராசி, முதலை, பூஞ்சுண்ணம், சுறாமீன், விருப்பம்.
- **சிகரம்** : மலை, கடற்றிரை, மலைமுடி, தலை, மானமா துளி, காகம்.
- **திகிரி** : இரதம், மூங்கில், விருத்தம், தேர்ச்சில், சக்கரம், மலை.
- **பகடு** : யானை, பீடு, எருது, ஓடம், எருமைக்கடா, மிதவை.
- **ஞெகிழி** : பாதசிலம்பு, நெருப்புப்பொறி, நெருப்புக்கொள்ளி, நெருப்பு.
- **எகினம்** : நாய், புளியமரம், மாமரம், மான், மானமா, நீர்நாய், அன்னப்பட்சி.
- **தகை** : சுந்தரம், இளைப்பு, பெருமை, கிருபை, குணம்.
- **சிக்கம்** : ஆண்மயிர், உச்சி, மயிர்வாரி, உறி, இளைத்தல், சிறைச்சாலை.
- **கொக்கு** : மாமரம், மூலநட்சத்திரம், கொக்குப்பட்சி, குதிரை, செந்நாய்.
- **ஆகு** : எலி, சாமரம், கொப்புள், பெருச்சாளி.
- **பாகு** : பகிர்ச்சி, குழம்பு, பாக்கு, பரணிநட்சத்திரம், கற்கண்டு, கரை, பால், சாரதி.
- **சாகம்** : சிறுகீரை, வெள்ளாடு, தேக்கமரம், வண்டு, தேனீ.
- **யோகம்** : சாவு, நினைவு, உயர்ச்சி, உபாயம், உற்சாகம், கூட்டம், கூடுதல்.
- **கோகிலம்** : குயில், பல்லி, குரங்கு, துளையுடைப்பொருள்
- **சீகரம்** : சாமரை, மழை, அலை, கரகம், துளி.
- **தகர்** : சுறா, மேடராசி, யானையின் நாண், யாழியின் நாண், பூமி, செம்மறிக்கடா, பராகம், துருவாட்டேறு.
- **நகை** : அக்களிப்பு, பிரகாசம், சிரிப்பு, இகழ்ச்சி, இன்பம், பல், பூவரும்பு, ஆபரணம், மலர்ச்சி, யானைக்கொம்பு.
- **தகவு** : அறிவு, உரிமை, தெளிவு, கிருபை, குணம், ஒழுக்கம், தகுதி, நன்மை, நீதி.
- **சக்கரம்** : பெருமை, சக்கரவாகப்பறவை, பூமி, உற்பத்தி, விருத்தம், தேர்ச்சில், சக்கராயுதம், கடல், மலைமல்லிகை, மலை.
- **நாகம்** : காரீயம், மலை, பவினி, நற்சீலை, புன்னைமரம், யானை, ஆகாயம், ஒலி, தேவலோகம், பாம்பு, குரங்கு.
- **நாகு** : இளமரம், சங்கு, நத்தை, புற்று, இளமை, பெண்மீன், மரைப்பெட்டை, பசு, காரான்.
- **தோகை** : பெண், முன்றானை, சுற்றுமதில், இறகு, மயில், விருதுக்கொடி, வால், மயிற்பீலி.
- **வாகை** : வாகைமரம், ஆசாரம், நன்மை, தவம், உண்மை, குணம், கொடை, மிகுதி, வெற்றி, அறத்தின் துறை.
- **சாகை** : பிரிவு, சாவு, தங்குமிடம், இலை, வீடு, மரக்கொம்பு, வேதநூற்பிரிவு, புயம், வட்டில்.
- **சூக்குமம்** : தவறு, சூக்குமதேகம், நுண்ணறிவு, கடவுள், வஞ்சம், நுட்பம், சிவாகமத்தொன்று.
- **தூக்கு** : உறி, நிறை, குரு, துலாராசி, பாட்டு, ஆராய்தல், உயர்ச்சி, நடனம், தூக்கணாங்குருவி.
- **புங்கம்** : மேல், அம்பு, அம்புக்குதை, புடைவை.
- **சங்கு** : படைக்கலப் பொது, கூடுதல், கைவளை, நெற்றி, கணைக்கால், சங்கு.

தொகுப்பு :

**செல்வி கஜானா கஜேந்திரன்**

தரம் 9 பி

# தொடர்மொழிக்கு ஒரு மொழி

- **அணிசேரா நாடுகள்** : வல்லரசுகளின் அணியில் சேராது நடுநிலைமை வகிக்கும் நாடுகள்.
- **அபிதான கோசம்** : பெயர்ச்சொற்களை அகரவரிசைப்படுத்தி அவை குறிப்பிடும் வரலாறு, பொருள் முதலியவற்றை விளக்கும் நூல்.
- **அபிநயம்** : மனக்கருத்தைக் குறிப்பாய் விளக்கும் அங்க அசைவு.
- **அவசரகாலச் சட்டம்** : நாட்டிலே வன்செயலோ மற்றும் அசம்பாவிதங்களோ தோன்றும் காலத்தில் அத்தியாவசிய சேவை, விநியோகம் முதலியன தடையின்றி நடைபெறுவதற்காகப் பொதுசன பாதுகாப்புச் சட்டத்தின்கீழ், சாதாரண சட்டங்களுக்குப் புறம்பாக விசேடஅதிகாரங்களை அரசுக்கு வழங்கும் சட்டம்.
- **அழைப்பாணை** : குறித்த ஒரு நாளில் நீதிமன்றத்திற்கு சமுகமாய் இருக்கும்படி ஒருவருக்கு நீதிபதியால் விடுக்கப்படும் அதிகாரபூர்வமான கட்டளை.
- **ஆணைக்குழு** : திணைக்களங்கள் முதலியவற்றில் ஒழுங்கீனங்கள் காணப்பட்டவிடத்தோ, நாட்டில் அசம்பாவிதங்கள் ஏற்பட்டவிடத்தோ அவற்றை விசாரித்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கென நியமிக்கப்பட்ட குழுவினர்.
- **ஆதுலர்சாலை** : வறியவர், அங்கவீனம், முதியோர் என்பார்க்கு உண்டியும் உறையுளும் அளித்து ஆதரிக்கும் இடம்.
- **இடைக்காலத் தடை உத்தரவு** : தொடரப்பட்ட ஒரு வழக்கு முடியும்வரை எதிர்கட்சியினர் விண்ணப்பதாரரின் உரிமையை மீறி எந்த அலுவலையும் செய்யாதிருக்கும்படி நீதிமன்றம் இடும் கட்டளை.
- **இணக்க சபை** : உள்ளூரில் மக்களிடையே ஏற்படும் பிணக்குகளைச் சமாதானமாகத் தீர்த்துவைக்கும் அதிகாரம் பெற்ற சபையினர்.
- **உச்சிமகாநாடு** : பலநாடுகளைச் சேர்ந்த அதியுயர்ந்த தலைவர்கள் ஓரிடத்தில் ஒருங்குகூடி உலக சமாதானம், பொருளாதார விருத்தி முதலான விடயங்கள் குறித்து ஆராயும் பேரமைப்பு.
- **உள்ளிருப்பு வேலைநிறுத்தம்** : எதிர்ப்பைத் தெரிவிப்பதற்காக அலுவலர்கள் தத்தம் கடமைகளையும் செய்யாது வெளியேயும் செல்லாது அலுவலகத்தில் சும்மா இருத்தல்.
- **ஊரடங்குச் சட்டம்** : நாட்டில் பதற்றநிலை ஏற்படும் காலத்தில் குறிப்பிட்ட நேர எல்லையுள், மக்கள், தமது வசிபபிடங்களை விட்டு வெளியே செல்லக்கூடாதென அரசாங்கத்தால் இடப்படும் சட்டம்.
- **ஒப்புதல் வாக்குமூலம்** : குற்றம்புரிந்தவர் என ஐயங்கொண்டு விசாரணை நடத்தும்போது ஒருவர் தாம் அந்தக் குற்றத்தைச் செய்ததென அல்லது சம்பந்தப்பட்ட ஒரு செய்கையைச் செய்ததென ஒப்புக்கொண்டு அளிக்கும் வாக்குமூலம்.
- **ஒற்றையாட்சி** : நாடுமுழுவதற்குமான சட்டமியற்றும் உரிமையைக்கொண்ட, இறைமையுள்ள, சகல அமைப்புக்களையும் கட்டுப்படுத்தும் வல்லமையுடைய ஓர் ஆட்சி முறை.
- **கூட்டாட்சி** : மத்தியஅரசும் மாநில அரசும் தத்தம் ஆதிக்கத்துக்கு உட்பட்டவைகளில் கூட்டாகவும், சுதந்திரமாகவும் இயங்கும் வகையில் அதிகாரங்களைப் பிரித்துக்கொள்ளும் ஓர் அரசியல் முறை.
- **சமரகவி** : இறந்தவரை நினைத்து அபரக்கிரியைசெய்யும் கடைசி நாளன்று அவரது சிறப்பு முதலியவற்றைக் குறித்துப் பாடும் பாட்டு.
- **சுற்றுநிருபம்** : ஒரு திணைக்கள அதிகாரி, தன்கீழ்கடமை புரிபவர்களுக்கு காலத்திற்கு காலம் நிருவாக அலுவல்கள் குறித்து அனுப்பும் பணிப்புரை.

- **சேமலாபநிதி** : ஊழியரின் பிற்கால நன்மைக்காக நிறுவனங்களால் ஒதுக்கிவைக்கப்படும் பணம்.
- **தடுப்புக் காவற்சட்டம்** : குற்றம் புரிந்தவரென ஐயமுற்ற ஒருவரை விசாரணை செய்வதற்காக தடுப்புக்காவலில் வைக்க அதிகாரம் வழங்கும் சட்டம்.
- **திணைக்களம்** : ஒரு துறையைச்சேர்ந்த வேலைத்தொகுதி செய்யப்படும் இடம்.
- **தேடற்கட்டளை** : ஓரிடத்தில் ஆட்களையோ, சாதனங்களையோ, பிரசுரங்களையோ தேடுதற்கு நீதிமன்றம் வழங்கும் ஆணை.
- **தொடராமுறி** : ஒப்பந்த அடிப்படையில் இருந்த இருவர் தமக்கிடையே எவ்வித தொடர்பும் இல்லையென்பதை எழுத்தில் உறுதிப்படுத்தும் சாதனம்.
- **நொத்தாரிசு** : நிலபுலம் சம்பந்தமான ஆவணங்களை எழுதுவதற்கு அரச அனுமதிபெற்ற உத்தியோகத்தர்.
- **பஞ்சாயம்** : உறுப்பினர் ஐவரைக்கொண்ட நியாய சங்கம்.
- **படைக்கல சேவிதர்** : சபாநாயகரின் வருகைக்கு முன்னதாக கட்டியக்கோலுடன் பாராளுமன்றத்திற்கு வரும் உத்தியோகத்தர்.
- **பணவீக்கம்** : ஒரு நாட்டிலுள்ள பொருட்களின் பொதுவிலைமட்டம் தொடர்ச்சியாகவும், படிப்படியாகவும் கணிசமான அளவு அதிகரித்துச் செல்லும் நிலை.
- **பிடியாணை** : கட்டளை வழங்கப்பட்டும் நீதிமன்றத்திற்கு சமூகமளிக்காதிருந்த ஒருவரைக் கைதுசெய்து வருமாறு நீதிபதி விடுக்கும் கட்டளை.
- **பிரசைகள் குழு** : கிராமங்களிலே, நெருக்கடிகாலங்களில் ஏற்படும் அசம்பாவிதங்களை அரசினருக்கும், ஆயுதப்படையினருக்கும் எடுத்துரைத்து நிவாரணம் பெறுவதற்காக அமைக்கப்பட்டுள்ள சபை.
- **பேரேடு** : ஒவ்வொரு கொடுக்கல் வாங்கல்களிலும் ஏற்படும் வரவு செலவுப் பதிவுகளைப் பதிவுசெய்யும் பல்வேறு இனக் கணக்குகளை உள்ளடக்கிய பிரதான புத்தகம்.
- **பொதுவுடைமை** : பொதுவாக அனைத்து வளங்களையும் சிறப்பாக உற்பத்திச்சாதனங்களையும் அரசின் உடைமையாக்கி, எல்லோரும் தத்தம் தகுதிக்கேற்ப உழைத்து வாழும் நிலை.
- **மறுப்பாணை** : ஒரு பிரேரணையையோ சட்டத்தையோ நிறைவேற்ற முடியாதவாறு தடைசெய்து நிராகரிக்கும் சட்டம்.
- **வர்த்தமானி** : அரசினது அறிவித்தல்களையும், விளம்பரங்களையும், பிறவற்றையும் தாங்கி வெளிவரும் அரசாங்கப் பத்திரிகை.
- **வாடகை** : பிறருடைய வீடு, கடை, வாகனம் மற்றும் பொருளைப் பயன்படுத்துவோர் உரிமையாளருக்குச் செலுத்தும் பணம்.
- **விளக்கமறியல்** : குற்ற விசாரணைக்காக ஒருவரைப் பாதுகாப்பில் வைத்தல்.
- **விசா** : ஒரு நாட்டுப்பிரசை இன்னொரு நாட்டில், தற்காலிகமாகத் தங்குவதற்குப் பெற்றுக்கொள்ள வேண்டிய அனுமதி.
- **வெள்ளையறிக்கை** : தகவலின் பொருட்டு ஆட்சியாளர் பூர்வாங்கமாக வெளியிடும் அறிக்கை.
- **வெள்ளைக்கவி** : பொருளாழமும் சுவையுமுள்ள பாட்டு.
- **வெள்ளோட்டம்** : புதிதாகச் செய்யப்பட்ட தேர், கப்பல் என்பவற்றை முதன்முதலாகச் செலுத்திப்பார்த்தல்.
- **வேட்பாளர்** : தேர்தல் ஒன்றில் தமது கொள்கைகளை விளக்கி தம்மை ஆதரிக்கும்படி வாக்காளரை வேண்டி நிற்பவர்.
- **வேத்தியல்** : அரசர், அமைச்சர் முதலிய உயர்வகுப்பினர் கண்டுகளிப்பதற்காக ஆடப்படும் கூத்து.

தொகுப்பு :
**செல்வி சிவாஞ்சலி சிவஞானம்**
தரம் 9 ஏ

# புலம்பெயர் இலக்கியம்

ஒரு நாட்டைச் சேர்ந்தவர்கள் தம்முடைய பண்பாட்டு நியமங்களிலிருந்து வேறுபட்ட வேறொரு தேசத்திற்குச் செல்வது புலப்பெயர்வு எனப்படும். இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்து சென்றவர்கள் படைத்த இலக்கியங்கள் புலம்பெயர் இலக்கியங்கள் அல்லது புகலிட இலக்கியங்கள் எனப்படுகின்றன.

ஈழத்தில் இனப்பிரச்சினை ஏற்பட்டதைத் தொடர்ந்து உருவான யுத்த அனர்த்தங்கள், உயர்பாதுகாப்பு, வேலையில்லாத் திண்டாட்டம், வறுமை போன்றவற்றின் காரணமாக ஈழத்தமிழர்கள் ஐரோப்பிய நாடுகளுக்கும், அவுஸ்ரேலியா, நியூசிலாந்து, கனடா, அமெரிக்கா முதலான நாடுகளுக்கும், மத்திய கிழக்கு நாடுகளுக்கும் புலம்பெயரத் தலைப்பட்டனர். அவ்வாறு புலம்பெயர்ந்து சென்றவர்களின இலக்கிய முயற்சிகளை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

புலம்பெயர்ந்த தமிழர்கள் வாழ்கின்ற நாடுகளாகப் பின்வரும் நாடுகள் முதன்மை பெறுகின்றன. இங்கிலாந்து, பிரான்ஸ், சுவிற்சர்லாந்து, ஜேர்மனி, இத்தாலி, நோர்வே, டென்மார்க், சுவீடன், கொலன்ட், ரஷ்யா, ஐக்கிய அமெரிக்கா, கனடா, அவுஸ்ரேலியா, நியூசிலாந்து, தென்னாபிரிக்கா, சிங்கப்பூர், மலேசியா, சவூதிஅரேபியா, கட்டார், குவைத் முதலான நாடுகளில் ஈழத்தமிழர்கள் புலம்பெயர்ந்து வாழ்ந்து வருகின்றார்கள். இவற்றுள் மத்தியகிழக்கு நாடுகளைச் சேர்ந்தவர்கள் இலக்கிய முயற்சிகளில் ஈடுபடுகின்றமை குறைவு என்பதால் மத்தியகிழக்கு நாடுகள் தவிர்ந்த ஏனைய நாடுகளே இக்கட்டுரையில் கவனத்தில் கொள்ளப்படுகின்றன.

புலம்பெயர் படைப்பாளிகள் கவிதை, சிறுகதை, நாவல், நாடகம் ஆகிய ஆக்க இலக்கிய முயற்சிகளிலும், இலக்கிய விமர்சனம், கலை விமர்சனம், அறிவியல்சார் விமர்சனம் போன்ற இலக்கிய முயற்சிகளிலும் ஈடுபட்டனர். ஈழத்திலிருந்து புலம்பெயர்ந்து சென்றவர்களை மூன்று காலகட்டங்களுக்கு உரியவர்களாக வகைப்படுத்தலாம்.

1. 1980க்கு முன்னர் புலம் பெயர்ந்தவர்கள்
2. 1983க்குப் பின்னரும் 1990க்கு முன்னரும் புலம் பெயர்ந்தவர்கள்
3. 1990க்கு பிறகு புலம் பெயர்ந்தவர்கள்

1980க்கு முன்னர் புலம்பெயர்ந்தவர்கள் பெரும்பாலும் இங்கிலாந்தில் குடியுரிமை பெறுகின்ற நோக்கத்தோடும் உயர்கல்வி வாய்ப்புக்காவும் புலம்பெயாந்தவர்கள் என்பதால் இவர்கள் இலக்கியம் படைப்பதில் ஈடுபாடுகாட்டவில்லை. 1983களுக்குப் பின்னர் புலம்பெயர்ந்து சென்றவர்களே இலக்கியம் படைத்தவர்களாக விளங்கினர்.

புலம்பெயர் படைப்பாளிகளாக எஸ்.பொ, அமரர் அகஸ்தியர், மாத்தளை சோமு, லெ.முருகபூபதி, வ.ஐ.ச. ஜெயபாலன், சேரன், அ. முத்துலிங்கம், விஜேந்திரன், ஆகிய மூத்த படைப்பாளிகளும், கலாமோகன், ஷோபாசக்தி, சுகன், நட்சத்திரம் செவ்விந்தியன், புஸ்பராஜன், கல்லாறு சதீஸ் பொ. கருணாகரமூர்த்தி, தமிழ்ச்செல்வன், கற்கறா, செல்வம் ரயாகரன், வின்சென்ட், பார்த்தீபராஜா, மதுசூதனன், நித்தியானந்தன், தியாகலிங்கம், கி.பி அரவிந்தன், சுசீந்திரன், தமயந்தி, நிருபா, பாமாகுந்தவை முதலான இளம்படைப்பாளிகளும் கவனத்திற்குரியவர்களாகின்றனர்.

புலம்பெயர் இலக்கியங்களில் இடம்பிடித்துள்ள பிரதான கருப்பொருளாகப் பின்வருவனவற்றைச் சுட்டிக்காட்டலாம்.

1. தாய்நாட்டு நினைவுகளும் அவை தரும் ஏக்கங்களும்
2. புலம்பெயர் சூழலில் எதிர்கொள்ள நேரிடும் நிறவெறிச் சிக்கல்கள்
3. வேலைத்தளங்களில் எதிர்கொள்கின்ற பிரச்சினைகள்
4. சீதனம், ஆணாதிக்கம், பாலியல் சிக்கல்கள்.
5. வெளிநாடு செல்லும் வழியில் முகங்கொடுக்கின்ற இடர்கள்.
6. மூத்த தலைமுறைகளும் இளைய தலைமுறைக்குமிடையிலான பண்பாட்டு முரண்பாடுகள்.
7. பண்பாட்டுப் பிறழ்வு

என்பவற்றைப் புலம்பெயர் இலக்கியங்களில் காணமுடிகின்றது.

புலம்பெயர் இலக்கியப்பரப்பின் முக்கிய கவிஞர்களாக ஜெயபாலன், சேரன், செல்வம், அரவிந்தன், விஜேந்திரன், நட்சத்திரன் செவ்விந்தியன், தமயந்தி, முதலானோர் தனிக்கவனம் பெறத்தக்கவர்கள் சொந்த நாட்டு நினைவு அது தோற்றுவிக்கும் ஏக்கம் என்பன புலம்பெயர் இலக்கியங்களில் விஞ்சி நிற்கின்றன.

.........இன்னும் எத்தனை நாள்
இந்துக்கடல் மடியில்
மரகத வீணையென
வடகிழக்காய் நீண்ட என் தாய்நாட்டை
நெஞ்சில் சுமந்து நான் ஏங்குவது
நாட்டேக்கம்
என்னுயிரை
நஞ்சாய்ச் சபிக்கிறதே.........

என்று ஏங்குகின்றார் ஜெயபாலன் தமயந்தியின் கவிதை ஒன்றில் தனது நாடு தனது சுற்றம் மீண்டும் தனக்கு வேண்டும் என்கிற ஏக்கம் வெளிக்கிளம்புகிறது. இலங்கையில் தமிழர்கள் அனுபவிக்கின்ற போர்ச்சூழல், அவலங்கள் என்பவற்றிலிருந்து தாம் விலகிநிற்பதான ஒரு குற்ற உணர்வும், புலம்பெயர் படைப்புக்களில் தொக்கி நிற்பதைக் காணலாம்.

இலங்கையில் குடும்பத்தினருடன் கூடி வாழ்ந்த காலத்தின் கோலத்தால் உலகெங்கும் விசிறி எறியப்பட்டிருப்பதை ஜெயபாலனின கவிதை ஒன்று சுட்டிக்காட்டும்

யாழ் நகரில் என்பையன்
கொழும்பில் என் பொண்டாட்டி
வன்னியில் என் தந்தை, தள்ளாத வயதினிலே தமிழ் நாட்டில் என்
அம்மா, அந்தப் பிராங்போட்டில்
நானோ வழிதவறிய அலாஸ்கா வந்துவிட்ட ஒட்டகம் போல
ஒஸ்லோவில்

என்ன நம் குடும்பங்கள காற்றால் விதிக்குரங்கு கிழித்தெறியும் பஞ்சுத்
தலையணையா?

என்று கூறிச்செல்கின்றது ஜெயபாலனின் கவிதை

சொந்த நாட்டு அரசியல் பற்றிய ஆதங்கம், நம்பிக்கை, நம்பிக்கையீனம், முதலான பண்புகளினால் புலம்பெயர் இலக்கியம் சிறப்பிடம் பெறுகின்றது.

"அகதி முகம் பெறவா
உயிர்க் களையை
நான் இழந்தேன்?"

என்கின்றார் அரவிந்தன். தமிழர் எதிர்நோக்கும் நிறவெறிசார் சிக்கல்கள், பெண்கள் எதிர்நோக்கும் பாலியல் சிக்கல்கள் என்பனவற்றுக்கும் முதன்மை இடம் கொடுக்கப்படுகின்றது. குறிப்பாக பெண்களின் விழிப்புணர்வைத் தமயந்தி, மைத்திரேயி போன்றோரின் கவிதைகளிலும், நிருபா முதலானோரின் சிறுகதைகளிலும் காணமுடியும். இந்த வகையில் நிருபாவின் சுணைக்குது சிறுகதையும், பெண்படைப்பாளிகளின் 'மறையாத மறுபாதி' முதலான கவிதைத் தொகுப்புகளும் குறிப்பிடத்தக்கவை சூரிய ஒளிகாணா 'பேஸ்மென்' வீடுகளிலும் அலுவலகங்களிலும் பொழுதைக் கழிக்கின்ற போது எலும்பு மச்சைகளைக் குளிர் ஊடுருவும் வேளைகளில் தாய்நாட்டு நினைவையே புலம்பெயர்தமிழர் மீட்டுவர். செல்வத்தின் 'கட்டிடக் காட்டுக்குள்' விஜேந்திரனின் 'பதினோராவது கட்டளை' ஜெயபாலனின் 'இலையுதிர்கால நினைவுகள்' 'நெடுந்தொகை' 'சூரியனோடு பேசுதல்' சேரனின் 'இரண்டாவது சூரியஉதயம்' மற்றும் புலம்பெயர் படைப்பாளிகள் 'துருவச் சுவடுகள்' முதலிய கவிதைத் தொகுப்புக்கள் குறிப்பிடத்தக்கவை மொழி ஆளுமை மிக்க கவிதைகள் இடம்பெற்றுள்ளமை மேற்படிக் கவிதையின் சிறப்பம்சமாகும்.

சிறுகதைப் படைப்புக்கள் வரிசையில் எஸ்.பொ. இந்திரா பார்த்த சாரதியுடன் இணைந்து தொகுத்த 'பனியும் பனையும்' நிருபாவின் 'சுணைக்குது' சக்கரவர்த்தியின் 'யுத்தத்தின் இரண்டாம் பாகம்' அ. முத்துலிங்கத்தின் 'முத்துலிங்கம் கதைகள்', வம்ச விருத்தி மகாராஜாவின் 'ரயில்வண்டி' கார்த்தி நல்லையாவின் 'அலையும் தொலைவு' ஷோபா சக்தியின் 'தேசத்துரோகி' சிறீஸ்கந்தராஜாவின் 'சிறிசுவின் சிலகதைகள்' முதலானவை குறிப்பிடத்தக்கவையாக அமைகின்றன. தாய்நாட்டு ஏக்கங்கள். நிறவெறிசார் சிக்கல்கள், ஈழப்போராட்டம் தொடர்பான மாற்றக்கருத்துக்கள், பெண்களின் விழ்ப்புணர்வு முதலானவற்றை மேற்படிச் சிறுகதைத்தொகுதிகளில் இடம்பெற்ற சிறுகதைகள் முதன்மைப்படுத்துகின்றன.

புலம்பெயர் இலக்கியப்பரப்பில் நாவல் முயற்சிகள் என்கின்ற வகையில் அதிகளவு நாவலை எழுதியவராக இராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம் விளங்குகின்றார். உலகத்தைச்சுற்றியவன் 'பனி பெய்யும் இரவுகள்', 'தேம்ஸ் நதிக்கரையில்' ஒரு கோடைவிடுமறை என்பன இவரது நாவல்கள் ஆகும். குடும்ப முரண்பாடுகள் தவறான வழியில் சென்று சீரழியும் இளைஞர் சமூகம் பற்றிய ஆதங்கம் முதலானவற்றை மேற்படி நாவல்களில் கண்டுகொள்ள முடிகிறது.

ஷோபாசக்தி எழுதிய "கொரில்லா" ஈழப்போராட்டம் தொடர்பான மாற்றுக்கருத்தை முன்வைக்கிறது. குடியுரிமை கிடைத்ததை வைத்துக்கொண்டு சீதனத்தை உயர்த்துதல் சகோதரிகளைக் காப்பாற்றுவதற்காகத் தமது இல்வாழ்வைத் தொலைக்கும் இளைஞர் முதலான விடயங்களைக் கி.பார்த்தீபராஜாவின் "ஆண்கள் விற்பனைக்கு" என்னும் நாவல் பேசுகிறது. பண்பாட்டை மறந்து ஒழுக்க நியமங்களை உதாசீனப்படுத்திச் சீரழியும் இளைஞர்களைப் பற்றியதாகத் தியாகலிங்கத்தின் "அழிவிற்கோர் அழைப்பிதழ்" நாவல் எழுதப்பட்டது.

விமர்சனங்கள் என்ற வகையில் ரயாகரன், யமுனாராஜேந்திரன், அ.முத்துலிங்கம், ஷோபாசக்தி, ஆகியோரின் எழுத்துக்கள் குறிப்பிடத்தக்கவையாக அமைகின்றன.

புலம்பெயர் படைப்பாளிகளுக்கு புலம்பெயர் சூழலில் வெளிவந்து கொண்டிருக்கின்ற சஞ்சிகைகள், சிற்றிதழ்கள் தளம் அமைத்துக் கொடுத்தன. "எக்ஸில்", "அம்மா", "அ.ஆ.இ", "நான்காவது பரிமாணம்", "சுடா ஒளி", "புலம் ", "காலம்" போன்றன. தளம் அமைத்துக் கொடுத்தன.

கலாமோகன், நித்தியானந்தன் ஆகியோர் ஈழத்துத் தமிழ் இலக்கியங்களைப் பிரெஞ்சு மற்றும் ஆங்கில மொழிகளில் மொழிபெயர்த்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

"இனிவருகின்ற காலங்களில் ஈழத்துத் தமிழ் இலக்கியப் பரப்பில் புலம்பெயர் படைப்பாளிகளே" தலைமைச்சக்தியாக விளங்குவர் என்ற எஸ்.பொவும் "புலம்பெயர் இலக்கியங்களை ஆறாம் திணை என வழங்குவது பொருந்தும்" என்று சேரனும் குறிப்பிடுகின்றமை புலம்பெயர் இலக்கியங்களின் சிறப்பை உணர்த்தி நிற்கின்றன.

ஆக்கம்
**செல்வி அஜந்தினி மகாதேவன்**
உயர்தரம் 2009 கலை

அன்பை வாங்கவும் முடியாது விற்கவும் முடியாது
அன்பின் விலை அன்புதான்

அறிவாற்றலால் கடவுளை அறிய இயலாது
ஆத்மீக சக்தியால் அவரை உணரலாம்

அன்பிற்கும் அறிவிற்கும் எல்லையே இல்லை

நன்மையை பலர் விரும்புவார்கள் – ஆனால்
உண்மையை சிலரே விரும்புவார்கள்

# இலங்கைப் பேச்சு வழக்குச் சொற்களும் அவற்றின் பொருளும்

### அ

| | | |
|---|---|---|
| அங்காலை | - | அந்தப்பக்கம் |
| அங்குரார்ப்பணம் | - | ஆரம்பம் |
| அடிப்படலை | - | அருகாமை |
| அடுக்கு | - | ஏற்பாடு |
| அப்பு | - | தந்தை, அப்பா |
| அப்பக்காத்து | - | வக்கீல், சட்டத்தரணி |
| அமசடக்கு | - | வெளிப்படையாகப் பேசாது விடயங்களை மனதுக்குள அடக்கி வைத்திருப்பவர் |
| அரிவு வெட்டு | - | அறுவடை |
| அடுக்குப்பண்ணுதல் | - | ஆயத்தம் செய்தல் |
| அடுப்படி | - | சமையல் அறை, அடுப்பங்கரை |
| அயலட்டை | - | அக்கம் பக்கம் |

### ஆ

| | | |
|---|---|---|
| ஆட்டத்திவசம் | - | இறந்து ஒருவருட முடிவில் கொண்டாடப்படும் கிருத்திகை நாள் |
| ஆமான | - | உருப்படியான |
| ஆவுரஞ்சிக்கற்கள் | - | மாடு உரசி செறிந்து கொள்வதற்கான நீளமான கற்கள் |
| ஆனைப்புரளி | - | மிகப்பெரும் குழப்பம் |
| ஆய்கினை | - | தொந்தரவு |
| ஆமத்துறு | - | பௌத்த பிக்கு |
| ஆடுகல் | - | துலாவின் இருபுறமும் அதனைக் தாங்கி நிற்கும் மரம் |
| ஆட்டக்காரி | - | நடத்தை கெட்டவள் |

### இ

| | | |
|---|---|---|
| இஞ்சாரன், இஞ்சேர் | - | மனைவி கணவனை இங்கே பார் என விளித்தல் |
| இஞ்சை | - | இங்கே |
| இட்டுமுட்டு | - | கஷ்டம் |
| இடக்கு மடக்காக | - | முன்னுக்குப் பின் முரணாக |
| இணல் | - | நிழல் |
| இரணை | - | இருவர், இரட்டைப் பிள்ளைகள் |
| இருளி | - | மலடி |
| இளக்காரம், இழக்காரம் | - | அதிகமாக இடங்கொடுத்தல், கேலி |

### ஈ

| | | |
|---|---|---|
| ஈசுமாறல் | - | போக்குக் காட்டுதல் |
| ஈர்வாணி | - | பனை ஈர்க்கினால் பின்னப்படும் கொடிஸ |
| ஈசாப்பி | - | ஈயாதவன், உலோபி |

உ

| | | |
|---|---|---|
| உங்காலை | - | இந்தப்பக்கம் (முன்னிலைச்சுட்டு) |
| உரும்பிராயன் | - | உரும்பிராய் என்னும் ஊரில் காய்ச்சப்படும் வடிசாராயம் |
| உப்பட்டி | - | அறவடை செய்து வைசக்கப்படும் நெற் குவியல் |
| உபாதை | - | நோயினால் ஏற்படும வேதனை |
| உலாந்தர் | - | நில அளவையாளர் |

ஊ

| | | |
|---|---|---|
| ஊத்தை | - | அழுக்கு |
| ஊர்வாய் | - | ஊர்மக்களின் பேச்சு |
| ஊர்க்குருவி | - | ஊரில் உள்ள புதினங்களைத் தெரிந்து கூறுபவர் |

எ

| | | |
|---|---|---|
| எச்சந்தாங்கிச் சீலை | - | பிணத்திற்கு மேல் நேராக கட்டப்படும் வெள்ளை |
| எப்பம் | - | கொஞ்சம் |
| எழுப்பம் | - | பெருமை, இறுமாப்பு |
| எங்கை | - | எங்கே |
| எடுப்புச் சாய்ப்பு | - | ஆடம்பரம், பகட்டு |

ஏ

| | | |
|---|---|---|
| ஏண்டாப்பால் | - | கவனமில்லாமல் |
| ஏப்பை | - | அகப்பை |
| ஏமஞ்சாமம் | - | நேரமில்லா நேரம் |
| ஏலாமை | - | இயலாமை |

ஒ

| | | |
|---|---|---|
| ஒண்டுபாதி | - | நடுச்சாமத்திற்கு மேல் |
| ஓம்பிப்பன் | - | நிரூபிப்பேன் |
| ஒழுங்கை | - | சந்து (பெரிய பாதையில் இருந்து பிரியும் சிறிய பாதை) |
| ஒத்திப்போடுதல் | - | பின்போடுதல் |
| ஒப்பேற்றல் | - | நிறைவேற்றுதல் |
| ஒற்றி | - | அடைமானம் |

ஓ

| | | |
|---|---|---|
| ஓங்காளம் | - | வாந்தி |
| ஓசி | - | இலவசம் |
| ஓடுகாளி | - | முறைகேடாக வீட்டினை விட்டுச் செல்லும் பெண் |
| ஓட்டைவாயன் | - | உளறுவாயன் |
| ஓச்சம் | - | உயர்வ, புகழ் |

க

| | | |
|---|---|---|
| கடகம் | - | பெரிய பனையோலைப் பெட்டி |
| கட்டாடி | - | வண்ணான் |
| கதிரை | - | நாற்காலி |
| கமக்காரன் | - | அதிக நிலச் சொந்தக்காரன் |

| | | |
|---|---|---|
| கவுண்மேந்து | - | அரசு |
| கள்ளத்தீன் | - | கள்ளத்தனமாக உடல் இன்பம், உணவின்பம் பெறுதல் |
| கத்தை | - | வைக்கோலைக் கட்டி வைப்பது |
| கடுகடுப்பு | - | வெறுப்பு, குத்து,வலி |
| களம் | - | சூடு மிதிக்குமிடம் |
| கடுதாசி | - | காகிதம் |
| கதிர்ப்பாய் | - | களப்பாய், நெற்கதிர்களைப் போட்டு சூடு மிதிப்பதற்குப் பயன்படுத்தப்படும் நீண்ட பாய். |
| கண்ணூறு | - | திருஷ்டி |

கா

| | | |
|---|---|---|
| காளாஞ்சி | - | கோவில் திருவிழாவில் உபயகாரருக்கு ஐயர் வழங்குவது முதல் மரியாதை |
| காப்பிலை | - | சுருட்டின் மேற்பக்கத்தில் சுற்றியுள்ள புகையிலை |
| கால்க்கட்டு, கைக்கட்டு | - | அசைய முடியாத நிலை, எதுவும் செய்யமுடியாத நிலை |
| காது குத்துதல் | - | வஞ்சித்தல் |

கி

| | | |
|---|---|---|
| கிடுகு | - | தென்னோலைப் பின்னல், கீற்று |
| கிறுதி | - | மயக்கம், தலைச்சுற்று, ஏற்படுதல் |
| கிராணம் | - | கிரகணம் |
| கிறுக்கன் | - | பைத்தியக்காரன், விசித்திரமாக நடந்து கொள்பவன் |

கீ

| | | |
|---|---|---|
| கீளி தின்னி | - | கிளி, பேத்தை போன்ற தரம் குறைந்த மீன்களை தின்பவன். |

கு

| | | |
|---|---|---|
| குஞ்சியப்பு | - | சிறிய தந்தை, சித்தப்பா |
| கும்மாளம் | - | மகிழ்ச்சி நிறைந்த ஆரவாரம் |
| குலைப்பன் | - | நடுக்கம் |
| குஞ்சாத்தை | - | சிறியதாய் |
| குண்டான் | - | பெரிய மட்பாத்திரம் |
| குளுமாமு | - | படிக்கப்படாத மாடு |

கூ

| | | |
|---|---|---|
| கூழாம்பாணி | - | சிக்கல் |
| கூழைக்கையன் | - | சொத்திக் கையன் |
| கூக்காட்டுதல் | - | கேலி செய்தல், தூரத்தில் செல்பவரை அழைத்தலுக்கு எழுப்பும் குரல் ஒலி |

கெ

| | | |
|---|---|---|
| கெடிக்கலக்கம் | - | பேரச்சம் |
| கெறுவம் | - | கர்வம் |
| கெறு | - | திமிர் |

### கே

| | | |
|---|---|---|
| கேற்று | - | வாயிலுக்கு போடும்இரும்புக் கதவு |
| கேட்டுப்போச்சு | - | உடல் நலம் கெட்டுப்போதல் |

### கை

| | | |
|---|---|---|
| கைமுறிதல் | - | ஏற்ற துணை இல்லாது போதல் |

### கொ

| | | |
|---|---|---|
| கொட்டில் | - | சிறு குடிசை |
| கொழுப்பு | - | பல்வரிசையின் கடைசிப்பல் பகுதி |
| கொண்டு போடல் | - | கொலை செய்தல் |
| கொளுவுப்படுதல் | - | சண்டையில் மாட்டுதல் |
| கொண்டோடி | - | புதினங்களைக கொண்டு திரிந்து பரப்புபவன் |
| கொத்தான் | - | உன் அத்தான் |

### கோ

| | | |
|---|---|---|
| கோதாரி | - | கோதாரி என்ற நோயால அழிவாய் என சபித்தல் |
| கோள் மூட்டி | - | கோள் சொல்பவன் |

### ச

| | | |
|---|---|---|
| சட்டம்பியார் | - | ஆசிரியர் |
| சந்தி சிரித்தல் | - | மானம் கெடுதல் |
| சடைதல் | - | சமாளித்தல் |

### சா

| | | |
|---|---|---|
| சாக்கொண்டது | - | கொலை செய்தது |
| சாமான் சக்கட்டு | - | பொருட்கள் |
| சால் | - | உழவு சால் |

### சி

| | | |
|---|---|---|
| சிண் | - | நேர்முக உதவியாளர் |
| சிலமன் | - | ஆளரவம் |
| சிப்பி | - | பணிகாரவகை |
| சிப்பிலியாட்டுதல் | - | பெருந்தொல்லைக்கு உள்ளாகுதல் |
| சில்லெடுப்பு | - | மிகக் கூடுதலான, கட்டமான வேலை. |

### சீ

| | | |
|---|---|---|
| சீனியாச்சி | - | சிறியதாயார் |
| சீலம் பாய் | - | கிழிந்தபாய் |
| சீனியப்பா | - | தந்தையின் தம்பி |

### சு

| | | |
|---|---|---|
| சுட்டிப்பாக | - | மிக நுட்பமாக |
| சுணைகெடுதல் | - | நாணம், பயிர்ப்புக் கெடுதல் |
| சுத்துமாத்து | - | ஏமாற்று |
| சுளித்தல் | - | ஒரு கருமத்தைச் தந்திரமாகச் செய்தல் |

### சூ

| | | |
|---|---|---|
| சூளுக்குப் போதல் | - | மீன்பிடிப்போர் சூள் கொண்டு கடலுக்குப்போதல் |
| சூடு சொரணை | - | மானம், உரோசம் உள்ள உணர்வு |

செ

| | | |
|---|---|---|
| செக்கல் | - | மாலை நேரம் |
| செம்பாடு | - | மாம்படி வகை, செம்மண்நிலம் |
| செத்தவீடு | - | மரணவீடு |
| செடில் நாற்றம் | - | கெட்ட மணம் |

சே

| | | |
|---|---|---|
| சேங்கு | - | அழகில் பண்பில் குறைந்தவன் |
| சேவையர் | - | நில அளவையாளர் |

சொ

| | | |
|---|---|---|
| சொண்டு | - | உதடு |
| சொத்துப்பத்து | - | சொத்து |
| சொக்கை | - | கன்னம் |

சோ

| | | |
|---|---|---|
| சோப்பிளாங்கி | - | சோம்பேறி |
| சோத்தி | - | வைரமில்லாதது |

த

| | | |
|---|---|---|
| தண்ணீர் வார்த்தல் | - | பருவமடைந்த பெண்ணுக்கு தலை முழுகாட்டல் |
| தரவளி | - | தரத்திளைவு |
| தம்பட்டமடித்தல் | - | ஒருவர் தனது பெருமையைப் பலருக்கும் கூறித் திரிதல், தமக்குத் தெரிந்த விடயங்களை எல்லோரிடமும் கூறித் திரிதல். |

து

| | | |
|---|---|---|
| துடக்கு கழிவு | - | தீட்டுக் கழிதல் |
| துண்டு | - | ஒட்டுச் சீட்டு, வாக்குச் சீட்டு |
| துந்துமி | - | தூறல் |
| துவக்கு | - | துப்பாக்கி |
| துலைக்கே? | - | எங்கே போகிறீர்? |

தெ

| | | |
|---|---|---|
| தெறிப்பு | - | முறிவு |
| தென்மோடி | - | கூத்துவகை |

தே

| | | |
|---|---|---|
| தேத்தண்ணி | - | தேநீர் |

தோ

| | | |
|---|---|---|
| தோய வார்த்தல் | - | பருவமடைந்த பெண்ணுக்குச் செய்யும் நீர்ச்சடங்கு |

நா

| | | |
|---|---|---|
| நாக்கு வளைத்தல் | - | மறைமுகமாகக் கேலிசெய்தல் |
| நாசமறுப்பு | - | உருப்படி இல்லாத |
| நாவூறு | - | திருஷ்டி |

நீ

| | | |
|---|---|---|
| நீத்துப்பெட்டி | - | பிட்டு அவிக்கப்பயன்படும் ஒருவகைப்பெட்டி |

ப

பனாட்டுத்தட்டு - பனம்பழத்தில் தயாரிக்கப்படும் ஒரு வகைஉணவு
பறைதல் - பேசுதல்
பனை கொடியேறுதல் - கள் இறக்கம் காலம் தொடங்கதல்

பி

பிரசித்தம் - பறையறைந்து செய்தி பரப்புதல்
பிளா - பனையோலையில் தயாரிக்கப்பட்டு கள் குடிக்க உபயோகிக்கும் பாத்திரம்

பு

புலுடா - ஏமாற்றுதல்

பெ

பெண்டில, பெண்டில் - மனைவி
பெத்தாச்சி - பாட்டி
பெறாமகள் - சகோதரி, சகோதரனின் மகள்

பே

பேய்க்காட்டல் - ஏமாற்றுதல்
பேயன் - மடையன்
பேந்து - பிறகு

பை

பைம்மல் - கலகலப்பு

பொ

பொச்சுமட்டை - தேங்காய் மட்டை
பொல்லு - குறுகிய தடி

போ

போமதி - கொடுக்குமதி
போட்டுது - போய்விட்டது

ம

மங்களம் - ஒருவகை வக்கணை தூற்றல்

மா

மாராப்பு - சீலைப் பொதி

மை

மையம் - பிணம்

மொ

மொக்கன் - புத்திக் கூர்மை அற்றவர்
மொங்குதல் - ஓங்கிக் குத்துதல்
மொந்துதல் - அடித்தல்

மோ

மோட்டுக் கதை - மடத்தனமான கதை
மோனை - பிள்ளையை அழைத்தல்

தொகுப்பு
**செல்வி அர்ச்சனா சுப்பையா**
தரம் 10 ஏ

# பெண்கள் எதிர்நோக்கும் சவால்கள்

பெண்விடுதலை நோக்கிய பெண்ணியச் சிந்தனைகள் பலமுற்று எழுச்சிகளும் புரட்சிகளும் வீறு கொண்டெழுந்தாலும் பெண்களை இரண்டாந் தரப்பிரஜைகளாகக் கருதும் நிலை நீங்கி விடவில்லை.

பழைமைகளை களைந்தெறியத் தைரியமின்றி பழைமைகளின் ஆணாதிக்க அழுக்குகளைக் கூட பாரம்பரியம் என்ற எல்லைக்குள் நியாயப்படுத்தி தமக்குத் தாமே விலங்கிட்டுக் கொள்ளும் பெண்கள் இருககும் வரை நிழல் போல கட்டற்ற கொடுமைகளும் அவமானங்களும் புறக்கணிப்புக்களும் பெண்களை பின் தொடரவே செய்யும்.

மனவுறிதியின் தளர்வும் தம்மைத் தாமே தாழ்த்திக் கொள்கின்ற பேதமையும், பெண்உரிமைகளுக்கான போரட்டங்களில் பின்னடைவு ஏற்படுகின்றபோது ஏற்படுகின்ற சலிப்பும் எதிர்விளைவுகளை எதிர்கொள்ள முடியாத மனநிலையும் மீண்டெழ முடியாத வலிமையின்மையும் பெண் விடுதலை முன்னெடுப்புகளில் பெருந்தடைகளாக அமைகின்றன.

கலாசார, பண்பாட்டு வேலிகளாலான கடுமையான தடைகளை தாண்டுகின்றபோது பெண்கள் எதிர்கொள்கின்ற வசைகளும், வதைகளும் வலுமிக்க பெண்களைக் கூட சோர்வடையச் செய்து விடுகின்றன.

பெண்கள் மீதான வன்முறையானது ஆணாதிக்கத்தின் உள்ளுறைந்த தன்மையாகவுள்ளது. பெண்கள் மீதான வன்முறையை ஒழிக்கவேண்டுமெனில் ஆணாதிக்கத்தை ஒழிக்கவேண்டும். ஆணாதிக்கம் உடல் ரீதியாகவோ, வாய்மொழியாகவோ, உளவியல் ரீதியாகவோ வன்முறையைப் பயன்படுத்தி பெண்களைப் பணியச் செய்து, தாழ்ந்தவர்களாக எண்ணச் செய்து தன்னம்பிக்கையை இல்லாதொழிக்கின்றது.

திரைப்படங்கள், கேளிக்கைகள் சுற்றுலாத்துறைகளில் பெண்கள் போகப் பண்டங்களாக்கப்படுகின்றன. இவற்றினால் பெண்கள் விபசாரதொழிலுக்குத் தள்ளப்படுவதற்கும், விற்பனை செய்யப்படுவதற்கும் ஆபாசமகாச் சித்தரிக்கப்படுவதற்கும் ஏதுவான நிலைமைகள் தோற்றுவிக்கப்படுகின்றன. தொழிற்சான்றுகள், அலுவலகங்கள் மருத்துவ மனைகள் போன்றவற்றிலுள்ள நிர்வாகிகள் அரசியல்வாதிகள், அரசியல் அதிகாரமுடைய நபர்கள் போன்றோராலும் பெண்கள் வன்முறைகளுக்கு உள்ளாகின்றார்கள்.

கருவிலேயே பெண் குழந்தை கொலை செய்யப்படுகிறது. குழந்தை திருமணம், நிர்வாணமாகப் பெண்களைச் சடங்குகள் செய்ய வைத்தல். குற்றமின்மையை நிரூபிப்பதில் பெண்கள் எதிர்நோக்கும் சட்டரீதியான சவால்கள் என்றவாறு பிறப்பு முதல் இறப்பு வரை சமூகம் பெண்களுக்கு இழைக்கும் கொடுமைகள் எண்ணற்றவை.

திருமணச்சந்தையில் பெண்கள் கையாளப்படும் விதங்கள்,

வரதட்சணைக்கொடுமைகள் திருமணம் ஆகாதிருப்பதால் அடையும் அவமானங்கள், பாலியல் வன்முறை, பணியிடங்களில் கல்லூரிகளில் தெருக்களில், பெண்களை மிரட்டுதல், கணவனின் கொடுமைகள் பெண்களின் சம்மதமின்றிய திருமணங்கள் காரணமாக தற்கொலை செய்து கொள்ளும் பெண்களின் தொகை இன்னும் குறையவில்லை.

குடும்பம், வீட்டு வேலைகள் மதம், அரசு இவையாவும் ஆணாதிக்கத்தின் கருவிகளாகச் செயற்படுகின்றன என்பதில் மறுப்பதற்கில்லை. பெண்களுக்கான கண்டிப்பான பாலியல் ஒழுக்க விதி முறைகளை வலியுறுத்தல் வீட்டுவேலைகள் செய்யவும் குழந்தைகளைப்பெற்று வளர்க்கவும் பழக்கப்பட்டிருத்தல் நடத்தைகளை வலியுறுத்தல் என்பன ஆணாதிக்க சமூக அமைப்பின் தேவைகளாகி விடுகின்றன. ஆம்பிளை என்றால் கோபம் வரத்தான் வேண்டும். கோபம் வராவிட்டால் அவன் ஆம்பிளை இல்லை. பொம்பிளை என்றால் எதற்கும் பொறுத்துத்தான் போகவேண்டும். அப்படிப் பல ஏட்டில் எழுதப்படாத கல்லில் பொறிக்கப்படாத ஆனால் பழகிப் போன பல வாசகங்கள் நாம் இன்னும் கேட்டுக் கொண்டிருக்கிறோம். இவை நமது காணசாரத்துக்கு மட்டும் அல்ல அனைத்துக் கலாசாரங்களுக்கும் சொந்த மானவையாகத்தான் இன்னும் இருக்கின்றன். அனைத்துச் சமூகங்களிலும் அது வீடாக இருந்தால் என்ன அல்லது வேலைத்தளமாக இருந்தால் என்ன ஒரு காலத்தில் ஆண்தான் அதிகாரத்தின் பிரதி நிதியாக அங்கீகரிக்கப்பட்டு இருந்திருக்கின்றன. அதனால் பெண்கள் நியாயமான கோபத்தைக் கூட தகுந்த முறையில் தெரியப்படுத்த முடியாமல் ஆண் மையப்படுத்தப்பட்ட சமூக அமைப்பிற்குள் வாழ நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர்.

ஆண் பலமுடையவன், துணிவுடையவன், புதிய முயற்சிகளில் ஈடுபடுபவன் பாலியல் சுதந்திர முடையவன் என்றும் பெண் வெட்கம் உற்றவர் பலவீனம் உற்றவள் உணர்ச்சி வசப்படுவள், தங்கி வாழ்பவள் என்னும் ஆணாதிக்க சமூக அமைப்பின் மூலம் கருதப்படும் அடையாளங்கள் இன்று பலவீனமடைந்து வருகின்றன. பெண்களின் பல்வேறு ஆற்றல்கள் உலகெங்கும் வெளிக் கிளம்பி வருகின்றன. அறியாமை அச்சம் இயலாமை, புரியாமை என்பவற்றால் காலாதி காலமாக தாழ்வுற்றிருந்த பெண்ணினம் .இன்று விழிப்படைந்துள்ளது. பெண்விடுதலை பெறவேண்டுமாயின் ஆணாதிக்க சிந்தனையாளர்களின் மனத்தில் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட வேண்டியிருப்பதுடன் மரபு ரீதியில் மூழ்கி ஆணாதிக்கத்தை வலியுறுத்தி நிற்கின்ற பெண்களின் மனதிலும் ஆழமான மாற்றங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும். இத்தகைய மாற்றங்களின்றிப் பெண் விடுதலை சாத்திய மாகாது.

பெண்கள் வீடுகளில் செய்யும் கடமைகளின் அதியுயர் பெறுமானம் சமூகமட்டத்தில் உணர்த்தப்பட வேண்டும். சுயமாக உழைத்துப்பொருளீட்டல், சேமித்தல் என்பன ஊக்கப்படுத்தவேண்டும்.

தம்மகத்தே துணிவு, சாதுரியம், உறுதி என்பவற்றைப் கொண்டு மனோபலத்துடன் போராடும் குணமுடையவர்களாக பெண்கள் இருப்பார்களேயானால் இந்த 21ம் நூற்றாண்டின் சமத்துவத்தைப் பெண்களால் பெறமுடியும்.

ஆக்கம்
**செல்வி யூடித்கஜானி விஜயரத்தினம்**
உயர்தரம் 2010 கலை

# நந்தவனம்

எங்களுடைய நந்தவனத்தில்
இப்போ
பொலிவோடு பூக்கள்
பூப்பதில்லை

நேற்று
சில்லென்று பூத்த
செவ்வந்தியும்
சிகப்பழகு காட்டிநின்ற
செம்பருத்தியும்
வாசனைகள் சிந்திநின்ற
மல்லிகையும்
வேற்றோர் அந்நியரால்
கசக்கி எறியப்பட்டன

ஆகையினால்
இன்று பூத்த பூக்கள்
ஏங்கி நிற்கின்றன...
நாளை மலரும்
மொட்டுக்கள்
தவித்து நிற்கின்றன

ஆனால்.....
அன்றும் இன்றும்
எம் முற்றத்து
ரோஜாச் செடிகள் மட்டும்
சில்லென்று பூத்து
சிரித்தே நிற்கின்றன
ஓ...
ரோஜாச் செடிகளுக்குத்தான்
முள்ளிருக்கிறதே....

ஆக்கம்
செல்வி நிரோஜினி தம்பித்துரை
உயர்தரம் 2011 கலை

# சொற்களுக்கு அப்பால்...

மனித வாழ்வோடு அத்தியாத்தமானதும், ஆத்மார்த்தரீதியாகவும், தொடர்புடையதாக விளங்குவது கலையாகும். கலை என்பது மனித உள்ளுணர்வின் கருவிலிருந்து உற்பவிப்பது அநுபவத்தோடும் கற்பனையோடும் ஒன்றிணைந்து குறித்ததொரு ஊடகத்தின் மூலம் பிரவாகிப்பது கலை ஆகும். இந்த வகையில் கலையின் ஒரு கூறாக இலக்கியம் அமைகிறது. உண்மையில் கலையினை இன்னொரு வகையில் கூறினால் உணர்வு பூர்வமான அர்த்தத்தின் குறியீட்டுரீதியான மொழியே கலை எனலாம். கலையை அதன் வெளிப்பாட்டுத்தன்மையை அடிப்படையாகக் கொண்டு நடனம் இசை, நாடகம், ஓவியம், சிற்பம், கட்டடம் எனப் பலவாறு வகுத்து நோக்குவர். அவற்றின் ஒரு கூறாகவே இலக்கியம் அமையும்.

கலை வடிவங்கள் யாவும் தமக்கென குறித்த சாத்தியப்பாடுகளைக் கொண்டிருக்கும். நடனம் அங்க அசைவுகள் மூலமும் ஓவியம் கோடுகள் மூலமும் இசை இராகங்கள் மூலமும் தனது அதிகளவு உச்சமான சாத்தியப்பாடுகளைக் கொண்டுள்ளது. அதே போலவே இலக்கியமும் சொற்கள் மூலம் தனது உச்ச அளவிலான சாத்தியப்பாடுகளைக் கொண்டுள்ளது. இவ்விடத்தில் இலக்கியம் என்றால் என்ன? என்பது தெளிவுபடுத்தப்படவேண்டியதொன்றாக உள்ளது. உண்மையில் இலக்கியம் என்றால் என்ன என்பதை திட்டவட்டமாக கூறமுடியாது ஆயினும் இலக்கியம் என்பது 'காலத்தின் ஆன்மா' 'குறிப்பிட்ட காலத்தின் வெளிப்பாடு' 'சமுதாயத்தின் விளைநிலம்' 'மொழியின் துணைகொண்டு உள்ளதது உணர்வுகளுக்கு உருவம் கொடுக்கும் ஒரு சிருஷ்டி' எனப்பலவாறு விளக்கப்படுகின்றது. உண்மையில் இலக்கியம் ஒரு அவயவி, அது மாறும் இயல்பு கொண்டது. அதனால் தான் அதுபற்றிய விளக்கங்களும் வியாக்கியானங்களும் வேறுபட்டனவாக அமைகின்றன.

இலக்கியம் பற்றிய மேற்குறித்த விளக்கங்களுள் சொற்களாலாகி உணர்வுகளால் புரிந்து கொள்ளப்படுவது மொழியின் துணை கொண்டு உள்ளத்து உணர்வுகளுக்கு உருவம் கொடுக்கும் ஒரு சிருஷ்டி எனும் விளக்கங்கள் இக்கட்டுரைக்கு பொருத்தமுடையதாக இருக்கிறது எனலாம். இவ்விடத்தில் தவிர்க்கமுடியாது மொழிபற்றி விளக்கப்படவேண்டியுள்ளது. உண்மையில் மொழி என்பது ஒரு மனிதன் தனது உள்ளத்து உணர்வின் வெளிப்பாட்டினை சாத்தியப்படுத்தும் ஒரு ஊடகமே மொழியாகும். அந்த வகையில் ஒரு மனிதன் தனது உள்ளத்து உணர்வினை அநுபவவாயிலாக கற்பனைத் திறனூடாக மொழியின் துணை கொண்டு வெளிப்படுத்த முடியும் போது அதுவே இலக்கியம் என்கிறோம். அந்த வகையில் இலக்கியமானது மொழியினை தனது உடலாக கொண்டுள்ளது என்பது தெளிவாகிறது.

இலக்கியத்தின் உடலாகத் திகழ்கின்ற மொழியானது சொற்களால் கட்டியெழுப்பப்பட்ட ஒரு சிறந்த ஊடகமாகும். எமது தமிழ்மொழியைப் பொறுத்தவரையில் எல்லாச் சொற்களும் பொருள் குறித்தனவே எனத் தொல்காப்பியர் கூறிச் செல்வர். ஆனால் தமிழ்மொழிக்கு மேலும் ஓர் சிறப்பம்சமாக சொற்கள்தாம் நிற்கின்ற இடத்திற்கு ஏற்ப பொருள் மாத்திரம் உண்டென வலியுறுத்திக் கூறமுடியாதுள்ளது.

சொற்கள் தாம் நிற்கின்ற இடத்திற்கேற்ப எவ்வாறு பொருளைத் தருகின்றதோ சொற்களின் பொருள் தரும் சாத்தியப்பாடு எவ்வாறு எல்லையற்று விரிகிறதோ அது போலவே சொற்களின் துணை கொண்டு கட்டியெழுப்பப்பட்ட மொழியும் தனது தேவைக்கேற்ப எல்லையற்ற சாத்தியப்பாட்டிற்கு இட்டுச்செல்லக்கூடியது.

குறித்த ஒரு சொல்லிற்கு அகராதியில் பல விளக்கங்கள், பொருள்கள் காணப்படலாம் ஆனால் அதே சொல் இலக்கியங்களில் அமையும் போது தனது நியமநிலையிலிருந்து அதற்கு அப்பால் சென்று அது உச்சமான சாத்தியப்பாட்டினை ஏற்படுத்த வல்லது. இலக்கியங்களில் சொற்கள் அவைநிற்குமிடம், அவை விளக்க நினைக்கும் கருத்துப்போக்கு ஆகியவற்றைக் கணித்துப்பொருள் காண்பது ஒருநிலை. அதற்கு மேலும் ஊன்றி ஆராயின் சொற்கள் அகராதிக்கு அப்பாற்பட்டும் பொருள் கொள்வதை நாம் உணர்கிறோம். சாதாரணமாகவே ஆகுபெயர்,

பிறிதுறமொழிதலணி, உள்ளுறை, இறைச்சி போன்றவை சொல்லுக்கு அப்பால் நின்று பொருள் உணர.த்துவது தெளிவு.

அந்த வகையில் சொற்கள் சொற்களுக்கு அப்பால் நிற்கும் சந்தர்ப்பங்கள் ஒரு சிலவற்றை குறிப்பிட்டுச் சொல்லுதல் தகும்.

கம்பராமாயணத்தில் இராமன்,சீதை,இலக்குவன் ஆகிய மூவரும் செல்லும் காட்சியை சொல்லின் வம்பனாகிய கம்பன் பாடும் போது

"வெய்யோன் ஒளி தன் மேனியில் விரிசோதியில் மறைய

பொய்யோ வெனும் இடையாளொடும் இளையானொடும் போனான்

மையோமகரகதமோ மறிகடலோ மழைமுகிலோ ஐயோ!

இவன் அழகென்பதோர் அழியா அழகுடையான்."

என கூறுகிறார். இங்கு இராமனின் அழகை வர்ணிக்கமுனைந்த கம்பன் இராமனது மேனியழகிற்கு உலகில் உள்ள ஒவ்வோர் பொருளாக ஒப்பிட்டுச் சொல்கிறான். இறுதியில் எதுவுமே ஒப்பிட முடியாது போக ஐயோ! என்கின்ற அசைச் சொல் மூலமாக நியமத்தளத்தைத் தாண்டி அந்த ஐயோ! என்ற சொல் இராமனின் அழகை படம்பிடித்து காட்டுகின்றது. சொற்கள் தம் நிலையிலிருந்து அப்பால் இயங்குவதற்கு இது தக்க சான்றாகும்.

திருவள்ளுவரது திருக்குறளைப் பொறுத்தவரையில் ஒவ்வொரு குறளும் சொற்களால் சொற்களுக்கு அப்பால் நின்று இயங்குவதை அவதானிக்க முடிகின்றது .உதாரணத்திற்கு ஒரு குறளை நோக்குவோம்.

"ஆவிற்கு நீரென்று இரப்பினும் நாவிற்கு

இரவின் இழிவந்தது இல்"

உனக்காக இல்லை இறக்கும் தறுவாயில் இருக்கும் பசுமாட்டுக்கும் தண்ணீர் வேண்டும் என்று பிறர் கதவை தட்டிப் பிச்சை கேட்காதே, அதை விட நாவிற்கு இழிவு இல்லை என்பது மேற்கூறிய திருக்குறளின் பொருள் ஆகும். இக்குறளில் "ஆவிற்கு நீரென்று இரப்பினும் நாவிற்கு இழிவு" என்பதே நேரடிக்கருத்தாகும்.ஆனால் வள்ளுவர் மேற்குறித்த குறட்பாவின் மூலம் கூறாத பல விடயங்கள் இக்குறளில் கட்டித் தொங்குகின்றன. இரப்பது இழிவு என்றால், இரக்க எண்ணுவது மனதிற்கு இழிவு, கேட்பது வாய்க்கு இழிவு, நீட்டிப்பெறுவது கைக்கு இழிவு, பெற்று உண்பது வாய்க்கு இழிவு அந்த வகையில் ஒன்றைச் சொல்லி ஒன்பதை சொல்லாம். சொன்னவர் வள்ளுவர். இவ்வாறு அவர் சொல்ல முடிந்ததற்கு சொற்கள் தமது நியம நிலைக்கு அப்பால் நின்று பொருள் தருவதாலே அது சாத்தியமாயிற்று எனலாம்.

புரட்சிக்கவி சுப்பிரமணியபாரதியார் தமிழ் இலக்கிய வரலாற்றிற்கு ஒரு மாற்றம் தந்தவர் என்பது பலரும் அறிவர். மக்களுக்கு புரியுமாறு விளக்குவதே அவர் குறிக்கோள். அவ் அறிஞரின் பாடலில் கூட எளிமையான சொற்கள் தமது நியமத்திற்கு அப்பால் சென்று இயங்குவதை அவதானிக்க முடிகின்றது.

"அக்கினி குஞ்சொன்று கண்டோன்-அதை

அங்கொருகாட்டிலோர் பொந்திடை வைத்தேன்

வெந்து தணிந்தது காடு –தழல்

வீரத்தில் குஞ்சென்றும் மூப்பென்றும் உண்டோ?

தத்தரிகிட தத்தரிகிட தித்தோம்"

இப்பாடலில் வெளிப்படையாக நெருப்புக்குஞ்சொன்றால் காடு எரிவது என்பதே கருத்து. இந்த பரந்த மக்கள் நாட்டில் ஏதாவது ஒரு மகனின் நெஞ்சில் எங்காவது நுழையுமிடம் கண்டு சிறிது வீரத்தீயை வைத்து விட்டால் அது முழுமையாகப்பற்றி அனைவரிடமும் தாவிச்சென்று எங்கும் சுதந்திர மென்பதே பேச்சு என்பதை முழங்கி மகிழலாமல்லவா? இப்பொருளைதான் மேற்போந்த பாடல் வரிகள் வைத்துள்ளன. இவ்வாறு வைத்திருப்பதற்கு சொற்கள் தமது தமது நியம நிலையிலிருந்து நீங்கியமையே காரணமாகும்.

ஆபிரகாம் லிங்கனைப்பார்த்து வால்ட்விட்மன் என்ற புரட்சிக்கவிஞன் தனது கவிதையில் ஓரிடத்தில் "அவன் மனிதன்" எனக்குறிப்பிட்டாராம். அது போல கம்பனை பாரதியார் "கம்பன் என ஒரு மானிடன் பிறந்ததும்" எனப் பாடுகின்றார். இது போலவே சீவகசிந்தாமணியில் கேமசரி என்ற பெண் ஆண்மகனைக்கண்டால் தலை குனிவாள் என சோதிடன் கூறிப்போனன். பல ஆண்வடிவினர் வந்தனர்; அவள் தலை நிமிர்ந்தே நின்றாள். சீவகன் வரும் போது மட்டுமே அவள் தலை குனிந்திருந்தாள். என ஒரு காட்சியை திருத்தக்கதேவர் வடிக்கிறார். இவைகள் காட்டும் கருத்து என்ன? உண்மையில் மனிதவடிவில் தோன்றிய யாவரும் மனிதரல்லர். ஆண்மகன் ஆண்மகன்உருவில் தோன்றும் யாவரும் ஆண்மக்களல்லர் எனும் பொருளையே இங்கு தருகின்றது.

ஈழத்து மஹாகவியினுடைய கவிதைகளிலும் சொற்கள் தம் நியமத்தளத்திற்கு அப்பாற்சென்று பொருள்தருவதை தெளிவாக உணரமுடியும். சீதனக்கொடுமையைப்பற்றி பாடவந்த ம ஹாகவி.

"கொழும்பிலே காணி வயலோகேணி
சொந்தத்தில் கார் சோக்கான வீடு
இத்தனையும் இக்கணமே கொண்டுவரின்
வாணியின் பால் சிந்தையிழப்பான் தண்டபாணி

இங்கு வாணி மிகவும் அழகற்றவள். ஆனால் சீதனமாக பாடலில் குறிப்பிட்டவாறு கிடைக்குமாயின் வாணியை திருமணம் செய்யச் சித்தமாயிருப்பது புலனாகிறது. இதன்மூலம் மஹாகவி உணர்த்தவருவது சீதனத்தின் கொடுமையினை. இத்தனை சீதனமும் இல்லாத பெண்களுக்கு திருமணம் கனவுலகில் மட்டுமே என்பதை மிக எளிமையான சொற்களால் படம் பிடிக்கமுயலும் என்றால் இது சொற்களில் எல்லையற்ற சாத்தியப்பாட்டினூடாகவே சாதிக்கமுடிந்தது.

தனித்து கவிதையில் மாத்திரமல்ல ஏனைய இலக்கியவடிவங்களில் சொற்கள் தமது எல்லையற்ற சாத்தியப்பாட்டிற்கு எட்டும் தன்மை வாய்ந்தது. குறிப்பாகப் புனைகதை வடிவங்களாகிய சிறுகதை நாவல்,போன்றவற்றில் மிகத்தெளிவாக அவதானிக்கமுடியும். பல சிறுகதைகளின் முடிவில் வாசகர்களின் எண்ண அலைகளுக்கு விடப்படும் சந்தர்ப்பங்களில் சொற்கள் தமது நியமத்திற்கு அப்பால் நின்று இயங்குவதை அவதானிக்கமுடிகிறது. இந்நிலையினை ரஞ்சகுமாரின் கோசலை கு.ப.ராவின் சிறிது வெளிச்சத்திலும் புதுமைப்பித்தனின் பொன்நகரத்திலும் இலகுவாகவும் தெளிவாகவும் கண்டு கொள்ளலாம்.

சொற்கள் தமது நியமத்தளத்திற்கு அப்பால் நின்று இயங்கும் சந்தர்ப்பத்தில் தான் அனுபவப் பகிர்வு என்பது ஓரளவு முழுமை பெறுகிறது எனலாம். படைப்பாளியின் மனநிலையினை, உணர்வினை வாசகர் எட்டுவதே இங்கு அனுபவப்பகிர்வு எனப்படுகிறது.

சொற்களால் கட்டியெழுப்பப்படும் மொழியானது. இலக்கியத்தின் உடலாக அமைவதுடன் சொற்கள் தமது நியம நிலைக்கு அப்பாலும் சென்று இயங்கும் தன்மையுடையது என்பது கண்கூடு.

ஆக்கம்
**செல்வி ஜெயராதை கணேசலிங்கம்**
உயர்தரம் 2010 கலை

# கலைச்சொற்கள்

| | |
|---|---|
| இணையம் | Internet |
| வையக விரிவு வலை | World Wide Web |
| மின்னஞ்சல் | E-mail |
| கணனி மென்பொருள் | Computer Software |
| கணனி வன்பொருள் | Computer Hardware |
| பாதீடு | Budget |
| தொகைமதிப்பு | Census |
| தன்னார்வக் குழுக்கள் | Non Governmental Organization |
| பச்சை வீட்டு விளைவு | Green House Effect |
| பண்பலை | F.M |
| கருந்துளை | Black Hole |
| சிறப்பங்காடி | Supermarket |
| பெண்ணியம் | Feminism |
| உலகமயமாக்கல் | Globalization |
| அருங்காட்சியகம் | Museum |
| எண்மானம் | Digital |
| அமைவனங்கள் | Organization |
| தூய்மைக்கேடு | Pollution |
| படியாக்கம் | Cloning |
| மரபணு பொறியியல் | Genetic Engineering |
| நேர்முகம் | Interview |
| பரிந்துரை | Recommendation |
| விசைப்பலகை | Key Board |
| ஏமக்குறைவு நோய் | AIDS |
| வலைத்தளம் | Website |
| தகவல் ஊழி | Information World |
| புனைவுரிமை | Patent |
| ஊரகம் | Rural |
| செல்நெறி | Trend |

தொகுப்பு
செல்வி நிதர்சினி தங்கராசா
தரம் 9 பி

# மாதங்கள் கூறும் பழமொழிகள்

தை பிறந்தால் வழி பிறக்கும்

தை ஈனாப் புல்லுமில்லை மாசி ஈனா மழையுமில்லை

தை மழை நெய் மழை

தையும் மாசியும் வையகத்துறங்கு

மாசிப்பனி மூசிப்பெய்யும்

பங்குனி மாத வெய்யிலில் படையும் கலங்கும்

சித்திரை மாத வெய்யில் பத்தரை மாற்று தங்கம்

வைகாசி மழையில் வாழ பெருகும்.

ஆனி அரை ஆறு ஆடி முழு ஆறு

ஆடிக்காற்று அம்மியையும் தூக்கும்

ஆடிக்காற்றில் அம்மி பறக்கும் போது இலவம் பஞ்சிற்கு எங்கே கதி

ஆடி ஓராறு ஆவணி பேராறு

ஆவணி மேகம் தாவணி போடும்

புரட்டாதி வெயில் பொன்னுருக்காயும் மண்ணுருகப் பெய்யும்

புரட்டாதி பெருமழை

புரட்டாதி காய்ந்தாலும் காயும் பெய்தாலும் பெய்யும்

ஐப்பசி அடைமழை கார்த்திகை கனமழை

கார்த்திகைக்குப்பின் மழையும் இல்லை கர்ணனிற்குப் பின் -கொடையும் இல்லை

மார்கழிப்பனியில் பச்சையும் துளிர்க்கும்

ஆக்கம்

**செல்வி கெங்காதேவி கணேசலிங்கம்**

தரம் 10A

# தமிழில் காப்பியம் என்ற இலக்கிய வடிவம் தோன்றி வளர்ந்த வரலாறு.

காப்பியம் என்பது ஆங்கிலத்தில் EPIC என்று சொல்லப்படுவதற்கு நிகரானது. வடமொழியில் இது மகாகாவியம் என்று சொல்லப்படுகிறது. தமிழிற்கு காப்பியம் என்ற வடமொழியில் "காவியதர்ச" என்னும் சொல்லில் இருந்து வந்ததாகும். ஆங்கிலத்தில் EPIC என்பது EPOS என்னும் கிரேக்கச் சொல்லின் அடியாகத் தோன்றியதாகும். EPOS என்றால் வீர மரபுச் செயல்களை எடுத்துகூறுவதாக அமையும். தமிழில் காப்பியம் என்னும் சொல்லாட்சி வீரகாவியம், காப்பியம், பெருங்காப்பியம், தொடர்நிலைச்செய்யுள் என பல நிலையில் வழங்கப்படுவதுண்டு.

உலகப் பொதுவாகவும் எமது தமிழ் மொழியிலும் ஆதிகாலம் தொட்டு குறித்த கருத்துக்கள் வாய்மொழியாக கதை கூறும் மரபு ஊடாக கடத்தப்பட்டு வந்து உள்ளது. என்பதில் ஆய்வாளர்களிடையே கருத்து வேறுபாடில்லை. கதையுரைத்தல் என்பது ஒரே வடிவத்தில் இல்லை. புராண மரபுக்கதைகள் புகழ் மரபுக்கதைகள், புதினங்கள், அற்புதக்கதைகள் என பலவடிவங்களில் கதையுரைத்தல் மரபு உண்டு. இது உரை நடையிலோ கவிதைவடிவிலோ இரண்டும் கலந்தனவாகவோ வரலாம். வாய் மொழியாகவும் சொல்லப்படலாம். இப்படிப்பட்டஉரைகளில் ஒன்றே காப்பியம் எனப்படும்.

ஆரம்ப காலத்தில் இனக்குழுச்சமுதாய அமைப்பே காணப்பட்டது இதன் விளைவால் கருத்து தெரிவிப்போர் கூட்டுப்பாடல்களாகவோ தனிப்பாடல்களாகவோ துதிப்பாடல்கள் மூலமாகவோ வெளியிட்டனர். இவ்விடத்திலேயே கதைகூறும் மரபு தோற்றம் பெறுவதை அவதானிக்கலாம். ஏனையமொழியில் இருப்பது போன்று தொல் பழங்காலத்தில் பாடப்பட்ட கூட்டுப் பாடல்களோ தனிப்பாடல்களோ இல்லை. ஆய்வாளர் 'பௌரா' அவுஸ்ரேலியா பழங்குடி மக்களிடமிருந்தே பாடல்களை தனது ஆய்வில் எடுத்துக்காட்டுகிறார். தமிழில் கதைகூறும் மரபுபற்றிய பாடல்களை சங்கத்தெகைப்பாடல்களிலோ அல்லது தொல்காப்பியத்திலோ தேடவேண்டியுள்ளது.

ஆரம்ப காலத்தில் வேட்டையாடித்திரிந்த மனிதன் பின்பு நிலையாகத்தரித்து விவசாயம் செய்து இனக் குழுமமாக வாழத் தலைப்பட்டான். இந்நிலையிலேயே இயற்கை சக்திகளுக்கு இறைநிலை கொடுத்து பல்வேறு சடங்குகளையும் செய்தான். இந்நிலையில் இனக்குழுக்களிடையே மோதல்கள் ஏற்பட அதில் இருந்து இனக்குழு தலைவர்கள் உருவாக அவர்களது வீரம் புகழ்ப்பாடப்பட அவ்வீரத்தலைவர்களிடையே மீண்டும் மோதல்கள் உருவாக அவற்றில் இருந்து உருவானதே அரசு. இந்நிலையில் அரசின் வீரம் சார்ந்த செயல்களைப்பற்றிய கதையில் பாடல்கள் ஒழுங்குபடுத்தப்பட்டன. அவையே சங்கத்தொகைப்பாடல்கள். இப்பாடல்களை அடியொற்றியே கால மாறுதலினாலும் சமண, பௌத்த செல்வாக்கினாலும் உருவானதே சிலப்பதிகாரம் மணிமேகலை எனும் இரட்டைக்காப்பியங்கள்.

தமிழில் காப்பியவடிவம் தோன்றுவதற்கு பாணர் மரபும் முக்கியம் வாய்ந்ததாகும். பாணர்களுக்கு பொருள் வேண்டியிருந்தது. அரசர்களுக்கு புகழ் வேண்டியிருந்தது. எனவே புகழும் பொருளும் சேரும் போது பாடல்கள் உதித்தன. இப்பாடல்கள் யாவும் அரசின் வீரம் கொடைச்சிறப்பு ஆகியவற்றையே எடுத்தியம்பியது.

**"வீரயுகத்தில் வாழ்ந்த வீரப் பெருமக்களின் செயற்கருஞ் செயல்களை அவர் தம் வெற்றி தோல்விகளை பாணர்கள் மக்கள் குழுமியஅவைகளிற்பாடி அச்சம் அவலம் முதலிய உணர்ச்சிகளில் மூழ்கித் திளைக்கச் செய்தனர்."**

எனப் பேராசிரியர் கைலாசபதி கூறுவார். அவர் சங்ககாலத்தினை வீரயுககாலமாகவே சித்தரிப்பர். பேராசிரியர் கைலாசபதி இக்காலத்தில் பாடியபாணர்களின் வீரம் செறிந்த பாடல்கள் காப்பியத்திற்கு நிலைகளன் ஆகியது என்று கூறுவர். ஆனாலும் தமிழில் முதல் தோன்றிய இரட்டைக்காப்பியங்களில் அரசனோ அன்றி வீரமோ சிறப்பிடம் பெறவில்லை. என்பது மனங்கொள்ளத்தக்கது இக்கருத்தினை பேராசிரியர் அ.ச.ஞானசம்மந்தனும் வற்புறுத்திச்சென்றார்.

எமது தமிழ் மரபில் நெடும் பாடல் மரபு ஆரம்பத்தில் இருந்து வருகின்றது. எமக்குக் கிடைத்துள்ள சங்கத்தொகைப் பாடல்களில் மதுரைக்காஞ்சி 782 அடிகளையும் பட்டினப்பாலை 301 அடிகளையும் நெடுநெல்வாடை 186 அடிகளையும் பொருநராற்றுப்படை 500 அடிகளையும் கொண்டுள்ளது. இந் நெடும்பாடல் மரபே பிற்காலத்தில் தொடர்நிலை செய்யுள்கள் தோன்ற வழிவகுத்தது எனலாம்.

எமது தமிழ் மரபில் ஆற்றுப்படை இலக்கிய வடிவமும் தமிழ் காப்பியம் தோன்றுவதற்கு வழிவகுத்தது எனலாம். இங்கு பரிசு பெற்றவர் பரிசுபெறாதவவை ஆற்றுப்படுத்தும் போது அரசனைப் பற்றியும் அவனது ஊரைப்பற்றியும் செல்லும் வழியை பற்றியும் கூறவேண்டியிருப்பதால் பல்வேறு பட்ட வர்ணனை காப்பியத்தில் முக்கியத்துவம் பெறுதல் குறிப்பிடத்தக்கது.

சங்க கால தனி நிலைச்செய்யுள் சங்கமருவிய கால தொடர் நிலைச்செய்யுளாக விரிவடைந்தது. சோழர்காலத்தில் பேரிலக்கியமாக வளர்ச்சியடைந்தது. சோழர்காலம் காப்பிய நெறிக்காலம் எனவும் அழைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. சிலப்பதிகாரம் மணிமேகலை எனும் இரட்டைக்காப்பியங்களும் தோன்றி வளர்சியடைந்தது. எனினும் சோழர் காலத்தில் கம்பராமாயணம் எனும் காப்பியம், காப்பியங்களிலே சிறப்பிடம் பெறுகிறது.

பேரரசு தோன்றுகின்றபோது பெருந் தத்துவங்கள் தோன்றும் என்பர். அதுபோலவே பேரரசு உருவாக்கமானது காப்பியங்கள் தோன்றுவதற்கும் நிலைக்களனாக அமைந்தது.

முடிவாக தமிழில் இனக்குழுத் தலைவர்களின் அருஞ்செயல்களைப் பற்றிய செய்யுளாகத் தொடங்கி அரசுருவாக்கம் நிகழ்ந்த நிலையில் இவை மன்னர்களின் அவையில் புகழ் மரபு பற்றிய நிகழ்வாக அமைந்தது. இவ் வளர்ச்சி நிலையினூடேதான் தமிழில் கதை கூறும் மரபு காப்பி வடிவம் பெற்றது.

ஆக்கம்
**செல்வி நிதுஷா சிவபாலன்**
உயர்தரம் 2011

# புதிய பொருளாதார ஒழுங்கு எதிர்கால உலகத்தின் தேவை.

- புதிய பொருளாதார ஒழுங்கு என்றால் என்ன
- புதிய பொருளாதார ஒழுங்கின் தேவை
- புதிய பொருளாதார ஒழுங்கினை எவ்வாறு மேற்கொள்வது
    - விவசாயத்துறை
    - கைத்தொழில்துறை
    - மீன்பிடித்துறை
    - சேவைத்துறை

## புதிய பொருளாதார ஒழுங்கு என்றால் என்ன

இன்று உலகம் எதிர்நோக்கும் முக்கியமான பிரச்சினையாக சூழல் பிரச்சினை உள்ளது. என்று கைத்தொழில் புரட்சி ஏற்பட்டதோ அன்றில் இருந்து சூழல் பற்றிய பிரச்சனை ஆரம்பமாகத் தொடங்கியது. உலகளாவிய ரீதியிலே சூழல்பிரச்சனையில் இருந்து விடுபடுவதற்கான சர்வதேச மாநாடுகளும் ஒப்பந்தங்களும் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த வகையில் ஐ.நா நிறுவனம் தன்கிளை நிறுவனங்களுடாக மேற்கொள்ளப்பட்ட புவி உச்சிமாநாடு முக்கியத்துவம்பெறுகின்றது. 1992 இல் பிரேசில் நாட்டின் கியோடி நகரில் நடைபெற்ற புவிஉச்சிமாநாட்டின் நிறைவில் எடுக்கப்பட்ட நிகழ்ச்சி 21 என்னும் நிகழ்ச்சித்திட்டம் 21ஆம் நூற்றாண்டில் உலக சூழலை பேணுவதற்கு உலக நாடுகள் மேற்கொள்ளவேண்டிய பணிகள் பற்றி விரிவாக குறிப்பிடுகின்றது. மேற்படி மகாநாட்டில் வலியுறுத்திய பல்வேறு விடயங்களில் ஒன்று உலகில் புதிய பொருளாதார ஒழுங்கு ஒன்றினை சூழலுக்கு இயைய உருவாக்குதலும் வளர்த்தெடுத்தலுமாகும். புதிய பொருளாதார ஒழுங்கு என்றால் என்ன என்று நோக்குவோமானால் விவசாயம் மீன்பிடி கைத்தொழில் சேவைத்தொழில் என்னும் பொருளாதாரத்துறைகளில் சூழல் நட்பார்ந்த தொழில் நுட்பத்தை பேணுதல் ஆகும். இதுவே எதிர்கால உலகத்தினை வாழவைக்கும். இவை பொதுவாக நிலைத்து நிற்கக்கூடியஅல்லது பேண்தகு அபிவிருத்தியை விளக்க போதுமானது என்பதே சூழலியலாளர்களின் எதிர்பார்ப்பாகும்.

## விவசாயத்துறை

இன்று உலக மக்கள் றியோ மாநாட்டிற்கு பின்னர் நிலைத்து நிற்கக்கூடிய வேளாண்மை இயற்கை வேளாண்மை பற்றி சிந்திக்கத் தொடங்கியுள்ளனர். புதுப் பொருளாதார ஒழுங்கானது சூழல் நட்பார்ந்த முறைகளை பயன்படுத்தி விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனக் குறிப்பிடுகின்றது. அதாவது இயற்கை முறைகளை மேற்கொள்ள வேண்டும் எனக் குறிப்பிடுகின்றது. இயற்கை வேளாண்மையின் தந்தையென ஜப்பானிய விவசாயியான மாசனோபு பியுகாகோ அழைக்கப்படுகின்றார். இவர் 1977 இல் இயற்கை வழி என்ற நூலை எழுதியுள்ளார். அதேபோல் பில் மோலிசன இயற்கை வேளாண்மை முறைகளை ஆதரிப்பவர்களாக காணப்படுகின்றனர்.

இன்று பயிர்ச்செய்கை நடவடிக்கைகளுக்கு கிருமிநாசினிகளோடு அசேதன இரசாயன வளமாக்கிகளும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இவற்றினை பயன்படுத்துவதால் உடனடியாக விளைச்சல் அதிகரிக்கும் ஆனால் நீண்ட காலப் பாவனையின் பின்னர் மண்ணின் தரம் குன்றிவிடும் அபாயம் உள்ளது. விவசாய நிலத்தில் விழும் மேலதிக வளமாக்கிகள் நீரில் கரைந்து கழிவு நீராக நதிகள் குளங்கள் போன்ற நீர்த்தேக்கங்களில் கலந்து தரைக்கீழ் நீரை சென்றடையும் நிலையும் உருவாகின்றது. இவற்றினைத் தடுப்பதற்கு சேதன விவசாய முறைகளைக் கையாள வேண்டும். சேதன விவசாயம் என்பது இயற்கை வளங்களை பயன்படுத்தி செய்யப்படும் விவசாயம் ஆகும்.

இதற்கு இயற்கையான சேதனப் பசளைகளை கூடிய வகையில் பயன்படுத்த வேண்டும் அத்துடன் பூச்சிகளும் களைகள் என்பவற்றினைக் கட்டுப்படுத்த உபயோகித்த பாரம்பரிய முறைகளைத் திருத்தி பயன்படுத்த வேண்டும். இதற்கு பின்வரும் முறைகளைப் பயன்படுத்தலாம்.

- இலங்கையின் நெல் வயல்களில் பூச்சிகளை கவர்ந்திழுக்க விளக்கு பொறிமுறையை பயன்படுத்தலாம்.

- உயிர்ப்பீடை நாசினிகளை பயன்படுத்தல். அதாவது வேப்பெண்ணெய் விசிறல், வேப்பம் புகை போன்ற முறைகளை பயன்படுத்தல்.

- உயிரியல் பீடைக்கட்டுப்பாடு, கலாசார பீடைக்கட்டுப்பாடு என்பவற்றை பயன்படுத்தல், நுண்ணங்கிகளின் தொழிற்பாட்டினை பயன்படுத்தி நிலத்தில் விடப்பட்ட இரசாயன மாசுகளை அகற்றும் ஒரு செயற்பாடு உயிர்ப்பரிகாரம் எனப்படும்.இதில் மண்ணில் இயற்கையாக காணப்படும் நுண்ணங்கிகள் அல்லது புகுத்தப்பட்ட நுண்ணங்கிகள் பயன்படுத்தப்படுகின்றன. இவ் நுண்ணங்கிகள் சுரக்கும் கலப்புற நொதியங்களில் மாசுக்களாக காணப்படும் சேர்வைகள் பிரிகையாக்கத்துக்கு உட்பட்டு நச்சுத்தன்மையற்ற விளைவுகளாக மாற்றப்படுகின்றன. இதனால் மாசுக்கள் படியிறக்கத்துக்கு உள்ளாக்கப்படுகின்றன.

- சேதன விவசாயத்தில் பயிர்ச்சுழற்சி முறைகளை பயன்படுத்தல். அதாவது ஓரினத்துப்பயிர்ச்செய்கையால் மண்வளம் இழக்கப்படுகிறது இதனை தவிர்ப்பதற்கு பயிர்சுழற்சி மேற்கொள்ளலாம்.

உதாரணமாக நெற்பயிர் போன்ற தானியங்கள் பயிரிடப்படும் இடங்களில் அவரைக்குடும்ப பயிர்கள் கரட் பயிர்கள் மாறி மாறி பயன்படுத்துவதன் மூலம் பயிர் இனத்திற்கு தற்சிறப்பான பீடை எண்ணிக்கை பெருக்கம் அடைவதைத் தடுக்கலாம்

- பிறப்புரிமை பொறியியல் மூலம் பயிரின் தரத்தை உயர்வடையச் செய்யலாம். இதன் மூலம் வளம் குறைந்த மண்ணில் வளரும் இயல்பைப் பயிர்த்தாவரத்தில் புகுத்துதல், வரட்சியைத் தாங்கும் திறனான உவரான நிலத்தில் வளரும் ஆற்றலைப் பயிரில் புகுத்துதல். பீடைகளின் தாக்கத்திற்கு எதிர்ப்புத்திறனைப் பயிரில் விருத்தி செய்தல்.

எனவே சேதன வளமாக்கிகள் பயன்யடுத்துவதால் ஏற்படும் நன்மைகளாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

1. மண் நுண்ணங்கிகளை போதிய உணவு கிடைத்தல். அவற்றின் தொழிற்டபாடு கூட்டப்படுகின்றது.

2. மண்ணில் உக்கலின் அளவு அதிகரிக்கின்றது

3. மண்ணில் நீரையும் கனிப்பொருள் அயன்களையும் நிலைநிறுத்தி வைத்திருக்கும் அளவு கூட்டப்படுகின்றது. இதனால் கனிப்பொருள் அயன்கள் நீர்முறை அரிப்பினால் கழுவிச்செல்லப்படுதல் குறைக்கப்படுகிறது.

4. மண் உவர்த்தன்மை அடைவதில்லை.

5. மண் ph மாற்றம் அடைவதில்லை.

6. மண் துணிக்கைகள் ஒன்றுடன் ஒன்று இணைக்கப்பட்டு சிறு துணிக்கையாவதனால் மண் இழை அமைப்பு பயிர்ச்செய்கைக்கு ஏற்றதான மாற்றம் அடைகின்றது.

7. பயிர் சுழற்சி முறைகளை பயன்படுத்துவதால் வெவ்வேறு பயிர்களின் கனிப்பொருள் போசணை தேவைகளும் மண்ணில் வேர்பரவி வளரும் தன்மைகளும் வேறு படுகின்றன. இதனால் மண்ணில் சில கனிப்பொருள் பதார்த்தங்களுக்கு ஏற்படும் பற்றாக்குறைகள் குறைக்கப்படுகின்றன.

இன்று இயற்கை வேளான்மை பற்றி 3ம் உலக நாட்டவரே அதிக அக்கறை கொண்டிருக்கின்றனர். இந்தியாவின் அகலபாத் நகரில் அனில்குப்தா என்ற நிறுவனம் காந்தீய நிறுவனத்துடன் இணைந்து நடத்தும் குளோரியா பண்ணை, கீரனூரில் நம்மாழ்வார் நடத்தும் லீசாப்பண்ணை, குடுமலைப்பேட்டையில் இராமநாதனின் விவசாய காட்டியல் பண்ணை, எம்.எஸ் சுவாமிநாதனின் ஆராட்சி நிறுவனம் வீரனூரில் உள்ள சுற்றுச்சூழல் பண்ணை போன்றன இயற்கை வேளாண்மையை பின்பற்றுவதாக காணப்படுகின்றது. அதே போல் இலங்கையில் சர்வோதயம் நடத்தும் பண்ணைகளும் மன்னார் ஸ்கந்த ஃபாம் உம் இயற்கை முறை பண்ணைகளாக காணப்படுகின்றன.

## புதிய பொருளாதார ஒழுங்கின் தேவை

இன்று மனிதன் புவித்தொகுதியின் சகல கூறுகளிலும் தன் ஆதிக்கத்தினை செலுத்தியுள்ளான். மனித வாழ்வின் வரலாற்றுப் போக்கினை பார்க்கும்பொழுது ஒவ்வொரு கால கட்டத்திலும் வெவ்வேறுபட்ட தொழில்நுட்பத்தை பயன்படுத்தியே புவித்தொகுதிக்கூறுகளை தன் தேவைக்குரிய வளங்களாக மாற்றிப் பயன்படுத்தி வந்த தன்மையை அறிய முடிகிறது. புவித்தொகுதியும் மனிதனுக்கு தேவையான வளங்களை நீண்ட நெடுங்காலமாக சிக்கலெதுவுமின்றி வழங்கி வந்துள்ளது. மனித குலத்தின் இயற்கைக்கு மாறான அதிகரிப்பு அவனது பேராசைக்குரிய தொழில்நுட்பம். புவித்தொகுதியின் வளங்களை பெருமளவு சுரண்டின. வீண் விரயமாக்கின இதனால் வளங்கள் அழிந்ததால் தேவைக்கு அதிகமான வழங்கள் பயன்படுத்தப்பட்டு வந்ததால் வளப்பற்றாக்குறை ஏற்பட்டது. புவித்தொகுதியின் சகல கூறுகளையும் சிறிது சிறிதாக பாதித்து புவித்தொகுதியினை சூழல்மாசடையும் நிலையினை தோற்றுவித்துள்ளது.

கைத்தொழில் புரட்ச்சிக் காலத்திலேதான சூழல் மாசடைதல் மனித வரலாற்றிலே என்றுமில்லாதவாறு நிகழ்ந்துள்ளது. இதனால்த்தான் அண்மைக்கால சூழலியலாளர்கள் சூழலுக்கும் ஊறு விளைவிக்காத வகையில் சூழல் நட்பார்ந்த தொழில்நுட்பமே எதிர்கால உலகத்துக்கு

புதிய பொருளாதாரத்துக்கு அவசியமென வலியுறுத்தி வருகின்றார்கள். குறிப்பாக மனிதன் வாழ்க்கையில் மாத்திரமின்றி இப்புவியில் உயிரியல் வாழ்க்கையை நிலைநிறுத்துவதற்காக 20ம் நூற்றாண்டுக்குரிய தொழில்நுட்பம் சூழலைப்பேணுகின்ற அதாவது அதனைப்பெருமளவு பாதிக்காத தொழில்நுட்பமாக விளங்கவேண்டுமென உலக சமூகத்திடம் விண்ணப்பித்து வருகிறார்கள். இதுவே எதிர்கால சந்ததியினர் எம்மீது பழிசொல்லாதிருக்க வழி செய்யும். இதன் பின்புலத்தில்தான் புதிய பொருளாதார ஒழுங்கு என்ற விடயம் முனைப்பு பெறுகிறது.

## கைத்தொழில் துறை

கைத்தொழில்துறையில் புதிய பொருளாதார ஒழுங்கு எவ்வாறு அமையலாம் என பலரும் விவாதித்து வருகின்றார்கள். கைத்தொழில் புரட்சியினை அடுத்து மிக வேகமாக சுரண்டப்பட்டுவந்த இயற்கை வளங்களினை எவ்வாறு பாதுகாக்கலாம்? குறிப்பாக கைத்தொழிலுக்கு வேண்டிய மூலப்பொருள், வலுவளம் என்பன புதிய பொருளாதார ஒழுங்கில் மேற்கொள்ள வேண்டியுள்ளது. அத்துடன் சில கைத்தொழில் வெளியீடுகள் சூழலினைப் பாதிப்பதாகவும் உள்ளது. இதனை மாற்றியமைக்க வேண்டியுள்ளது. கைத்தொழிலில் புதிய பொருளாதார ஒழுங்கு இரு வழிகளில் இடம்பெறலாம்.

01. அருகிச்செல்லும் மூலவளங்களைப் பாதுகாத்தல்
02. மாசடையும் பூகோளத்தைப் பாதுகாத்தல்.

கைத்தொழில் நடவடிக்கையால் பல மூலவளங்கள் அருகிச் செல்கின்றன. புதுப்பிக்க முடியாத வளங்களே இவ்வாறு அருகிச் செல்கின்றன. நிலக்கரி, இரும்புத்தாது என்பன கைத்தொழிலுக்கு அதிகமாக பயன்பட்டுவரும் மூலவளங்களாகும். இவை அதே கைத்தொழிலுக்கு வலுவாகவும், மூலப்பொருளாகவும் இருப்பதால் தேய்வடைந்து வருகின்றது. இதனைப் பாதுகாக்க புதிய பொருளாதார ஒழுங்கில் கவனம் செலுத்தப்படவேண்டியுள்ளது. கைத்தொழில் நடவடிக்கைகளுக்கு வேண்டிய மாற்றுவலுவினைக் கண்டுபிடித்து பயன்படுத்த வேண்டியுள்ளது. இதன் பின்னணியில் மாற்றுவலு வளங்கள் இன்று உலக ரீதியாக பயன்படுத்தப்பட்டு வருகின்றது. சூரியசக்தி, கடலலைசக்தி, மெதேன் வாயு, நிலவெப்ப சக்தி, காற்று சக்தி என்பவற்றின் பயன்பாட்டினை அதிகரிப்பதன் வாயிலாக பெற்றோலியம், நிலக்கரி பயன்பாட்டினைக் குறைத்துக்கொள்ளலாம். ஜப்பானில் டோக்கியோ நகரத்தில் இன்று வீட்டுக் கூரைக்கு ஓட்டுக்குப் பதிலாக சூரியக் கலங்கள் பொருத்தப்பட்டு அதிலிருந்து மின்சாரம் பெறப்படுகின்றது. இது குறைவுபடாத வளமாகவும், சூழலைப் பாதிக்காத வளமாகவும் காணப்படுவது சிறப்பம்சமாகும். இந்தியா போன்ற நாடுகளில் பெரிய காற்றாலைகள் உருவாக்கப்பட்டு காற்றுசக்தி பெறப்படுகின்றது. இவ்வாறே கடலில் வற்றுப்பெருக்கு செயற்பாடு, கடலலையின் செயற்பாடு, குத்தான கிடையான நீரோட்டங்களின் அசைவினாலும், கடல் மெதேன் வாயுப் படிவினாலும் பொருத்தமான சுழலிகளைப் பயன்படுத்தி மின்சாரத்தை உற்பத்திசெய்து கொள்ளலாம். மேலும் புவியின்கீழ் காணப்படும் மின்வீச்சுச் செயற்பாடுகளினால் மைக்கா எனப்படும் பாறைக்குழம்பு கொதிநிலையில் காணப்படுகின்றது. இது வெப்ப நீரூற்றுக்களையும், நீராவியையும் ஏற்படுத்தக் கூடியது. இதற்குப் பொருத்தமான பொறியியற் சாதனங்களை உருவாக்கி பயன்படுத்திக் கொள்ளலாம். 1965இல் ஐக்கிய அமெரிக்கா இவ்வாறான செயற்பாட்டில் ஈடுபட்டு வெற்றி பெற்றது. திண்மக் கழிவுகளை எரிபொருளாகப் பயன்படுத்தும்

தொழினுட்பம் அண்மைக் காலங்களில் ரஷ்ய நாட்டில் பரீட்சார்த்தமாக மேற்கொள்ளப்பட்டது. சீனாவில் குறைந்தவலுவில் இயங்கக்கூடிய மின்சாதனங்களைப் பயன்படுத்துவோருக்கு ஊக்குவிப்புக்களும் வழங்கப்பட்டு வருகின்றது.

கைத்தொழிலுக்கு பயன்படுத்தப்பட்டுவரும் மூலப் பொருளுக்குப் பதிலாக வேறு பதிலீட்டுப் பொருட்களின் பாவனையை அதிகரித்தல் இயன்றளவுக்கு மூலப்பொருட்களைப் புதுப்பித்தல், உச்சப் பயன்பாட்டிற்குக் கொண்டுவரும் செயன்முறைகளை ஊக்குவிக்க வேண்டும். குறிப்பாக கழிவு இரும்பினை மீள உருக்கி, புதிய வடிவில் மோட்டார் வாகனங்களை உற்பத்தி செய்யலாம். இதில் ஜப்பான் கூடிய கவனம் செலுத்தி வருகின்றது. இரும்பிற்குப் பதிலாக செயற்கைப் பொருட்களைப் பயன்படுத்துதல், கப்பல் கட்டும்தொழிலில் இது பயன்பட்டு வருகிறது. இன்று அலுமினியத்திற்குப் பதிலாக புதிய செயற்கையான மூலப்பொருள் பயன்படுத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். இன்று அனேக மோட்டார் வாகனங்களில் தனி இரும்பிற்குப் பதிலாக கலப்பு சேர்வைகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

இன்றைய உலகில் பெரும்பிரச்சினையாக விளங்கும் சூழல் மாசடைதல், சக்திவளப் பற்றாக்குறை என்பவற்றைத் தீர்ப்பதற்கு புதியதோர் அணுகுமுறையினை கைத்தொழிலில் கைக்கொள்ளவேண்டிய தேவை தோன்றியுள்ளது. இதனையே உலகம் இன்று உணர்ந்து விட்டது.

## மீன்பிடித்துறை

மீன்பிடியைப் பொறுத்தவரை அணு உலைக் கழிவுகளால் பெரிதும் பாதிக்கப்படும் கடல் அடித்தளங்களை பாதுகாத்து மீன்பிடியோடு இணைந்த பல கடல்வள உணவுகளை அபிவிருத்தி செய்யவேண்டுமெனப் புதிய பொருளாதார ஒழுங்குகள் செய்வோர் சிபார்சு செய்கின்றனர். கடல் வளத்தை உணவுக்காக இதுவரை ஒரு வீதத்தையே பயன்படுத்திவரும் உலகம் மிகுதி தொண்ணூற்றொன்பது வீதம் கடல் வளத்தைப் பயன்படுத்தும் முறையைக் கண்டறியவேண்டும் எனக் கருதுகிறார்கள். கைத்தொழில் கழிவுகளால் கடல்வாழ் உயிரினங்கள் அழிவதிலிருந்து பாதுகாக்கப்படவேண்டும். திறந்த கடல்களைப் போன்று கடல்நீர் ஏரிகளிலும் இயற்கைச் சூழல் பாதுகாக்கப்படவேண்டும். மீன் உற்பத்தியிலும் அதிகரிப்பிலும் நீரோட்டங்களின் பங்கு முக்கியமானதாகும். இந்நீரோட்டங்கள் தடைப்படுமானால் மீன்வளம் பாதிக்கப்படும். எனவே நீரோட்டங்களைத் தடுத்து பாலம் அமைக்கும் முறை தடைசெய்யப்படவேண்டும். கைத்தொழில் கழிவுகளை கடலில் கொட்டுவதாலும் மீனினங்கள் அழிவடைகின்றன. டைனமற் போன்ற வெடிகளைப் பாவிப்பதால் வேறுபாடின்றி சலக மீனினங்களும் அழிகின்றன. இதிலிருந்து விடுபடுவதன் மூலம் எதிர்கால உலகத்தினைப் பாதுகாக்க முடியும்.

சேவைத் துறை

சேவைத்தொழிலில் எவ்வாறு புதிய பொருளாதார ஒழுங்கினைப் புகுத்தலாம் என நோக்கும்போது வீதியமைப்பு, குடியிருப்பு அமைப்பு, பாலம் அமைப்பு போன்றவற்றிலும் சூழல் நட்பார்ந்த தொழினுட்பங்களை சூழலைச் சீர்குலைக்காத முறைகளில்

அறிமுகப்படுத்தப்படவேண்டுமெனச் சிபார்சு செய்கின்றனர். காடுகள் பெருந்தொகையாக அழிக்கப்பட்டு பெறுமதிவாய்ந்த உயிரினங்கள் அழிக்கப்பட்டு குடியிருப்பு வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளும்போது சூழல் நட்பார்ந்த கொள்கை கடைப்பிடிக்கப்படவேண்டும். இவ்வாறான முறையில்தான் புதிய பொருளாதார ஒழுங்கு இருபத்தோராம் நூற்றாண்டின் பொருளாதாரத்திற்கு வழிகாட்டவேண்டும் என்று உலகப் பொருளாதார அறிஞர்கள் மாநாடுகள் மூலம் உலகிற்கு அறிவித்து வருகின்றனர்.

ஆக்கம்
**செல்வி ரவீந்திரராணி ரவிச்சந்திரன்**
**செல்வி கலைவாணி பழனிவேல்**
**செல்வி நிதுஷா சிவபாலன்**
உயர்தரம் 2011 கலை

அலையோடும் வலையோடும் மலையாமல் விளையாடி
சளையாத வீரமனமே! - நாளை
விடிவோடு புதுவாழ்வு திடமாக வருமென்று
தளராமற் கூறு மனமே!

வளர்கின்ற நிலவோடு வருகின்ற புத்தாண்டு
வளமெலாம் கொண்டு வருமே! - எங்கள்
இளமாந்தர் எதிர்கால நலமோங்க ஒன்றாக
எழுவார்கள் தேறு மனமே.

**சில்லையூர் செல்வராசன்**

# மின்வலுவும் அதன் வரலாற்று ரீதியான வளர்ச்சியும்

மைக்கல் பரடே 1831இல் ''மின் காந்த உராய்வின் அடிப்படைக் கோட்பாடு" நூலை எழுதி வெளியிட்டு முதலாவது மின்சார ஜெனரேட்டரை உருவாக்கி 50 வருடங்களின் பின்னர் மின்சாரம் வழங்கல் கைத்தொழில் ஆரம்பமாகியது. ஐக்கிய இராச்சியத்தில் அமைந்திருந்த பிரித்தானிய நகரம் 1881 இல் முதன் முதலில் மின்சார வசதியைப் பெற்றுக்கொண்டது. மின்சாரத்தின் மூலம் வெளிச்சத்தை முதன் முதலில் பெற்றுக்கொண்ட பெருமை அந்நகரையே சாரும்.

இலங்கையில் முதன்முதலாக 1895இல் மின்சாரம் அறிமுகம் செய்யப்பட்டது. கொழும்பு புறக்கோட்டையில் பிரிஸ்டல் வீதியில் அமைந்திருந்த 'மெஸர்ஸ் பவுஸ்டேட் பிரதேர்ஸ்" என்ற நிறுவனம், ஒரு சில வர்த்தக நிறுவனங்கள் சில அரசாங்க கட்டங்கள், கோட்டைப்பகுதியில் இருந்த வீடுகள் என்பவற்றுக்கு வெளிச்சத்தினை வழங்குவதற்காக 1895 யூலை மாதத்தில் மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கென ஒரு சிறிய மின்சார நிலையத்தை ஸ்தாபித்து, அதன் பின்னர் யுனைட்டெட் பிளான்டர்ஸ் கனம்பனி என்ற நிறுவனம் இத் தொழிலை பொறுப்பேற்றுக் கொண்டதுடன் மின்சார வழங்கல் முறை விஸ்தரிக்கப்பட்டது. அத்துடன் இந் நிறுவனம் 1899இல் கொழும்பு இலக்டரிக் ட்ராம்வேய்ஸ் கம்பனியையும் ஆரம்பித்தது.

1902இல் கொழும்பு இலக்ட்ரிக் ட்ராம் வேய்ஸ் கம்பனி லிமிட்டெட் நிறுவனம் ஸ்தாபிக்கப்பட்டதுடன் புறக்கோட்டையில் காஸ்வோக்ஸ் வீதியில் புறக்கோட்டை மின்சார நிலையம் நிர்மானிக்கப்பட்டது. இது படிப்படியாக காலி முதல் கொள்ளுப்பிட்டி வரையில் விஸ்தரிக்கப்பட்டதுடன் பல வீடுகளுக்கு மின் இணைப்புக்கள் வழங்கப்பட்டன. மின்சார நிலையத்தினை ஸ்தாபித்ததையடுத்து கண்டி நகருக்கு மின்சாரம் வழங்கப்பட்டது. பிரதானமாக அரசாங்க மற்றும் வர்த்தக அலுவலகங்களுக்கே மின்சாரம் வழங்கப்பட்டது.

அரசாங்கம் 1912இல் நுவரெலியாவில் மின்சாரத்திட்டமொன்றைத் தொடக்கி வைத்தது. அதன் பின்னர் சிறிது காலத்தில் கம்பஹா, வியாங்கொடை, யாஎல, பேலியகொடை, கொச்சிக்கடை, அவிசாவளை மற்றும் மினுவாங்கொடை போன்றமேல்மாகாணத்தைச் சேர்ந்த பல நகரங்களுக்கு மினசார வசதி வழங்கப்பட்டது. இவ்வாறாக 1929இல் 6 நகரங்கள் தமது சொந்த விநியோக முறைகளைக் கொண்டிருந்தன. மேலும் நகரங்களில் இதற்கான கட்டுமானப் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

மின்சார பொறியியலாளரான ஆர். பி. ரைலண்ட் டஸ் என்பவர் நீர் மின்திட்டமொன்றை உருவாக்கி மின்சாரத்தை உற்பத்தி செய்து கொழும்புக்கு அனுப்புவதற்கு லக்சபானாவிற்கு அருகில் போதியளவு நீர் உள்ளதென 1910 இல் உயரதிகாரிகளுக்கு அறிக்கையிட்டார். டி. ஜே. விமல சுரேந்திரா நீர் மின்சார சக்திக்கென இந்நீரைப் பயன்படுத்திக் கொள்வதற்கென நடைமுறைச் சாத்தியமான திட்டமொன்றை உருவாக்கினார். இத்திட்டத்தின் பொருளாதார அம்சங்களை கவனத்தில் எடுத்த அரசாங்கம் லக்சபான செயற்றிட்டம் தொடர்பான வேலைகளை 1924 இல் ஆரம்பித்தது.

1930 களின் தொடக்கத்தில் ஏற்பட்ட பொருளாதார மந்தம் காரணமாகவும், 2ம் உலகப்போர் அத்தசாப்தத்தின் இறுதியில் ஆரம்பமாகியமையாலும் லக்சபான நீர்மின் செயற்றிட்டத்தின் கட்டுமான வேலைகள் தாமதமடைந்தன. இத்திட்டத்தினை நிறைவேற்றுகின்ற பொழுது ''சுமார் 50 ஆண்டுகளுக்கு முன்பு நான்கண்ட கனவு நனவாகி வருகின்றது'' என விமல சுரேந்திர குறிப்பிட்டார்.

இலங்கையில் மின்சார உற்பத்தி மற்றும் விநியோகத்துறையிலான உண்மை அபிவிருத்தி அரசாங்க மின்சார வேலைகளுக்கான திணைக்களம் லக்சபானா நீர் மின் நிலையத்தை 1950 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 30 ஆம் திகதி அங்குரார்ப்பணம் செய்துவைத்த போதே ஆரம்பமாகியது. இலங்கையின் மின்சாரக் கைத்தொழில் அபிவிருத்தியின் மற்றொரு மைற்கல் பாராளுமன்றம் 1950 ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 5ம் திகதி நிறைவேற்றிய 1950 இன் 19ம் இலக்க மின்சார சட்டவாக்கமாகும். இது நாட்டின் மின்வலு உற்பத்தி எடுத்துச் செல்லல், வழங்கல் மற்றும் பாவனை என்பவற்றை முறைப்படுத்துவதற்காக உருவாக்கப்பட்ட ஒரு சட்டமாகும். கிராமிய மின்மயமாக்கல் 1959 ல் ஆரம்பமாகியது. 50 கிராம் மின்மயமாக்கல் செயற்திட்டத்தின் முதல் திட்டங்கள் அவ்வாண்டில் ஆரம்பமாகியன.

உலக வங்கி இலங்கை மின்சாரசபையினை உருவாக்குவதற்கான சட்டவாக்கத்தை துரிதப்படுத்த வேண்டும். எனக் கேட்டுக் கொண்டது. இதற்கமைய 1967 இல் தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் சக்தி ஆலோசகர் ஜே. எம். கோஸ்வாமி வெளியிட்ட அறிக்கைகளின் பிரதான பரிந்துரைகளில் பின்வருவன முக்கியமானவையாகக் காணப்படுகின்றன.

1) இலங்கை தேசிய மின்சாரசபை என்ற பெயரில் சட்ட முறையான கூட்டுத்தாபனம் ஒன்றை மொன்றை உருவாக்குதல்.
2) மீளமைக்கப்பட்ட அரசாங்க மின்சார வேலைகளுக்கான திணைக்களத்தினை இலங்கை மின்சார சபைக்குள் உறிஞ்சிக் கொள்ளல்.

1969 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க இலங்கை மின்சார சபை சட்டவாக்கத்துடன் இலங்கை மின்சாரசபை 1969 யூலை மாதத்தில் ஸ்தாபிக்கப்பட்டது.

அரசாங்க மின்சார வேலைகள் திணைக்களம் அதன் அனைத்து சொத்துக்களுடனும் அவ்வாண்டு நவம்பர் மாதம் 1ம் திகதி இலங்கை மின்சாரசபைக்கு மாற்றப்பட்டது. 75 MW திறன் கொண்ட சமனல் நீர் மின் திட்டம் 1969 இல் பொல்பிட்டியாவில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. என்பது குறிப்பிடத்தக்கதாகும். அத்துடன் யாழ்ப்பாண தீப கற்பத்திற்கு 132 MW கொண்ட மின்கம்பி இணைப்பு வழங்கப்பட்டது. இதன் மூலம் மத்திய மலை நாட்டிலிருந்து வடக்கில் யாழ்ப்பாணம் வரையில் நீர்மின் வசதி அளிக்கப்பட்டது. 1970 களின் தசாப்தத்தின் போது நாட்டின் பல தொலைதூர இடங்களுக்கு மின்சாரவிநியோகம் விஸ்தரிக்கப்பட்டதுடன் இணைந்த விதத்தில் மின்சார சபையின் நடவடிக்கைகள் துரிதமாக விரிவாக்கம் பெற்றன.

உள்ளூராட்சி சபைகளின் மின் விநியோகத்தில் ஏற்பட்டுவந்த சீர்குலைவின் விளைவாக நாடெங்கிலுமான சில்லறை மின் விநியோகத்தினை மின்சாரசபை பொறுப்பேற்க வேண்டும் என 1980 இல் அமைச்சரவை முடிவு செய்தது. இருப்பினும் முழு உள்ளூராட்சி

சபைகளினது மின்விநியோகத்தினையும் உள்வாங்க கூடியளவு சக்தி இலங்கை மின்சார சபையிடம் இல்லாமையினால் 1983 இல் வரையறுக்கப்பட்ட லங்கா இலக்ட்ரிக் சிட்டி கம்பனி என்ற நிறுவனம் உருவாக்கப்பட்டது. 1995 இன் முடிவில் முழு உள்ளூராட்சி சபைகளினதும் மின் விநியோகம் இலங்கை மின்சாரசபையின் கைக்கு வந்தது.

இலங்கையின் சமூக பொருளாதார அபிவிருத்தியின் முக்கியவத்துவம் கருதியும் ஆண்டொன்றுக்கு 8.5 சதவீதத்தினால் அதிகரித்து வந்த சக்திக்கான தேவையை நிறைவு செய்து வைக்கும் பொருட்டும் 1980 களில் அரசாங்கத்தினால் மகாவலி மின்சார உற்பத்தி செயற்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. இக்கால கட்டத்திலேயே மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் கீழான பல மின்சார நிலையங்கள் நிர்மாணிக்கப்பட்டு அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டன. இவை பின்னர் மகாவலி அபிவிருத்திசபையினால் இலங்கை மின்சார சபையிடம் கையளிக்கப்பட்டன.

கடந்த 50 வருடங்களைத் திரும்பிப் பார்க்கும்போது இலங்கையின் மின்சார உற்பத்திக் கைத்தொழில் பாரியளவில் வளர்ச்சி கண்டிருப்பதை காணமுடிகின்றது. உதாரணமாக 1946 இல் 12 MW ஆக இருந்த மின்சாரத்திற்கான கேள்வி தற்போது 1500 MW ஆக அதிகரித்துள்ளது. இது இனிவரும் பத்தாண்டுகளில் வருடாந்தம் 10 % சதவீதத்தினால் அதிகரித்துச் செல்லும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## மின்சார நெருக்கடியும் அதற்கான பரிகாரங்களும்.

தேசிய மின்சார கட்டமைப்பு அதன் 50 வருட கால வரலாற்றில் மிக மோசமான நெருக்கடியை இப்பொழுது சந்தித்துக் கொண்டிருக்கின்றது. எமது மின் உற்பத்திக் கட்டமைப்பின் ஆற்றல் மின்சாரத்தின் கேள்வியிலும் பார்க்க பெருமளவுக்கு கீழே வீழ்ச்சி கண்டுள்ளது. இதற்கு மழைவீழ்ச்சி நம்பகமாக இல்லை என்பது ஒரு காரணமாகும். இது தவிர இன்றைய மின்சார நெருக்கடிக்கு 1990 ற்கும் 1996 ற்கும் இடையில் முடிவுகளை எடுக்கும் உயர்மட்டங்களில் இடம்பெற்ற விரும்பத்தகாத சில நிழ்வுகளின் விளைவாக தோன்றியுள்ளது. அதாவது முறையாக உருவாக்கப்பட்ட திட்டங்கள் புறக்கணிக்கப்பட்டமை இதற்கு முக்கிய காரணமாகின்றது.

மிக மோசமான வறண்ட காலநிலை நிலவி வந்தமையின் விளைவாக நாடு 1980 - 1981, 1983, 1987, 1992 ஆகிய வருடங்களில் மின்விநியோக நெருக்கடிகளைச் சந்தித்தது. எனினும் 1996 இல் ஏற்பட்ட மின் விநியோக நெருக்கடி, நிறுவப்பட்ட மின் உற்பத்தித் திறனின் பற்றாக்குறை, மற்றும் குறைவான மழை வீழ்ச்சி ஆகிய இரு காரணிகளாலுமே தோன்றியிருந்தது.

தற்போதைய நெருக்கடியில் நாட்டின் பொருளாதாரத்தின் மீது எடுத்துவரக்கூடிய தாக்கங்களும் அளவீடு செய்யப்படுகின்றன. இந்த துரதிஷ்டவசமான நெருக்கடி இப்பொழுது ஏற்கனவே உருவாகி இருப்பதனால் அதற்கான பரிகாரங்களும் அவற்றின் தொழில்நுட்ப பொருளாதாரத் தாக்கங்களும் முன்வைக்கப்படுகின்றன. அந்த வகையில் உற்பத்தித்திறன் நெருக்கடி மின்சாரத்துறை எதிர்நோக்கும் ஒரேயொரு நெருக்கடியாக மட்டும்

இருந்து வரவில்லை. மிதமிஞ்சிய ஊழியர் தொகுதியையும் உள்ளிட்ட செலவு கூடிய வேறுபல பிரச்சினைகளையும் இத்துறை எதிர்கொண்டு வருகின்றது. உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தில் சுமார் 18% சதவீதம் விநியோக அமைப்பில் இழக்கப்படுகின்றது. இதில் பொருளாதார ரீதியில் அனுமதிக்கத்தக்க இழப்புமட்டம் சுமார் 10 - 12 % ஆகும். சாதாரண காலத்திலும்கூட, மின் அழுத்தம் மற்றும் நம்பகத் தன்மை என்பவற்றைப் பொறுத்தவரையில் மின்விநியோகத்தின் தரம் மிகவும் தாழ்ந்த மட்டத்திலேயே இருந்துவருகின்றது. அத்துடன் அடிக்கடி மின்தடங்கல்களும் இடம்பெற்று வருகின்றன. இவை அனைத்தினதும் விளைவாக, எமது மின்சாரத்தின் விற்பனை விலைகள் கைத்தொழில் அடிப்படையில் பெருமளவுக்கு வளர்ச்சி கண்டிருக்கும் ஒருசில நாடுகளில் காணப்படும் விலைகளிலும் பார்க்க உயர்வாக இருந்து வருகின்றன. அத்துடன் முகாமை மற்றும் நிதிசார் முடிவுகள் என்பவற்றின் மீதான வெளித்தலையீடுகள் பெருகிவருவதனால் தற்போது மின்உற்பத்தித்துறையானது முகாமை நெருக்கடியொன்றினால் பீடிக்கப்பட்டுள்ளது.

அதே போன்றே, தற்போது அதாவது 2006 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் A- 9 பாதை மூடப்பட்ட பின்னர் மின்சார உற்பத்திக்குத் தேவையான சாதனங்கள், மின்சார விநியோகத்திற்கு அத்தியாவசியமான சாதங்கள் என்பனவற்றை பெறுவதில் மின்சார சபையானது பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குவதுடன் கிடைக்கின்ற மின்சாரத்தின் இயலளவினை கட்டுப்படுத்தி திரும்பவும் அதனை விநியோகம் செய்வதற்காகவே ஒவ்வொரு பிரதேசங்களிலும் குறித்த நேர அட்டவணைப்படி மின் வெட்டினை அமுல்படுத்தி மின்சாரத்தினைச் சேமித்து வழங்குகின்றது. அத்துடன் நாட்டின் அசாதாரண சூழ்நிலை காரணமாக ஊழியர்களைப் பெறுவதிலும் நெருக்கடிகளைச் சந்தித்து வருகின்றது. இதன் காரணமாக மின்சாரத்தினை சிறந்த முறையில் விநியோகிக்க முடியாது இடர்ப்பாடுகளைச் சந்தித்து வருகின்றது.

எனவே மின் நெருக்கடியைத் தீர்ப்பதற்கு மின் உற்பத்தி வசதிகளை விரிவாக்குதல் அவசியமாகின்றது. மின் உற்பத்தி விரிவாக்கல் திட்ட செயற்பாட்டினால் ஆகக் குறைந்த மட்டத்திலான நீண்ட கால செலவில் எதிர்வு கூறப்படும் மின்சாரத்துக்கான மொத்தக் கேள்வியையும் நிறைவுசெய்யும் அதாவது எந்த ஒரு ஆண்டிலும் 92.2.% ற்குக் குறைவான தேவையை அது நிறைவு செய்யும். அந்த வகையில் இலங்கை மின்சாரசபை ``WASP" மற்றும் ``SYSIM'' என்ற பெயர்களிலான திட்டமிடல் முறைகளை பிரதானமாகப் பயன்படுத்தி வருகின்றன. திட்டமிடல் மாதிரிகள், கம்யூட்டர்நிகழ்ச்சித் திட்டங்களின் வடிவில் தயாரிக்கப்பட்டு பாரியளவிலான உள்ளீட்டுத் தகவல்களும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. மின்சார சபையின் திட்டங்களை உருவாக்கும் பணியில் 35 வரையான பொறியியலாளர்கள் ஈடுபட்டுள்ளனர். இத்திட்டமிடல் தரத்தை மேம்படுத்துவதற்காக வெளிநாட்டு நிபுணர்களின் உதவியும் பெறப்படுகின்றது.

ஆக்கம்
செல்வன் முருகானந்தம் ஜான்குமார்
செல்வன் பரராஜசிங்கம் அசோதரன்
செல்வன் சாம்பசிவம் ஜீவசங்கரி

# நன்றியுரை

எமது பாடசாலையில் நீண்டகால இடைவெளிக்குப்பின் 'தமிழருவி' என்கின்ற மாணவர் சஞ்சிகை வெளிவருவதில் மலர்க்குழுவாகிய நாம் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றோம்.

நன்றி கூறுதல் என்பது தமிழர் தம் பண்பாட்டின் முக்கிய கூறாகும். அந்தவகையில் 'தமிழருவி' என்ற மாணவர் சஞ்சிகை உருவாக்கத்திற்கு காலாக இருந்த பொறுப்பாசிரியர்களுக்கு நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளோம். மேலும் இச் சஞ்சிகை உருவாக்கத்திற்குத் துணைபுரிந்த பாடசாலை நிர்வாகத்திற்கும், ஆக்கங்களைத் தந்துதவிய மாணவர்களுக்கும் நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளோம்.

இச்சஞ்சிகைக்கு வாழ்த்துரைகளை வழங்கி எங்களை ஊக்கப்படுத்திய அனைவருக்கும் நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளோம்.

மிகக்குறுகிய காலத்தில் அட்டைப்படத்தை வடிவமைத்துத் தந்த 'செல்லா வீடீயோ விஷன்' நிறுவனத்தினருக்கும், அட்டையை அழகிய வர்ணத்தில் பதிப்பித்துதவிய பண்டத்தரிப்பு J.S. பதிப்பகத்தாருக்கும், அச்சுப்பிரதியாக்கம் செய்து கோவைப்படுத்திய திரு. ச. ராஜ்குமார் அவர்களுக்கும் எங்களுடைய மனமார்ந்த நன்றிகள்.

மற்றும் பிறவழிகளில் உதவிய அனைத்து அன்புள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

- மலர்க்குழு --

யா / தொண்டைமானாறு
வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலயம்
தொண்டைமானாறு